உதயன்

சுடர்: 29 கதிர்: 253 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 21, புதன் 06.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



ஐஸ்கிறீம் குளிரூட்டியில் சிறுவர்களின் சடலங்கள் 7



ராஜீவ் வீட்டில் புலிகளின் உளவாளி 8



இலங்கைக்கு புதிய சிக்கல் 15

# ஒன்றுகூடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும்

## இலங்கை அரசிடம் கூட்டாக வலியுறுத்துகின்றன சர்வதேச நாடுகள்

கொழும்பு, ஓகஸ்ட் 6
"சமூக மற்றும் மதங்களுக்கான நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுக்கொண்டிருந்த காணாமற்போனோரின் குடும்பங்களுடன் பகிர்ந்து கொள்ளுதலும் செவிமடுத்தலும் நிகழ்வை பௌத்த மதகுருமார் குழுவொன்று குழப்பியதை கடுமையாகக் கண்டிக்கிறோம்" என்று கூட்டு அறிக்கை மூலம் கண்டித்துள்ளன பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் தூதரகங்கள்.
"இலங்கையில் சட்டம் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பன கவலையளிப்பதாகவே உள்ளன. ஒன்று கூடுவதற்கும், கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரத்தை நிலைநாட்ட இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் வடபகுதியில் இருந்து கொழும்புக்கு வந்து தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தியவர்கள் மீளவும் தமது இடங்களுக்கு சென்றபின் அச்சுறுத்தப்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. எனவே அவர்களது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
கூட்டம் நடைபெறும் இடத்துக்கு பலவந்தமாகப் பிரவேசித்த குண்டர் கூட்டமொன்று அச்சுறுத்தல் விடுத் திருந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். அந்த இடத்தில் குழுமியிருந்த அனைவரும் பாதுகாப்பாற்ற நிலைமையை உணர்ந்துள்ளனர்."- என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-சி)

## உங்கள் துயரங்களை முழு உலகும் கண்ணுற்றது



கொழும்பு, ஓக.6
'காணாமற்போனவர்களின் குடும்பத்தினர் என்ற வகையில் நீங்கள் அனுபவிக்கும் அச்சுறுத்தல்களை நான் நேரில் கண்டுகொண்டேன்" என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க பதில் பிரதித் தூதுவர் மைக்கல் ஹொனிஸ்டைன்.
சமூக - சமய நடுநிலையத்தில் நடைபெற்ற காணாமற்போனவர்களின் குடும்பத்தாருடனான சந்திப்பில் கலந்துகொண்ட அமெரிக்கத் தூதரகத்தின் பதில் பிரதித் தூதுவர் மைக்கல் ஹொனிஸ்டைன் குண்டர்களால் சந்திப்பு இடைநடுவில் குழப்பப்பட்டதையடுத்து அங்கிருந்த காணாமற்போ

22 ஆம் பக்கம் பார்க்க

## வருத்தம் தெரிவித்தார் மஹிந்த



கொழும்பு, ஓக.6
தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்தியப் பிரதமர் மோடி ஆகியோரை விமர்சித்து பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் கட்டுரை வெளியான சம்பவம் வருத்தமளிக்கின்றது. இது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன்.
- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நேற்று இடம் பெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் வெளியான கட்டுரையால் தமிழகத்தில் உணர்வுகள் தூண்டி விடப்பட்டுள்ளன. இவ்வாறான சம்பவங்கள் வருத்தமளிக்கின்றன. தமிழக முதல்வர் குறித்த விமர்சனம் தொடர்பில் விரிவாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நான் கோரியுள்ளேன் - என்று அவர் இதன் போது மேலும் தெரிவித் தார். (ற-சி)

## தபால் கட்டணங்கள் நாளை முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஓக.6
உள்நாட்டு தபால் கட்டணங்கள் நாளை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் தபால் மா அதிபர் ரோஹண அபேசிங்க.
சாதாரண தபாலுக்காக முத்திரைக் கட்டணம் 5 ரூபாவில் இருந்து 10 ரூபாவாகவும், தபாலட்டையின் விலை 8 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 20 கிராம் வியாபாரக் கடிதங்களுக்கான கட்டணம் 15 ரூபாவாகவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு கிராமுக்கும் 10 ரூபாவும் அறவிடப்படும்.
பொதிகளுக்கான தபால் கட்டணமாக 250 கிராமுக்கு 90 ரூபாவும், 500 கிராமுக்கு 150 ரூபாவும் அறவிடப்படும். பதிவுத் தபால்களுக்கான கட்டணத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. இந்தக் கட்டண உயர்வுகளுக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 31ஆம் திகதி வெளியிடப்பட்டது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-10)

## காணாமற்போனோர் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க மேலும் மூவராம்

கொழும்பு, ஓக.6
காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட மூவர் குழுவில் மேலும் மூவரைச் சேர்த்துக்கொள்வது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;
"எனக்கு இது தொடர்பில் கோரிக்கை வந்துள்ளது. ஆகவே அவ்வாறு மேலும் மூவரை நியமிப்பது தொடர்பில் தீவிரமாக ஆலோசித்து

22 ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற ஆதாரங்களை அனுப்புவதற்கு மின்னஞ்சல்

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டது

கொழும்பு, ஓக. 6
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக தகவல்களை சமர்ப்பிக்க விரும்புவோர் மின்னஞ்சல் ஊடாக அதனை பகிர்ந்து கொள்ளலாம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
இதுகுறித்த விவரங்களை ஆணையாளர் அலுவலகம் தனது இணையத் தளத்தில் பதிவேற்றியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
"இலங்கை குறித்து விசாரணை செய்யும் குழுவினர் அரச மற்றும் சிவில் சமூகத்தினரின் அறிக்கைகள் உட்பட இதுகுறித்த சகலவிவரங்களையும் ஆவணங்களையும் ஆராய்வர். பாதிக்கப்பட்டவர்களின் வாக்கு மூலங்கள், உயிர் தப்பியவர்களின் சாட்சியங்கள் மற்றும் குற்றவாளிகளின் வாக்குமூலங்கள் உட்பட அனைத்து விவரங்களும் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படும் செய்மதி புகைப்படங்கள், நம்பகத் தன்மை மிகுந்த காணொலிகள், புகைப் படங்கள் ஏனைய ஆவ

22 ஆம் பக்கம் பார்க்க

## கேபிக்கு எதிரான வழக்கு திகதியிடாது ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.6
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இலங்கையில் உள்ள குமரன் பத்மநாதனை அழைத்து விசாரிக்கக் கோரிய வழக்கின் தீர்ப்பு திகதி குறிப்பிடப்படாமல் சென்னை உயர் நீதிமன்றத்தால் நேற்று ஒத்திவைக்கப்பட்டது.
விடுதலைப் புலிகளின் முன்னாள் பொறுப்பாளராக செயற்பட்ட கே.பி. என்ற குமரன் பத்மநாதனுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் தொடர்பு உள்ளதாகவும் அதனை விசாரிக்குமாறும் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. முன்னாள் பொலிஸ் அதிகாரி மோகன் ராஜ் என்பவரே சென்னை உயர்நீதிமன்றத்தில் இது

22 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழுவுடைய பதவிக் காலம் நீடிப்பு



கொழும்பு, ஓக.6
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை

22 ஆம் பக்கம் பார்க்க

தடைகளைத் தாண்டி நிதிய நியதிச் சட்டம் நிறைவேற்றம் | பக். 03

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாது ஒழிப்பது தலையிடிக்காக தலையணையை மாற்றுவது போன்றது

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்

கொழும்பு, ஓக.6
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது என்பது தலையிடிக்காகத் தலையணையை மாற்றுவதற்கு ஒப்பானது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இந்த முறையை மாற்ற வேண்டுமானால் அதனைக் கொண்டு வந்தவர்களுடன் கலந்தே மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நேற்றுக் காலை அலரி மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை எமது அரசு கொண்டுவரவில்லை. நாட்டில் தற்போது நடைபெறும் தீய விடயங்களுக்கு நிறைவேற்று அதிகார முறையே காரணம் என்று கூறுவதில் எந்த நியாயமும் இல்லை. அப்படிக் கூறுவது தவறானது என்றே நான் கூறுவேன்."- என்றும் அவர் அந்தச் சந்திப்பின்போது குறிப்பிட்டுள்ளார்.
இந்தச் சந்திப்பின்போது கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்கள், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, அந்த நாட்டுப் பிரதமருக்கு எழுதிய கடிதங்கள் தொடர்பில் பாதுகாப்பு

22 ஆம் பக்கம் பார்க்க

CMYK

## மீனவர் தாக்கப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கையை எடுக்குக

### இந்திய மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை.ஒகஸ்ட்.6

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. மீனவர் நல பேரவைத் தலைவர் பீற்றர் ராயனால் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு தொடர்பான மனுவை விசாரணை செய்த தலைமை நீதிவான் ஶ்ரீ சஞ்சய் கிஷன் கவுல், நீதிவான் சத்யநாராயணா ஆகியோர் இது தொடர்பாக இந்திய இலங்கை அரசுகள் ராஜ்ஜிய ரீதியாகபேசி தீர்வு காண வேண்டும் என்றும் அதில் உயர்நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் தெரிவித்தனர். கச்சத்தீவு தொடர்பான வழக்கு உச்சநீதி மன்றத்தில் ஏற்கனவே நிலுவையில் உள்ளதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள் மீனவர்கள் தாக்கப்படாமல் தடுக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி வழக்கை முடித்து வைத்தனர்.

கச்சத்தீவில் மீன் பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கும் உண்டு என்று கூறி வழக்கு தொடர்ந்த மனுதாரர், அந்த பகுதியில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் தொடர்ந்து தாக்கப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தார். இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு நிரந்தர தீர்வுகாண உத்தரவிட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம் நிரந்த தீர்வு காணக் கோரி மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. (ற-14)

# ஜெயலலிதா குறித்து அவதூறுக் கட்டுரை இலங்கை தூதரை அழைத்து கண்டனம்

## அழைப்பாணையும் அனுப்பியது இந்திய மத்திய அரசு

புதுடில்லி, ஒக.6

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறித்து அவதூறாக கட்டுரை வெளியிட்டமைக்காக இலங்கை தூதரை நேரில் அழைத்து, இந்திய மத்திய அரசு கண்டனம் தெரிவித்ததோடு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும், சிறை பிடிக்கப்படுவதுமாக உள்ள தமிழக மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து தமிழக முதல்வர், பிரதமர் மோடிக்கு கடிதங்கள் எழுதி வருகிறார். அதை விமர்சித்து, இலங்கை பாதுகாப்புத்துறை இணையத்தளத்தில் அவதூறாக கட்டுரை வெளியிடப்பட்டது. இதனால் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இலங்கை அரசுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்தன. இலங்கை அரசை கண்டித்து ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. முதலமைச்சர் ஜெயலலிதாவும், இலங்கை தூதரை நேரில் அழைத்து கண்டிக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினார். அதையடுத்து, இலங்கை அரசு நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டதோடு, அந்த கட்டுரையையும் இணையத்தளத்தில் இருந்து நீக்கியது.

இந்நிலையில், இந்த பிரச்சினையை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் அ.தி.மு.க. கிளப்பியது. அதற்கு பதில் அளித்த வெளியுறவு மந்திரி சுஷ்மா சுவராஜ், மத்திய அரசு இலங்கை தூதரை அழைத்து தனது கண்டனத்தை தெரிவிக்கும் எனக் கூறினார். அதைத்தொடர்ந்து, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் புதுடில்லியில் உள்ள இலங்கை தூதர் சுதர்சன் சேனவிரத்னேயை நேரில் அழைத்தது. வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் இலங்கை விவகாரங்களை கவனிக்கும் இணைச் செயலாளர், அவதூறு கட்டுரை தொடர்பாக நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் வெளிப்படுத்திய கோபத்தையும் சுதர்சன் சேனவிரத்னேயிடம் எடுத்துக் கூறியதோடு இந்தியாவின் கண்டனத்தையும் தெரிவித்ததாக இந்திய மத்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கை தூதருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

## 5 மாதங்களின் முன்னர் உயிரிழந்த மாணவியின் உடல் தோண்டியெடுப்பு

### சாவில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதையடுத்து

மட்டக்களப்பு, ஒக.6

பாம்புக்கடிக்கு இலக்காகி கடந்த பெப்ரவரி மாதம் உயிரிழந்தார் என்று கூறப்படும் களுவாஞ்சிக்குடி மகிழூர் முனையை சேர்ந்த பல்கலைக்கழக மாணவியின் உடல், அடக்கம் செய்யப்பட்டு ஐந்து மாதங்களின் பின்னர் நேற்று மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டது.



களுவாஞ்சிகுடி சுற்றுலா, நீதிவான் நீதிமன்ற நீதிவான் அப்துல் றியாழின் உத்தரவுக்கு அமைய அவரின் முன்னிலையிலேயே உடல் தோண்டியெடுக்கப்பட்டது.

அதன்போது அம்பாறை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வி.எம்.ஓ. பெரேரா, மாணவி சார்பான வழக்கறிஞர் எஸ்.தாரணி மற்றும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

களனி பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவியான கங்காதரன் மாதுமை என்ற 22 வயது யுவதி கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி உயிரிழந்தார். இவர் பாம்புக்கடிக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று வைத்திய பரிசோதனையின்போது தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தனது மகளின் சாவில் சந்தேகம் இருப்பதாக மாதுமையின் தாயாரான கங்காதரன் திலகவதி களுவாஞ்சிக்குடி சுற்றுலா, நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதையடுத்தே மாணவியின் சடலத்தை மீண்டும் தோண்டியெடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (ற)

## மது போதையில் தனக்குத்தானே தீ மூட்டியவர் அவசர சிகிச்சையில்

வலி.வடக்கு, ஒக.6

மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் சண்டை பிடித்தவர் தனக்குத்தானே தீயிட்டுக் கொண்ட சம்பவம் நேற்றுப் பிற்பகல் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சோந்த கனகரத்தினம் யோகதாசன் (வயது-64) என்பவரே தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீயில் எரிந்துள்ளார். வீட்டில் உள்ளவர்கள் கூக்குரலிட்டதைத் தொடர்ந்து அயலவர்கள் தீயை அணைத்து அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

ஆயினும் அவருடைய நிலைமை கவலைக்கிடமானதாக காணப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். தெல்லிப்பழை பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-86)

## வெளிநாட்டு பிரசைகளுக்கு மறியல்

கொழும்பு, ஒக.6

நுழைவிசைவு இல்லாமல் கடவுச்சீட்டுடன் மாத்திரம் தங்கியிருந்த நிலையில் தாய்வான் மற்றும் பலஸ்தீன பிரசைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மன்றில் முற்படுத்தியபோது, எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ற)

## அளுத்கம சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகள் எதுவுமில்லை

### குற்றஞ்சாட்டுகின்றார் அசாத் சாலி

கொழும்பு, ஒக.6

அளுத்கம சம்பவம் தொடர்பில் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தேசிய சமாதான முன்னணியின் தலைவர் அசாத் சாலி.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

"அளுத்கம சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக் குழுவில் இன்று (நேற்று) முறைப்பாடு செய்தேன். அளுத்கம சம்பவத்துடன் மேலும் நான்கு சம்பவங்கள் தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளை பதிவு செய்வது குறித்த தேர்தல் ஆணையாளரின் நிலைப்பாடு, பொலிஸார் தம்மை கண்காணித்தல், துப்பாக்கிக்கு அனுமதிப் பத்திரம் வழங்காமை போன்றன தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடு செய்வதன் மூலம் சட்டத்தின் உதவியை பெற்றுக் கொள்ள முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நோக்கங்களுக்கு அப்பால் ராஜதந்திரிகளின் செயற்பாடு

### குற்றஞ்சாட்டுகின்றது இலங்கை

கொழும்பு, ஒக.6

தமது நோக்கத்துக்கு அப்பால் ராஜதந்திரிகள் சிலர் நடந்து கொள்கின்றனர் என்று இலங்கை அரசு குற்றஞ்சுமத்தியுள்ளது.

சில பிராந்தியம் மற்றும் சமூகத்தினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகளில் பங்கேற்பதன் மூலம், இந்த செயற்பாடுகளை ராஜதந்திரிகள் மேற்கொள்கின்றனர் என்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

உணர்வுபூர்வமான நிகழ்வுகளில் பங்கேற்கும் போது ராஜதந்திரிகள் மிகவும் கவனமாக நடந்துக்கொள்ள வேண்டும் என்றுவெளியுறவு அமைச்சு கோரியுள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் காணாமற்போனோரின் உறவினர்களின் சந்திப்பு ஒன்று நடைபெற்ற போது, அமெரிக்க அதிகாரிகள் பங்கேற்றமை தொடர்பிலேயே வெளியுறவு அமைச்சு இதனை தெரிவித்துள்ளது. (ற)




வேலை வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

சொந்தமாக மோட்டார் சைக்கிளும் சாரதி அனுமதிப்பத்திரமும் இருத்தல் வேண்டும்.

உங்கள் சுயவிவரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கோ / மின் அஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்: 5005

மே/பா. உதயன், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Email: jaffnavacancy@gmail.com

hp நளினின் hp Authorized Dealer

* Condition Apply

41,500/= இற்கு

புதிய வரவு

முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

எல்லோருக்கும் மடிக் கணனி

இன் புதிய தலைமுறை மடிக் கணனி

HP 14 Notebook PC

Dual Core/500GB/2GB/14"/DVD RW/ BT/WIFI/CAM/CARD READER

Lap - 1 year parts Warranty, 2 years service free

T.P.: 021 222 1121, 021 224 2222, 0777 66 7975

No. 195/4, Parameswara Junction, Palaly Road, Jaffna.

2014

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு

வெற்றிச்சிகரம்

தனிப்பிரதி விலை 20/-

மாதிரி வினாத்தாள்கள்

எதிர்பார்க்கை வினாக்களுடன்

இறுதி 15-20 வரையுள்ள பிரதிகள்

வெளியீடு யுனிலங்காஸ்- 077 6258778

ஆக்கம் : S.கணேசலிங்கம் A.D.E. திருகோணமலை

(c/15339)

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

சீனாவில் MBBS பட்டப்படிப்பு

(ஆங்கில மொழிமூலம்)





சீனாவிலுள்ள டாலியன் மருத்துவ பல்கலைக்கழகத்தில் (Dalian Medical University) புரட்டாதி 2014 இல் ஆரம்பமாகவுள்ள கற்கை நெறிக்கான பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

அடிப்படைத் தகைமை:

GCE A/L Biology Stream இல் ஆகக்குறைந்தது 2C. S பெற்றிருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு: 076 56 800 15

E-mail: dalianedu@gmail.com

(அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

(50033)(10)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2047 ஆடி 21 புதன்கிழமை (06.08.2014) **UTHAYAN - A lively National Tamil Daily** கதிர் 253

# ஆளுநரின் தடையைப் புறக்கணித்து நிதிய நியதிச் சட்டம் நிறைவேற்றம்

## வடக்கு மாகாண சபையில் நேற்று

யாழ்ப்பாணம், ஒக. 06

**வடக்கு மாகாண ஆளுநரின் தடையைப் புறக்கணித்து, எதிர்கட்சியின் எதிர்ப்பு இன்றி வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் வடக்கு மாகாண சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. இந்த நிதியத்தினூடாக உள்நாட்டு – வெளிநாட்டு நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்கள் பெறப்பட்டு, வடக்கில் போரினால் மற்றும் இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.**

வடக்கு மாகாண சபையின் 13 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட நிதிய நியதிச் சட்டங்கள் தொடர்பிலான விவாதங்கள் இடம்பெற்றன. முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டத்துக்கு, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அங்கீகாரம் வழங்க மறுத்திருந்தார்.

மாகாண நிதியம் மற்றும் அவசரகால நிதியம் தவிர்ந்த ஏனைய நிதியங்களை உருவாக்க முடியாது என்று அதற்கு ஆளுநர் விளக்கம் தெரிவித்திருந்தார். இருப்பினும் ஆளுநரினால் விதிக்கப்பட்ட தடைகளையும் மீறி சபையின் நேற்றைய அமர்வில் முதலமைச்சர் நிதியம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாகாண நிதியம் மற்றும் அவசரகால நிதியம்தான் உருவாக்கப்படலாம் என்றால், ஆளுநர் நிதியம் எவ்வாறு செயற்படுகின்றது என்று கேள்வியெழுப்பிய வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை, வடமத்திய மாகாண சபை, ஊவா மாகாண சபை, சப்பிரகமுவ மாகாண சபை ஆகியவற்றிலும் முதலமைச்சர் நிதியம் உண்டு எனவும், முதலமைச்சர் நிதியத்துக்கான அங்கீகாரம் ஆளுநரிடம் கேட்கப்படத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

மாகாணசபைகள் கட்டளைச் சட்டத்தின் 24(1) பிரிவின் கீழ் நிதி தொடர்பிலான நியதிச் சட்டங்களுக்கு ஆளுநரின் அனுமதி பெறப்பட வேண்டுமாயினும், வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம் மாகாண நிதியைப் பெற்றுக் கொள்ளாததால், அதற்கு ஆளுநரின் அனுமதி பெறப்படத் தேவையில்லை என்று முதலமைச்சர் சபையில் விளக்கம் கொடுத்தார்.

இதனையடுத்து முதலமைச்சர் நிதியத்தின் மீதான

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இரு நிதிய நியதிச் சட்டங்கள் நேற்று ஏகமனதாக நிறைவேறின

### வடக்கு மாகாண சபையில்

யாழ்ப்பாணம், ஒக. 6

நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் என்பன ஏகமனதாக வடக்கு மாகாண சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு, நியதிச் சட்டங்கள் தொடர்பில் விவாதிப்பதற்காக கூட்டப்பட்டிருந்தது. அமர்வில் முதலாவதாக நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நியதிச் சட்டம் தொடர்பில் ஆளுநரினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் குழுநிலை விவாதத்தில் ஆராயப்பட்டது.

இதன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா மாத்திரம் நிதிய நியதிச் சட்டத்தில் சொல்லப்பட்ட முன்னுக்குப் பின் முரணான விடயங்கள் மற்றும் தெளிவில்லாத விடயங்கள், சட்ட ஏற்பாடுடன் முரண்படும் விடயங்கள் தொடர்பில் மிக நீண்ட விவாதத்தை முன்வைத்தார். இவற்றில் பெரும்பான்மையான திருத்தங்களை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இதன் பின்னர் நிதி நியதிச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு ஆளுநர் எந்தத் திருத்தங்களும் முன்வைக்காமையினால், அது அவ்வாறே சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. குழு நிலை விவாதத்தில் எதிர்கட்சித் தலைவரும் எந்தத் திருத்தங்களும் முன்வைக்காமையினால் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டமும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ற-5)

## செயலாளர்கள் வருவதற்கு தவறின் இனி ஒழுக்காற்று நடவடிக்கையே

### வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 06

வடக்கு மாகாண சபையின் அமர்வுகளில் செயலாளர்கள் பங்கெடுக்கத் தவறினால், அவர்களுக்கு எதிராக மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமையின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், இதனை உடனடியாக சகல செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றறிக்கையினூடாக அனுப்பி வைக்குமாறும் பணித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், ஆளுங்கட்சி உறுப்பினர்களால் சபை ஒழுங்கு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவைத் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, ஆளுங்கட்சி உறுப்பினர் சயந்தன், நிதி தொடர்பிலான நியதிச் சட்டங்களில் திருத்தம் செய்யப்படுகின்றது. இந்தத் திருத்தங்களைச் செய்வது யார் ? இந்தத் திருத்தங்களை கவனத்தில் கொள்ள வேண்டியது, வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரே (நிதி). ஆனால் அவர் உட்பட எந்தவொரு செயலாளர்களும் சபைக்கு வரவில்லை.

பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் எங்களை அவமதிக்கின்றனர். ஆளுநர் அழைத்தால் உடனே அவரது காலடியில் இருக்கும் அவர்கள், இங்கு முக்கியமான விடயம் ஆராயப்படும் போது பங்கெடுக்கவில்லை. இவ்வாறு இதனைத் தொடர்ந்து விட முடியாது. இதற்கு ஓர் தீர்வு எட்டப்பட வேண்டும். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதனை ஏனைய ஆளுங்கட்சி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கமலுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக.6

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் றெக்ஷ்யனின் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் அமைப்பாளர் கமல் உள்ளிட்ட மூவருக்கும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற

(22 ஆம் பக்கம் பார்க்க)

## காலதாமதம் ஏற்படுத்துவதற்காகவே திருத்தம் முன்வைக்கிறார் ஆளுநர்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 06

வடக்கு மாகாண சபையின் நிதிய நியதிச் சட்டங்கள் தொடர்பில் ஆளுநரினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் உப்புச் சப்பில்லாதவை. நியதிச் சட்டங் கள் நிறைவேற்றப்பட்டு நடை முறைப்படுத்துவதை மேலும் கால தாமதப்படுத்துவதற்காகவே அவை சமர்ப்பிக்கப்பட் டுள்ளன - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், நியதிச் சட்டங்களைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநரின் பரிந்துரைகளுடன்நாம்உடன்படுகின்றோம் என்று அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. கால வீணடிப்பின்றி நியதிச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதில் சொல்லப்பட்ட திருத்தங்கள் முக்கியமானவை அல்ல என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாம் மூன்று நியதிச்சட்ட வரைவுகளை விவாதத்துக்காகச் சமர்ப்பிக்க முன் ஆளுநருக்கு அனுப்பினோம். எந்த ஒரு நிதி சம்பந்தப்பட்ட நியதிச் சட்டமும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 24(1) இன் ஏற்பாடுகளின் படி மாகாண ஆளுநரின் பரிந்துரையுடனேயே சபையில் விவாதத்துக்கு சமர்ப்பிக்கப்படலாம். அவற்றுள் ஒன்றை அவர் பரிந்துரை செய்துள்ளார். மற்றொன்றை நிராகரித்துள்ளார். மூன்றாவதை திருத்துமாறு கூறியுள்ளார்.

பரிந்துரை செய்த நியதிச் சட்டம் தான் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம். அதனை அங்கீகரிப்பதில் இந்த சபைக்கு எந்தவிதப் பிரச்சினையும் இருக்காது என்று நம்புகின்றேன். ஆனால் தாய்ச் சட்டமான நிதி நியதிச்சட்டத்தை அங்கீகரிக்காமல் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வர முடியாது.

நிதி நியதிச்சட்டத்தைப் பொறுத்தவரை அதன் வரைவானது கூடுமானவரை 2008 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கிழக்கு மாகாணசபை நிதி நியதிச்சட்டத்தை அடியொற்றியே தயாரிக்கப்பட்டிருந்தது என்று சபைத் தவிசாளர் அவர்கள் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். எனினும் ஆளுநரின் செயலாளர் ஆளுநரின் சில அவதானங்களை எடுத்தியம்பியுள்ளார்.

எமது நிதி நியதிச் சட்டத்தின் தலைப்பில் பின்வருமாறு குறிப்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டுக்குள் புகுந்து தாக்கிய 7 பேர் நள்ளிரவில் கைது

யாழ்ப்பாணம், ஒக.6

உடுவில் பகுதியில் நடத்த கொள்ளைகள் உட்பட பல்வேறு கொள்ளை, திருட்டு மற்றும் வீடுபுகுந்து தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழையில் சில நாள்களுக்கு முன்னர் வீடு புகுந்து தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டு தொடர்பிலேயே அவர்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டனர் என்றும் - சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அவர்களை சுன்னாகம் பொலிஸார் கைது செய்து தெல்லிப் பழைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட அனைவரும் உடுவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் தற்போது பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

## நீண்ட நேரம் நடைபெற்ற நேற்றைய அமர்வு

யாழ்ப்பாணம், ஒக.6

வடக்குமாகாணசபைஇயங்க ஆரம்பிக்கப்பட்டு 9 மாதங்களில் முதன்முறையாக நேற்றைய தினமே சபை அமர்வு அதிக நேரம் நடைபெற்றது. இரவு 6.50 மணி வரையில் சபை அமர்வுகள் நேற்று இடம் பெற்றன.

வடக்கு மாகாணசபையின் 13 ஆவது அமர்வு, கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது. நிதிய நியதிச் சட்டங்கள் தொடர்பிலான விவாதம் இடம்பெற்றமையினால் சபை அமர்வு நீண்ட நேரம் இடம்பெற்றது.

இறுதியில் இரவு 6.50 மணி யளவிலேயே சபை அமர்வு நிறைவுக்கு வந்தது. இதற்கு முன்னர் கடந்த வருடம் டிசெம் பர் மாதம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது மாலை 5.20 மணி வரையில் அமர்வு நடந்ததே, இதுவரை நீண்ட நேரம் நடந்த அமர்வாகப் பதிவாகியிருந்தது. (ற-5)

## மரண அறிவித்தல்



### கந்தசாமி ஜெகநாதன் (நடேசு)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தசாமி ஜெகநாதன் (நடேசு) 03.08.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசிதம்பரம் மற்றும் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயமதி, இந்துமதி (UK), சதீஸ்குமார் (Canada), மதிவதனி, ரேணுகா மற்றும் மேனகா ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேந்திரன் (இந்திரா கபே), நந்தகுமார் (UK), கலைச்செல்வி (Canada), சந்திரகுமார் (மருதம்), கிருஷ்ணராஜா, இராகவன் (France) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.

(50605)
(12.3.6)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் (ஆசாரி)



காளிகோயிலடி, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (05.08.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகபூரணத்தின் பாசமிகு கணவரும், சுசிலா தேவி, லலிதாதேவி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் விஜயகுமாரன் (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, இராசம்மா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், திருநாவுக்கரசு (அரசு மரத் தொழிற்சாலை), சத்தி வடிவேல் (அம்பாள் மரத் தொழிற்சாலை), சண்முகவடிவேல் (வெல்டிங்), சுபேஜினி (நீர்வேலி) ஆகியோரின் மாமனும், கலைச்செல்வி (ஆசிரியர், யா/பாலாவோடை இ.த.க.பா), கலைப் பிரியா, கலைவதனா (பிரான்ஸ்), மயூரன் (மயூவர்ண ஒளி), குமரன், சர்மிளா (ஆசிரியர், கிளி/புன்னை நீராவி அ.த.க.பா.), கண்ணன், ஜெசிந்தன் (G.A.Q), ரம்மியா (வவுனியா), சுபிந்தன் (சப்பிரகமுவ பல் கலைக்கழகம், சேவயறிங் 4ஆம் வருடம்), சுகந்தன், சயந்தன் (G.A.Q), சோபிதா (மருத்துவ பீடம்), ராகவி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ராகவன் (யா/இந்துக் கல்லூரி), ராதுஜன் (யா/புனித ஜோன் பொஸ்கோ), ராகுல் ஆகியோரின் பாசமிகு பேரனும், அபிராம் (யா/சுப்பிரமணிய வித்தியாசாலை), பவிசா, அபிராமி, சாரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2014) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, களபூமி, காரைநகர்.

(50614)
(10.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



ரூலிங்ஸ் (வரையறுக்கப்பட்ட) தனியார் நிறுவனத்தின் முன்னாள் தொழில்நிலைப் பணிப்பாளரும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கைச் சேர்ந்த வருமான தம்பி முத்து பரமானந்தம் கடந்த ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதியன்று யாழ்.மாவட்ட நீதிபதி அ.அ. ஆனந்தராசா முன்னிலையில் யாழ்.மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் பல பொது நிறுவனங்களிலும் பங்கேற்று சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞ)

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசா ஜெயமணி அன்ரனிப்பிள்ளையோகராஜா



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்துவந்தவருமான **திருமதி திரேசா ஜெயமணி** அன்ரனிப்பிள்ளை யோகராஜா 02.08.2014 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோ குறுஸ் - றோசலின் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மேரி அன்னம்மா - பர்நாந்து தம்பதியரின் மருமகளும், அன்ரனிப்பிள்ளை யோகராஜாவின் அன்பு மனைவியும் அவலினோ (சுவிஸ்), றஞ்சித் (கனடா), சுவீற்றி (இந்தியா), ஜொய்சி (சுவிஸ்), பெனிற்றா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சாந்தி (சுவிஸ்), விஜி (கனடா), ஜெயக் குமார் (இந்தியா), ராஜா (சுவிஸ்), ஆன்செல்ம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கெல்வின், லெனின், ராகவி, கரிணி, ஜரிணி, ஜெவிஸ்ரன், அனஸ்ரின், வதிசா, டனிற்சா, ஏஞ்சல், ஆரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் இன்று (06.08.2014) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: அன்னாரின் இரங்கல் திருப்பலி (08.08.2014) வெள்ளிக்கிழமை நாவற்குழி புனித அந்தோனியார் தேவலாயத்தில் முற்பகல் 11 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் கலந்துகொள்ளுமாறு உங்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

கேரதீவுறோட்,
நாவற்குழி,
(பாடசாலைக்கு அருகில்)

(50610)(45.3.6)

தகவல்:
மகள் : ஜொய்சி
075 076 0375
077 491 1355

# நான்காம் வருட நினைவஞ்சலி

அமரர்

## வல்லிபுரம் கணேசலிங்கம்

(முன்னாள் உரிமையாளர்–எரிக்கணேஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்)



அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் - அப்பா
உங்கள் மெய்யைவிட்டு உயிர் பிரிந்து
இன்று நான்கு ஆண்டுகள் ஆனதப்பா - நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா
எங்கள் நெஞ்சினில் உங்கள் நினைவுகள்
நிதம்நிதம் வந்து எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது
உங்களுடன் வாழ்ந்தகால நினைவுகள்
என்றும் எங்கள் கண்களில் கண்ணீரை சொரிய வைக்கிறது
உங்கள் பொன் மொழியும் புன்சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா!
நாங்கள் கதிகலங்கித் தேடுகின்றோம் அப்பா!
காணுகின்றோம் கண்ணாடிக்குள் நிழற்படமாய் அப்பா!
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்.
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து
வாழ்கின்றோம் அப்பா!

மண்ணில் 15.12.1952
விண்ணில் 21.07.2010

திதி : ஆடி மாதம் வளர்பிறை ஏகாதசி
(06.08.2014)

மனைவி, பிள்ளைகள்.
பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

(C/15341) (7.6.3)

# பெருமாள் கோயிலில் இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஓக.6
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும் வரலஷ்மி நோன்பு தினத்தை முன்னிட்டு விசேட இசைக்கச்சேரி அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிக்கு அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பாட்டு - செல்வி சிவதர்ஷிகா சிவராஜா, மிருதங்கம்- சி.துரைராசா, வயலின்- ப.சியாம்கிருஷ்ணா, தபேலா- எஸ்.அகல்யன். (ஒ)




சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம்
ஆறாம் திருவிழா - 2014

ஆறாறு தத்துவங்கள் அத்தனையும் கடந்த பேறு அருளும்
ஆறாதாரங்களின் மூலாதாரத்தில் உறையும் மூத்த பிரணவத்தான்
ஆறாத வினை வாழ்வின் தீராத நோயினால் திகைக்கும் அடியார்க்கு
ஆறாம் அது விழாத்தினத்தில் திடமான பேறுதந்தான் என்றும் தித்தித்திடவே.

ஆக்கம்: சங்கை - சிவம்

சிறப்புற வாழ்த்துவோர்:
அமரர் கஜேந்திரன் (நாமணன்) நினைவாக
கதிரவேலு குடும்பம். ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
(4/15139)(12-6-3)




நகுலேஸ்வரம்
அருள்மிகு நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர்
ஆலய வரலக்ஷ்மி விரத விஞ்ஞாபனம்

சிவனேயச் செல்வர்களே!
அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மியின் விரதமாக வரலக்ஷ்மி விரதம் கொண்டாடப்படுகின்றது. நிகழும் ஆடிமாதம் 23ஆம் நாள் (08.08.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணி தொடக்கம் ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி ஆலயத்தில் முன்னோர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ மகாலக்ஷ்மிக்கு விசேட அபிஷேக கோமங்கள் நடைபெற்று அலங்காரப் பூஜைகளும் இடம்பெற்று அம்பாள் திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.
எல்லா அடியார்களுக்கும் சகல செல்வங்களும் கிடைக்க வேண்டி ஜோதி பூஜை (திருவிளக்கு பூஜை) இடம்பெறும்.
நடைபெறும் அபிஷேக பூஜையில் கலந்துகொண்டு நோன்பு (நூல்) எடுக்கும் அடியார்கள் முன்கூட்டியே பதிவுசெய்யும் வண்ணம் வேண்டி நிற்கின்றோம்.
வழிபாட்டில் பங்குபற்றும் அடியார்கள் தயிர், பால், நெய், தேன், சந்தனம், குங்குமம், மஞ்சள்மா, அர்ச்சனைப் பொருள்கள், குத்துவிளக்கு, வாழை இலை போன்ற தேவையான பொருள்களை எடுத்து வரவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
021 790 0470
(வழமைபோல் யாவும் நடைபெறும்)

ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்
நகுலேஸ்வர தேவஸ்தானம்
நகுலேஸ்வரம் - கீரிமலை.
(50601)(7.6.3)

வாடகைக்குத் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் நிறுவனத்துக்கு
டிமோ பட்டா (வடி)
வாகனம் வாடகைக்குத் தேவை.
மாதாந்த வாடகை குறித்து தொடர்புகொள்ளவும்.
சுஜித் என்ரபிறைசஸ்
பருத்தித்துறை வீதி,
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.021227 0586
(சி/15335) (45.6.3)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
வெற்றிடம் - தையல் ஆசிரியர்

எமது இல்லப் பிள்ளைகளுக்குத் தையல் கற்பதற்குத் தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தகைமை:
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையலில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ், பூவேலை, பின்னல் ஆகியவற்றில் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும். சிறுவர்களுக்கான சகலவித ஆடைகளும் தைப்பதோடு பகுதிநேர அடிப்படையில் தையல் வகுப்பு எடுக்க வேண்டும்.
வயதெல்லை: 25 - 50
ஊதியம்: ஒப்பந்த அடிப்படையில் பேசி நிர்ணயிக்கப்படும்.
கல்வி: தொழிற்றகைமைச் சான்றிதழ் பிரதிகள், இரு நற்சான்றிதழ்களுடன்
விண்ணப்பம் கிடைக்க வேண்டிய கடைசி நாள் 15.08.2014

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி/15354)(12.3.6)
தி.செல்வமனோகரன்,
செயலாளர்.

பணிநிலை வெற்றிடம்

யாழ். நகரில் இயங்கும் பிரபல
தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
கணக்குப் பதிவாளர்
(பெண்) க.பொ.த. உயர்தரத்தில்
கணக்கியல் கற்றவர் தேவை.
சுயவிபரங்களை தொலைபேசி இலக்கத்துடன்
அனுப்பிவைக்கவும்.
தொடர்புக்கு:
Kanthasamy ni malan @ Gmail.com
(50645) (45.6.3)


# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக.6
நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் உற்சவ காலத்தில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-
'கவின்தரு கந்தபுராணம்' என்ற தலைப்பில் சைவப்புலவர் செ.பாலச்சந்திரனின் சிறப்புச் சொற்பொழிவும், அரியாலை துரவடிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, ஏழாலை ஆத்ம ஜோதி அறநெறிப் பாடசாலை, அரியாலை ஸ்ரீஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, மயிலணி சிவன் அறநெறிப் பாடசாலை, சுன்னாகம் சொர்ணவரத காளி அம்பாள் அறநெறிப் பாடசாலை மற்றும் சுன்னாகம் கதிரமலைச்சிவன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-ரி)

◆◆◆

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு-
உ.இராதாகிருஷ்ணனின் மாணவர்கள் வழங்கும் வயலின் கச்சேரி இடம் பெறும். வயலின்- செல்வி இ.பிரசாந்தினி, செல்வி த.எழினி, மிருதங்கம்-எஸ்.துரைராசா.
தொடர்ந்து பாடல்-திருமதி ஜெயபாரதி, திருமதி ஜெயகௌரி, வயலின்- ஏ.ஜெயராமன், மிருதங்கம்- கே.கஜன்- முகர்சிங்-எஸ்.செந்தூரன் ஆகியோர் பங்குபெறும் இசையரங்கமும் இடம் பெறவுள்ளது. (ஒ-ரி)

# வாழும் கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.6
பூஜ்ய ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜியினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'வாழும் கலைப் பயிற்சி' நெறி கலட்டி அம்மன் கோயில் அருகில் - 254, பிறவுண் வீதியிலுள்ள வாழும் கலை நிறுவனத்தில் நாளை வியாழன் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறும் என்றும் ஆர்வமுடையோர் கலந்து பயன் பெறலாம் என்றும் வாழும் கலை அமைப்பு அறிவித்துள்ளது. (ஒ)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டத்தை கூட்டுமாறு கோரிக்கை


வலி.தென் மேற்கு, ஓக.6
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் பற்றி ஆராய்வதற்காக விசேட கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதேச சபையின் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் தவி சாளரைக் கோரியுள்ளனர்.
குளவித் தொல்லையிலிருந்து மாணவர்கள் உட்பட வழிப்போக்கர்களைக் காப்பாற்றுதல், பண்டத்தரிப்பு பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம், மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் உட்பட பல முக்கிய விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதால் விசேட கூட்டத்தைக் கூட்டு மாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆறு உறுப்பினர்கள் இணைந்து தவிசாளருக்கு அனுப்பி வைத்துள்ளகடிதத்தில் தெரிவித்துள்ளனர். (ஒ-15)

# செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## முழு நிலா நாள் கலை நிகழ்வுகள்

தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலை நிகழ்வுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொள்வர். மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் அறிஞர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும். (வ-9)



ஐந்தாம் நாள் திருவிழா

## 'கந்தனின் அருளொளி அள்ளி வழங்கிடும் நல்லைத் திருத்தலமே'

கந்தனின் அருளொளி அள்ளி வழங்கிடும்
நல்லைத் திருத்தலமே
சந்ததம் கீதத் திருப்புகழ் பாடி சிந்தை
மகிழ்வது நல்லை நகரினிலே
சிங்கார மயிலேறி சிங்கார வேலவன்
வலம் வருவது நல்லையிலே
தேரடிச் சித்தர்கள் போற்றிய நல்லையில்
வந்தொளி தந்தவனே
தமிழருக்கோர் தீர்வு கிடைத்திட என்றுமே
கந்தனைப் பணிந்திடுவோம்

*தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்*

## சொல்லற்கரிய சுகம்தனைத் தருவான்

நல்லதொரு ஊரில் வந்தே யமர்ந்த
நல்லைக் கந்தா!

வல்வினை தீர்க்கும் வண்ண மயிலோன்
சொல்வன்மை வழங்கும் சொர்ணக் குகனார்
அல்லல் போக்கி ஆற்றல் வழங்கும்
வள்ளல் அவன்தான் ஆறுமுகத்தான்

எல்லாத் துன்பமும் எடுத்தியம்புவோம்
இல்லம் தோறும் இடர்தனைக் களைவான்
நல்லிதயங் கொண்டு நாடுவோம் அவனை
சொல்லற்கரிய சுகம்தனைத் தருவான்

*அரியாலையூர் செ.செல்வதாசன்*

## வெற்றிவேலனே தஞ்சம்

பஞ்சம் பசி பட்டினி வந்த போதும்
துப்பாக்கிப் படை வந்த போதும்
அஞ்சினோமோ நாங்கள்
பன்னாட்டுப் படை வந்த போதும்
உள்நாட்டுப் படை வந்த போதும்
வெற்றிவேலன் உன் வேலையே தஞ்சமடைந்தோம்
வந்தபடையெல்லாம் வெருண்டோடினவே
எஞ்சியிருக்கும் வஞ்சப்படையையும்
உன் கூரிய வேல் துரத்திடுமே

*செல்வி வைஷ்ணவி சண்முகநாதன்*





FRENCH LANGUAGE CENTER
இல.40, பலாலி வீதி (ஆரிய குளம்), யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 320 2973, 077 9789456

# சட்ட விதிகளுக்கு அனுமதி கிடைக்காததால் சேமலாப நிதிக் கொடுப்பனவில் தாமதம்

கொழும்பு,ஓக.6

ஊழியர் சேமலாப நிதியத்தின் 30 வீதமான தொகையை உறுப்பினரொருவர் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன்னர் பெற்றுக் கொள்ளும் செயற்றிட்டத்துக்கு நாடாளுமன்றத் தின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லையென தொழில் திணைக்களத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரேரணை தொழில் அமைச்சர் காமினி லொக்குகேயினால் 2012 ஆம் ஆண் டில் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதற்கமைய இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகத் தேவைப்படும் சட்ட விதிகள் தொழில் அமைச்சினால் தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஓராண்டு காலம் கடந்து சென்றுள்ள போதிலும் இன்று வரையிலும் அந்த சட்டவிதிகள் தொடர்பான அனுமதி கிடைக்கவில்லை.

இதனால் அதை நடைமுறைப்படுத்த இயலாதிருப்பதாகத் தொழில் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித் துள்ளார்.

அந்த சட்டவிதிகள் தொடர்பான அனுமதி கிடைத்து வர்த்தமானி அறிவிப்பு வெளியான பின்னர் உடனடியாகவே அந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு தொழில் அமைச்சு தயாராக இருப்பதாகவும் இந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (க-22)

# 250 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது




கொழும்பு,ஓக.6


கடந்த இரு நாள்களில் தெஹிவளை, மாளிகாவத்தை உட்பட கொழும்பின் அயல் பிரதேசங்களில்பொலிஸ்போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 22 லட்சத்து 59 ஆயிரம் ரூபா பெறுமதியான 250 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதுடன், ஆறு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு பாணந்துறை வலான பொலிஸார் கொழும்பு டார்லி வீதியில் தனியார் வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்த ஓட்டோவொன்றிலிருந்தும், கொழும்பு வூல் பெண்டால் வீதியிலிருந்தும் ஹெரோயினுடன் மூன்று சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தெஹிவளை, பெரகும்பா பிளேஸ், நெதிமால பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது வேறு மூவர் கைது செய்யப்பட்டனர். (ஓ)

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா (சிறி)**
(ஓய்வுநிலை ஊழியர்-மஸ்கன் சிற் கொம்பனி)



தோற்றம் 09.07.1956 — மறைவு 07.07.2014

கடந்த 07.07.2014 திங்கட்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (06.08.2014) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றிகள்.

பலாலி வீதி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

**மனைவி, பிள்ளைகள்.**

(C/15340)(10.6.3)

# வெலிக்கடை சிறைக் கைதி வைத்திருந்த ரூ.95,000 மீட்பு

கொழும்பு,ஓக.6

வெலிக்கடைச் சிறைச்சாலையின் பல்லிய வர்ட்டு சிறைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவரிடமிருந்து 95 ஆயிரம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது. 5000 ரூபா பெறுமதி யான 19 நோட்டுக் களை சிறைச்சாலை அதிகாரிகள் அவரிடமிருந்து மீட்டுள்ளனர்.

கொலைக் குற்றத்துக்காக பத்தாண்டு சிறைத் தண்டனை அனுபவித்து வரும் குற்றவாளி ஒருவரிடம் இருந்தே இந்தப் பணம் மீட்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கைதிக்கு எவ்வாறு பணம் கிடைத்தது, என்ன நோக்கத்துக்காக பணம் வைத்திருந்தார் என்பது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஓ)

## வேலையாள்கள் தேவை

கச்சாய் வீதி, சாவகச்சேரியில் கோழிப் பண்ணை, வீட்டுத்தோட்டம் பராமரிப்பதற்கு வேலையாள்கள் தேவை. தங்குமிடம், சாப்பாடு இலவசம். 35-50 வயதுக்குட்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது

தொடர்பு: 076 639 7664
077 465 0244

(43697)(45.6.3)

## மரண அறிவித்தல்



**திருமதி ஜெகதீஸ்வரி (கலா) நகுலேஸ்வரன்**

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி நகுலேஸ்வரன் நேற்று (05.08.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-தவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சொர்க்கநாதன் நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும், சுபாசினி, லோஜன், ராஜன், உஷாயினி, சுயாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், கண்ணன், மாலா, காந்தன், கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2014) புதன்கிழமை மு.ப 11.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் ஒஸ்கா லேன் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுல வீதி, உரும்பிராய் கிழக்கு.

தகவல்: **பிள்ளைகள்.**

(50611)(10.6.3)


## Join Sri Lanka's #1 ESOFT

Shaping Lives, Creating Futures.

**Vacancies @ ESOFT**

Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people

Positions are available in Jaffna Campus & Kilinochchi

### Lecturers

- Areas of expertise include Networking, Software Engineering, Web Engineering, Programming with JAVA/C#/ASP.NET & DBMS knowledge, Mathematics, Computer Science etc..
- Working week will be 5 and a Half days including week end
- Experience would be an added advantage

### Marketing Executive

- Result oriented individual with strong communication skills
- Willing to travel and meet clients
- Identify potential markets to promote company products
- Implementing, engage and monitoring promotional activities for the branch
- Assist to achieve branch monthly targets

### Student Counselors

We are looking for goal oriented, energetic young ladies to work at ESOFT front office. You will be responsible for handling enquires from customers including students and parents and guiding them in selecting the correct acdemic or professional study programme that matches their requirement

You will be provided with the necessary training about the programmes that we offer. Basic computer literacy is expected and we will also train you to use our enquiry and registration systems

Work time will be according to a duty roster consisting of a five and a half day working week including the weekend, which is our busiest time.

### How to Apply

Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

**ESOFT METRO CAMPUS**
137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142, Hotline: 077 309 9 308
Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk



## 15.08.2014 உதயனில்.....

திருமணத் திருநாளுடன் தொடர்புடைய

- திருமண மண்டபங்கள்
- திருமண அழைப்பிதழ் காட்சியறைகள்
- நகையகங்கள்
- வீடியோ அன்ட் போட்டோ ஸ்தாபனங்கள்
- அலங்கரிப்பு நிலையங்கள்
- புடைவையகங்கள்

இன்னும் பல விவரங்கள் அடங்கிய

**மாங்கல்யம் சிறப்பிதழை**

எதிர்பாருங்கள்.

உங்கள் விளம்பரங்களும், இச்சிறப்பிதழில் இடம்பெற வேண்டுமா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

021 567 6700, 078 284 5009

(C/15343)(7.6.3)

# 72 மணி நேரப் போர் நிறுத்தம் அமைதிப் பேச்சுக்கும் வாய்ப்பு

## காஸாவில் எகிப்தின் அழைப்பை இரு தரப்பும் ஏற்பு

காஸா சிற்றி, ஓக.6

காஸாவில் 72 மணி நேர போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதையடுத்து, எகிப்தின் திட்டத்தை ஏற்று அமைதிப் பேச்சு நடத்த இஸ்ரேலும் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களும் ஒப்புக்கொண்டுள்ளதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

> ஹமாஸ் அமைப்பு நடத்திய ஏவுகணை வீச்சை எதிர்க்கும் விதமாக கடந்த ஜூலை 8 ஆம் திகதி 'ஒப்பரேஷன் புரொடெக்டிவ் எட்ஜ்' என்று பெயரிடப்பட்ட தனது இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்தது.

காஸாவில் நேற்று முன்தினம் மனித நேய அடிப்படையிலான உதவிகளை மக்களுக்கு செய்வதற்காக 7 மணி நேரப் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் போர் நிறுத்தம் முறிவானதால் இஸ்ரேல் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது.

இதனிடையே, எகிப்து அரசின் வலியுறுத்தல் காரணமாக, போர் நிறுத்தம் குறித்து நேற்று முன்தினம் இஸ்ரேல் அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு, தற்போது 72 மணி நேர போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புதல் அளித்ததாக இஸ்ரேல் இராணுவ தலைமை தெரிவித்தது.

இதையடுத்து, போர் நிறுத்தம் நேற்றுக் காலை முதல் நடைமுறைக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் தரைப்படை காஸா முனையின் வெளியே அனுப்பட்டதால், இந்த முன்னேற்றமானது முழுமையான சண்டை நிறுத்தத்துக்கான ஆரம்பமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


எகிப்தின் பேச்சு அழைப்பை, ஹமாஸும் ஏற்றுக்கொண்டதாக அதன் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்ததாக தகவல் வெளியாகின. அடுத்த மூன்று நாள்களில் எகிப்து நடத்த இருக்கும் பேச்சு பலஸ்தீனத்தில் நிலவும் போர்ச் சூழலை மாற்றி அமைக்கும் என உலக அளவில் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஹமாஸ் அமைப்பு நடத்திய ஏவுகணைத் தாக்குதலை எதிர்க்கும் விதமாக கடந்த ஜூலை 8 ஆம் திகதி 'ஒப்பரேஷன் புரொடெக்டிவ் எட்ஜ்' என்று பெயரிடப்பட்ட தனது இராணுவ தாக்குதலைத் தொடர்ந்தது.

கடந்த 4 வாரங்களாக நடந்து வரும் இருத்தரப்பு போரில் இதுவரை ஏராளமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. 1,900 க்கும் மேலான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் தரப்பில் 67 வீரர்கள் பலியாகி உள்ளனர்.

இந்த நிலையில், காஸாவிலிருந்து இஸ்ரேல் இராணுவப் படைகள் தற்காலிகமாக வெளியேறி உள்ளதாக அதன் செய்தித் தொடர்பாளர் பீற்றர் லேர்னர் கூறினார். ஆனால், அடிப்படை சூழலில் முக்கிய இராணுவக் குழுவினர் அங்கேயே இருக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறும்போது; ஹமாஸ் போர் நிறுத்த விதியை மீறி ஏதேனும் ஒரு செயலில் ஈடுபட்டாலும் எங்களது இராணுவத்தினர் செயலில் இறங்கத்தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றார். (த)



காஸாவில் இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் உயிரிழந்த பலஸ்தீன மக்களின் உடல்களை சமய முறைப்படி அடக்கம் செய்யும் உறவினர்கள்.

## எங்கும் குடியேறலாம்

### ஐரோப்பிய பிரசைகளுக்கு அடித்தது அதிர்ஷ்டம்

லண்டன், ஓக.6

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் குடிமக்கள் எந்த நாடுகளிலும் குடியேறலாம் என பிரிட்டன் அறிவித்துள்ளது.

ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் குடிமக்கள் ஏழு வருடங்களின் பின்னர், அந்த அமைப்பின் உறுப்பு நாடுகளில் எங்கு வேண்டுமானாலும் சென்று குடியேறலாம் என பிரிட்டன் துணைப் பிரதமர் நிக்கிலெக் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன் பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒன்பது மாதங்கள் இருக்கும்நிலையில், ஐரோப்பா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கான குடியேற்றம் குறித்த முக்கியமான விவாதம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

விவாதத்தில் கலந்து கொண்ட துணைப் பிரதமர் நிக்கிலெக் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஏழு வருடங்கள் குடியிருந்த ஒருவர், ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளில் எங்கு வேண்டுமானாலும் சென்று குடியேறவோ அல்லது தொழில் புரியவோ முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## ஐஸ்கிறீம் குளிரூட்டியில் சிறுவர்களின் சடலங்கள்

### அவலம் தொடர்கிறது காஸாவில்



*குளிரூட்டியில் குழந்தைகளின் சடலம்*

காஸா சிற்றி, ஓக.6

சடலங்கள் அழுகிப் போவதை தடுக்க போதிய குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாததால் காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பலியான குழந்தைகளின் பிரேதங்களை ஐஸ்கிறீம் குளிரூட்டியில் வைத்துப் பாதுகாக்கும் அவலம் கல் நெஞ்சத்தையும் கரைய வைக்கும் விதமாக உள்ளது.

காஸாவில் உள்ள ரஃபா நகரின் பல பகுதிகளின் மீது இஸ்ரேலின் விமானப் படையும், தரைப் படையும் நடத்திய தாக்குதலில் அந்நகரில் உள்ள நஜ்ஜார் வைத்தியசாலை இடிந்து தரைமட்டமாகியது.

இதற்கிடையே, இஸ்ரேலியப் படைகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யக் கூட இடைவெளி அளிக்காமல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், சடலங்கள் அழுகிப் போகாமல் பாதுகாக்க வேறு வழியின்றி தவிக்கும் மக்கள், தாக்குதலில் பலியான பிஞ்சு குழந்தைகளின் சடலங்களை ஐஸ்கிறீம் குளிரூட்டியில் வைத்துப் பாதுக்கும் அவலக் காட்சி நிறைந்த புகைப்படங்களைப் காஸாவில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் வெளியிட்டுள்ளனர். (த)

## ஐ.நா. பாடசாலை மீதான தாக்குதல் சர்வதேச விதிமுறை மீறிய செயல்

### பான் கீ - மூன் கடும் கண்டனம்

காஸாசிட்டி, ஓக.6

காஸாவிலுள்ள ஐ.நா. பாடசாலை மீது மேற்கொள்ளப்பட்ட 10 பேரைக் காவு கொண்ட தாக்குதல், 'முறைகேடானது; ஒரு குற்றச்செயல்" என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் குற்றஞ்சாட்டியுள் ளார். "சர்வதேச சட்ட விதிமுறையை அப்பட்டமாக மீறிய ஒரு செயல்" என்றும் பான் கீ- மூன் சுட்டிக்காட்டியுள்ளார். "இது அவமானத்துக்குரிய ஷெல் தாக்குதல்" என அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜென் பாகி சாடியுள்ளார்.



காஸாவின் பெரும் பகுதிகளில் இஸ்ரேல் நேற்று திங்கட்கிழமை ஏழு மணித்தியால 'மனிதாபிமான போர்நிறுத்தப் பிரகடனம் செய்திருந்தது. பிரிகேடியர் ஜெனரல் யோவ் மோர் டிசாய் இது குறித்து குறிப்பிடுகையில், "கிழக்கு ரஃபாவைத் தவிர்ந்த காஸாவின் இதர பகுதிகளில் இந்தப் போர்நிறுத்தம் மு.ப. 10 மணி முதல் நடைமுறையில் இருக்கும்" என அறிவித்திருந்தார்.

சண்டையையொட்டி ஆயிரக்கணக்கானோர் தஞ்சமடைந்துள்ள ஐ.நா. பாடசாலையின் நுழைவாயிலை ஞாயிற்றுக்கிழமை இந்த ஏவுகணை தாக்கியது.

அதேவேளை, இந்தப் பாடசாலை மீது தான் தாக்கு தலை மேற்கொள்ளவில்லை என இஸ்ரேல் மறுதலித் துள்ளது. இஸ்ரேல் இராணுவம் குறிப்பிடுகையில், அது அந்தப் பாடசாலைக்கு அருகில் இஸ்லாமிக் ஜிகாத் குழுவைச் சேர்ந்த மூன்று தீவிரவாதிகளைக் கண்காணித்தது என்றும் ஆனால், அந்தக் குழு அதில் எவராவது கொல்லப் பட்டதாகவோ - காயமுற்றதாகவோ தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

அரசு பேச்சாளர் மார்க் ரிகேவ் குறிப்பிடுகையில், "போர் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அண்மையில் தீவிரவாதிகள் நடமாடியுள்ளார்கள். பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்கு அவர்கள் உட்படுத் தப்படவேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

காஸா சுகாதார அதிகாரிகள் குறிப்பிடுகையில், "ஞாயிற்றுக்கிழமை 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை - இஸ்ரேல் மீது தீவிரவாதிகள் தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார். "மக்கள் உணவுக்காக வரிசையில் காத்திருந்த சமயம், இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது" என நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளார்கள். (த)

## பிரசண்டாவுடன் மோடி சந்திப்பு

காத்மண்டு, ஓக.6

நேபாள சி.பி.என்.-மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டாவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காத்மாண்டுவில் திங்கட்கிழமை சந்தித்துப் பேசினார்.

20 ஆண்டுகளாக நேபாளத்தில் ஆயுதப் போராட்டத்தை வழிநடத்திய பிரசண்டா, 7 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய அரசியலில் இணைந்தார்.

பிரதமர் மோடியுடனான சந்திப்புக் குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

நேபாளம் அதிவேகமாக வளர்ச்சி அடைய வேண்டும். நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவேண்டும் என்பதில் மோடி அக்கறையுடன் செயற்படுகிறார். இதன் மூலம் இந்திய, நேபாள உறவில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. நேபாள அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் உதவி செய்ய மோடி உறுதியளித்துள்ளார். (த)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இளைஞரை ஒருங்கிணைத்த இருவர் கைது

## தொண்டிப் பொலிஸார் நடவடிக்கை



இணைக்கப்பட்ட இளைஞர்கள்

இராமநாதபுரம், ஓக.6
ஈராக்கில் தீவிரவாத தாக்குதல் நடத்திவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவாக இளைஞர்களை ஒருங்கிணைத்துப் பேஸ்புக்கில் புகைப்படம் பதிவு செய்த தொண்டியைச் சேர்ந்த இரண்டு இஸ்லாமியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டியைச் சேர்ந்த 26 இளைஞர்கள் ஒருங்கிணைந்து ஈராக்கில் தீவிரவாதத் தாக்குதல் நடத்தி வரும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவாக மேற்சட்டை அணிந்து ரமழான் தினத்தன்று புகைப்படம் எடுத்து அந்தப் படத்தைப் பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்திருந்தனர்.

இந்தத் தகவல் மாவட்ட பொலிஸாருக்குத் தெரியவந்ததும் பொலிஸார் ரகசிய விசாரணை நடத்தினர்.


இதன்போது தொண்டி தெற்குத் தெரு பகுதியைச் சேர்ந்த அப்துல்ரகுமான் மற்றும் வடக்குத் தெருவைச் சேர்ந்த முகமது ரிஸ்வான் ஆகிய இரண்டு பேரையும் கைது செய்து திருப்பாலைக்குடி பொலிஸ் நிலையத்தில் வைத்து மூன்று நாள்கள் விசாரணை மேற்கொண்டனர்.

இதில் இருவரும் சேர்ந்து திருப்பூர் காதர் பேட்டையில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பயன்படுத்தும் 100 ரீ சேர்ட் தயார் செய்து தொண்டிக்குக் கொண்டு வந்து அங்குள்ள இஸ்லாமிய இளைஞர்கள் 24 பேரை ஒருங்கிணைத்துப் புகைப்படம் பிடித்து அந்தப் படத்தை அவர்களின் பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இதன் பின் அந்தப் படத்தில் உள்ள அனைவரிடமும் பொலிஸார் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், 22 பேருக்கு இதில் எந்தத் தொடர்பும் இல்லை என்றும்- ஏனைய இரண்டு பேர் வாங்கி வந்த பனியனை அணிந்து புகைப்படம் மட்டும் எடுத்து கொண்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஈராக்கில் செயற்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு தொண்டிப் பகுதியில் உள்ள இஸ்லாமிய இளைஞர்களை மூளைச் சலவை செய்து தீவிரவாதச் செயலுக்கு ஆதரவு திரட்டுவது, சட்டவிரோதமாக ஒன்று கூடியமை, சதித்திட்டம் தீட்டியமை போன்ற பிரிவுகளின் கீழ் அப்துல்ரகுமான், முகமது ரிஸ்வான் ஆகிய இரண்டு பேர் மீது தொண்டி பொலிஸார் வழக்கு பதிவு செய்து திருவாடானை குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

அவர்கள் இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தொண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-10)


நேபாளத்துக்குப் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைநகர் காத்மண்டுவின் வீதியொன்றில் நேபாள மக்களை சந்தித்துப் பேசுகிறார்.

## மீனவர்கள் பிரச்சினை குறித்து தமிழக பா.ஜ.க. - சுஷ்மா பேச்சு

புதுடில்லி, ஓக.6
தமிழக மீனவர்கள் விவகாரம், கச்சதீவு பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் நிரந்தரத் தீர்வை வலியுறுத்தி, தமிழக பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களை உள்ளடக்கிய குழு கடந்த திங்கட்கிழமை புதுடில்லியில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை நேரில் சந்தித்தது.

மத்திய இணையமைச்சரும், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநில தலைவருமான பொன்.இராதாகிருஷ்ணன் தலைமையில், அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களான இல.கணேசன், எச்.ராஜா, தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில், தமிழக மீனவர்களுக்கு நிரந்தர மீன்பிடி உரிமையை பெற்றுத் தருவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மற்றும் இலங்கை நாட்டு தமிழர்களின் நலன் மற்றும் கச்சத்தீவு உரிமை போன்ற விவகாரங்களில் தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடு குறித்து சுஷ்மா சுவராஜுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், நடைபெற்ற கூட்டத்துக்குப் பின்பு செய்தியாளர்களைச் சந்தித்த பொன்.இராதாகிருஷ்ணன் கூறினார். (த)

## இந்தியாவின் தேசியக் கொடியை அவமதித்த மல்லிகா ஷெராவத்




புதுடில்லி, ஓக.6
இந்தி நடிகை மல்லிகா ஷெராவத்துக்கு இடுப்பில் தேசியக் கொடி கட்டியிருப்பது போன்ற சுவரொட்டியால் தற்போது அவருக்கு அழைப்பாணை அனுப்பட்டுள்ளது.

இந்தியில் டேர்ட்டி பொலிட்டிக்ஸ் என்ற பெயரில் உருவாகி வரும் படத்தின் சுவரொட்டியில், தேசியக் கொடியை இடுப்பில் கட்டியபடி நடிகை மல்லிகா ஷெராவத் ஒரு காரின் மீது அமர்ந்திருக்கும் காட்சி பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதையடுத்து, தனகோபால் ராவ் என்பவர் ஐதராபாத் நீதிமன்றத்தில், தேசியக் கொடி அவமதிப்பு சட்டத்தின் கீழ் படத்தின் தயாரிப்பாளர், மற்றும் நடிகை மல்லிகா ஷெராவத் ஆகியோரை தண்டிக்க வேண்டும். தேசியக் கொடியை அவமதிக்கும் இது போன்ற சுவரொட்டிகளை விளம்பரத்துக்கு பயன்படுத்தவும் தடை விதிக்க வேண்டும் என்று பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளார்.

இதனை விசாரித்த நீதிபதிகள் மனுதாரரின் குற்றச்சாட்டு தொடர்பாக இன்னும் 3 வாரங்களுக்குள் தங்களது நிலைப்பாட்டை நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டுமெனெ மத்திய அரசின் செயலாளர், படத்தின் தயாரிப்பாளர் மற்றும் மல்லிகா ஷெராவத் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளனர். (த)

# ராஜீவ் வீட்டில் புலிகளின் உளவாளி

## அவரின் முன்னாள் உதவியாளர் வெளியிடும் தகவல் இது


ஆர்.டி. பிரதான்

புதுடில்லி, ஓக.6
முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் வீட்டில் விடுதலைப் புலிகள் இயக்க உளவாளி இருந்ததாக அவரின் முன்னாள் உதவியாளரான ஆர்.டி. பிரதான் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திகடந்த 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தார்.

இந்நிலையில் அவரது முன்னாள் உதவியாளரான ஆர்.டி. பிரதான் மை இயர்ஸ் வித் ராஜீவ் அன்ட் சோனியா என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

ராஜீவ் காந்தியின் வீட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் ரகசியமாக ஊடுருவி தஞ்சம் அடைந்தார் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. ராஜீவ் வழக்கில் பலர் கைது செய்யப்பட்ட போதிலும், இந்தக் கொலை தொடர்பான முழு உண்மை வெளிவராது என்று தான் நான் நினைக்கிறேன்.

பல தேசங்களில் உள்ள சக்தி வாய்ந்த நபர்களின் சதி தான் ராஜீவ் கொலை என்பது என் கருத்து. ராஜீவ் வீட்டில் இருந்த விடுதலைப் புலிகளின் நபருக்கு ராஜீவின் நெருங்கிய வட்டத்தில் இருந்த முக்கிய தகவலை அளித்துள்ளனர்.

1991ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைக்காக அமேதியில் இருந்த சோனியாவும் என்னை போன்றே நினைக்கிறார். யாரோ ஒருவர் புலிகள் தரப்புக்கு ரக்சிய தகவல்கள் தந்ததாக அவரும் கருதுகிறார்.

தமிழ்நாடு அரசு நிர்வாகத்துக்கு மட்டுமே விடுதலைப் புலிகளின் சதி பற்றி தெரிந்திருக்க வாய்ப்பு உள்ளது. ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய தயாரானபோது விடுதலைப் புலிகள் தாங்கள் யாரையும் எதுவும் செய்ய மாட்டோம் என்று பிறரை நம்ப வைத்துவிட்டனர். இறுதியில் அவர்கள் தான் வென்றார்கள்.

எனது பார்வையில் மத்திய உளவுத் துறையான ஐ.பி மற்றும் தமிழக ஆளுநர் பீஷ்ம நராயண் சிங் ஆகியோர் இந்த விடயத்தில் மத்திய அரசுக்கு தகவல்களைத் தெரிவிப்பதில் தோல்வி அடைந்துவிட்டனர்- என்றுள்ளது.

ஆர்.டி. பிரதான் ராஜீவ் காந்தி பிரதமராக இருக்கையில் மத்திய உள்துறை அமைச்சக செயலாளராக ஒன்றரை ஆண்டுகள் பணியாற்றினார். மேலும் அவர் 1998ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை சோனியா காந்தியின் அலுவலகப் பொறுப்பாளராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பிக்குகளின் அடாவடி குறித்து அமெரிக்க தூதரகம் அதிருப்தி

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் உள்ளடங்கலாக கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்கு பிக்குகள் உள்ளடங்கிய கும்பலொன்றால் தடங்கல் விளைவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு.ஓக.6

காணாமற்போனோரின் உறவுகளுக்கும் சர்வதேச இராஜதந்திரிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு பிக்குகள் அடங்கிய குழுவொன்று இடையூறு விளைவித்தமை தொடர்பில் அமெரிக்கா அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அத்துடன் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துமாறும் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் திங்கள் இரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் உள்ளடங்கியதாக கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்கு பிக்குகள் உள்ளடங்கிய கும்பல் ஒன்றால் தடங்கல் விளைவிக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக குழுக்கள் மற்றும் இராஜதந்திரிகளுடன், சிவில் மோதலால் பாதிக்கப்பட்ட காணாமற்போன நபர்களின் குடும்பத்தினர் கொழும்பு கத்தோலிக்க தேவாலயம் ஒன்றின் வளாகத்தில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருந்த கூட்டத்தின் போதே இந்தக் கும்பல் திடீரென அத்துமீறிப் பிரவேசித்தது.

இந்த நிகழ்வை நிறுத்துவதற்காக அத்துமீறிய குறித்த குழுவின் தடங்கல் விளைவிக்கும் செயற்பாடு தொடர்பில் உள்ளூர் பொலிஸாரின் ஆரம்ப முயற்சியானது, கும்பலின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமையப் பெற்றமை குறித்து அமெரிக்கத் தூதரகம் தனது கரிசனையை வெளியிடுகின்றது.

இருப்பினும், இராஜதந்திரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் நிலைமையைத் தணிப்பதற்கு பொலிஸார் வினைத்திறனுடன் செயற்பட்டனர்.

வெறுப்பு மிக்க சுலோகங்களை கோஷமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்ததுடன், காணாமற்போனவர்களின் குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டனர்.

இந்தக் கும்பல் அமைதியான ஆர்ப்பாட்டத்துக்கான தமது உரிமையைப் பயன்படுத்துபவர்களாக நடந்து கொள்ளவில்லை.

சிறுவர்கள் உள்ளடங்கலாக மோதலில் இருந்து தப்பியவர்களின் அமைதியான ஒன்றுகூடலுக்கு தடங்கல் ஏற்படுத்தும் வகையிலேயே இவர்கள் நடந்து கொண்டனர். இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டவர்களை அச்சுறுத்தும் நோக்குடன் இந்தக் குழு நடந்து கொண்டது என்பதே உறுதியான தோற்றப்பாடாக இருந்தது.

சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துமாறும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் உள்ளடங்கலாக அனைத்து பிரஜைகளும் தமது அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு அனுமதிக்குமாறும் இலங்கை அரசிடம் நாம் வலியுறுத்திக் கேட்கின்றோம்.

வடக்கில் இருந்து இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வருகை தந்துள்ள குடும்பத்தினரினது பாதுகாப்பை, கொழும்பிலும், மீண்டும் வீடு திரும்பியதன் பின்னரும் உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் இலங்கை அரசிடம் நாம் கேட்கின்றோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## ஹரின் பெர்னாண்டோ இடத்துக்கு வேலாயுதம்


வேலாயுதம்

கொழும்பு.ஓக.6

ஹரின் பெர்னாண்டோவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கே. வேலாயுதம் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் ஹரின் பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய உள்ளார்.

வெற்றிடத்துக்கு, பதுளை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு மூன்றாவது அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேலாயுதம் நியமிக்கப்பட உள்ளார். (ஒ)

## தபால் மூல வாக்களிப்பு இன்று இறுதிநாள்



கொழும்பு.ஓக.6

ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதி நாள் இன்று 6 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த முறை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப் படுகின்ற ஊவா மாகாணத்தின் அனைத்து அரச அலுவலர்கள், அதிபர் கள், ஆசிரியர்கள், தபால்மூல வாக்களிப்புக்கான தமது விண்ணப்பப் படிவங்களை தேர்தல் செயலகத்துக்கு கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்குமாறு தேர்தல்கள் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாக்கெடுப்புக் கடமையில் ஈடுபடுத் தப்பட்ட எந்தவொரு அரச ஊழியர்களும் எக்காரணம் கொண்டும் வாக்கெடுப்பு நிலையத்தைவிட்டு வெளியே செல்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)



கொழும்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு மாதம்பை தும்மலசூரிய பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச சாரணர் ஜம்போரியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலை கலந்துகொண்டார். ஆயுபோவன் என்ற தொனிப்பொருளில் நடைபெற்றுவரும் இந்த ஜம்போரியில் 30 நாடுகளைச் சேர்ந்த 3000 சாரணர்கள் கலந்துகொள்கின்றனர்.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இந்த ஜம்போரி நாளை 7 ஆம் திகதி வரையும் நடைபெறும். இந்தக்காலப் பகுதியில் பல நாடுகளின் கலாசார நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ஒ)

## 'மீண்டும் போர் வெடிக்கும் அபாயம்'


மாதுலுவாவே சோபிததேரர்

கடந்த ஞாயிறு (03.08.2014) அன்று உதயன் முன் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக "தீர்வை இழுத்தடித்தால் மீண்டும் வெடிக்கும் போர்" என்ற தலைப்பில் வெளியாகி இருந்த செய்திக்குரிய வண. மாதுலுவாவே சோபித தேரர் அவர்களின் படத்துக்குப் பதிலாக ஓமல்பே சோபித தேரரின் படம் தவறுதலாக பிரசுரமாகி இருந்தமைக்கு வருந்துகிறோம். இங்கே காணப்படுவதே. வண. மாதுலுவாவே சோபித தேரரின் படமாகும்.

# ரயில்வே பணியாளர்கள் வேலை நிறுத்தத்துக்கு முஸ்தீபு

## 11 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போர்க்கொடி

கொழும்பு.ஓக.6

நீண்டகாலமாக நிலவிவரும் ரயில்வே ஊழியர்களின் சம்பள முரண் பாட்டை நீக்கி தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த 11 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 14ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக கூட்டுத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பேச்சாளர் டபிள்யூ.என்.ஜானக பெர்னாந்து தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வொன்றை இரு வாரங்களுக்குள் வழங்குவதாகப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தம்மிக பெரேரா வாக்குறுதியளித்திருந்த போதிலும் அது நிறைவேறாமல் போயிருப்பதால் இந்தத் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக ஜானக பெர்னாந்து மேலும் தெரிவித்தார்.


ஜானக பெர்னாந்து

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் முன்னிலையிலேயே செயலாளர் இந்த உறுதியை வழங்கிய தாகவும் அது வழமைபோல கிடப்பில் போடப்பட்டுவிட்டதால் பணிப் பகிஷ்கரிப்பில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ)

# சட்டவிரோத யானை வளர்ப்பில் ஈடுபடும் கோட்டை நீதிவான்

கொழும்பு.ஓக.6

சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய நீதிவான் ஒருவரே சட்ட விரோதமான விதத்தில் யானை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார் என்ற விவரமான தகவல்கள் கணக் காய்வாளர் நாயக அறிக்கையில் வெளியாகியுள்ளன.

கோட்டை நீதிவான் திலிண கமகே யானைக்குட்டியொன்றை வளர்த்து வருகின் றார் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக ஊடகங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அண்மையில் கேள்விகளை எழுப்பி இருந்தனர்.

எனினும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதியுடன், தான் சட்டபூர்வமாகவே அதனை வளர்த்து வருவதாக நீதிவான் திலிண கமகே அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், இது தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் ஏனைய அரச அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு, நீதிவான் திலிண கமகேவின் யானைக்குட்டி தொடர்பான விபரங்களை கேட்டிருந்தது.

அதையடுத்து அவர் போலியான ஆவணங்கள் மூலம் சட்டவிரோத யானை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விபரம் தற்போது வெளியாகியுள்ளது.

தற்போது இந்த விவகாரம் நீதித்துறை முக்கியஸ்தர்கள் வசம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு குறைந்த பட்சம் இரண்டு லட்சம் ரூபா அபராதம் மற்றும் ஐந்து வருட சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

மேலும் நீதிபதி பதவியும் பறிக்கப்படலாம் என்றும் கூறப்பட்டது. நீதிவான் திலிண கமகே, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுக்கு நெருக்கமானவர் என்றும் சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஒ)



## இளைஞர் சடலமாக மீட்பு

வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றிலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். வத்தளையைச் சேர்ந்த எஸ்.சரவணன் (வயது-28) என்பவர் தொழிலின் நிமித்தம் வவுனியாக்கு வந்து ஆதிவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் வசித்து வந்தார். ஞாயிற்றுக்கிழமை இரவு மதுபான நிலையமொன்றுக்குச் சென்ற இவர் மது அருந்திவிட்டு வீட்டில் உறங்கியுள்ளார். பின்னர் இவர் நேற்றுமுன் தினம் காலை சடலமாக மீட்கப்பட்டார். இவரது இறப்புத் தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (க-402)

## குடும்பஸ்தருக்கு கத்தி வெட்டு

நாவற்குழிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்கானரார். இந்தச் சம்பவம் ஞாயிறு மாலை நாவற் குழி கிழக்கில் இடம்பெற்றது.
காயங்களுக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த தனையசிங்கம் குமாரகுலசிங்கம்(வயது-57) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

## பல்வேறு குற்றங்கள்; சந்தேகநபர்களுக்கு மறியல்

கைதடி நவபுரம் பகுதியில் அத்துமீறி வீடொன்றினுள் புகுந்து வீட்டில் இருந்தவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தவர்களில் இருவர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் சரணடைந்தனர். குறித்த இருவரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. கடந்த முதலாம் திகதி நவபுரம் பகுதி வீடொன்றினுள் அத்துமீறி பொல்லு. வாள் போன்றவற்றுடன் நுழைந்த மூவர் அங்குள்ளவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் (ஆனந்தராசா இராஜேஸ்வரி) சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதை அடுத்து ஒருவரைக் கைது செய்த பொலிஸார் மறுநாள் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். ஏனைய இருவரும் நேற்று நீதிமன்றில் சரணடைந்ததால் அவர்களையும் நாளைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

◆ ◆ ◆


சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள தொலைபேசிகள் விற்பனை நிலையத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

◆ ◆ ◆

சாவகச்சேரி மருத்து வமனை வளாகத்தில் கடந்த மாதம் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கில் 7 சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தர விடப்பட்டது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறிப்பிட்ட இந்த 7 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறுநீதி மன்றால் உத்தர விடப்பட்டது.
கடந்த மாதம் மருத்து வமனை வளாகத்தில் வைத்து உதயகுமார் அன்பழகன் என்னும் இளைஞர் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 7 சந்தேக நபர் களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (வ-9)

---

### இரண்டாம் ஆண்டு நினைவுச்சுடர்



அமரர்
**சின்னராஜா அன்ரன் அரியரட்ணம்**
(சின்னத்தம்பி மெக்கானிக்)

மலர்வு 10.08.1958 — உதிர்வு 06.08.2012

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவருவாய் எமக்கு வழிகாட்டியாய் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய் வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு மறைந்ததையா எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்.

19/1, ஈச்சமோட்டை,
பீச் றோட், யாழ்ப்பாணம்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கணபதிப்பிள்ளை மயில்வாகனம்**
(முன்னாள் பொறியியலாளர், C.T.B.)

அன்னை மடியில் 27.05.1935 — ஆண்டவன் அடியில் 06.08.2013

திதி: ஆடி அமாவாசை



ஆண்டொன்று சென்றாலும் உங்கள்
அழகிய புன்சிரிப்புடன் கூடிய வதனமும் உங்கள்
நீங்காத நினைவலைகளும் எம்மை விட்டு நீங்காது.

06.08.2013 லண்டனில் காலமான அமரர் G.V.K. மயில்வாகனம் அவர்களின் நினைவஞ்சலிப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் அரியாலை நீர்நொச்சிதாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உறவினர்கள், நண்பர்கள். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

அன்பு மனைவி
திருமதி ஜெயலட்சுமி மயில்வாகனம்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12.03.1944
மறைவு 06.08.2013

அமரர் **டானியல் அந்தோனிப்பிள்ளை**

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் தெய்வமே
என்றும் உங்கள் நினைவுகளுடன் நாம் வாழ்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 5 . யூன் . 1927



இறப்பு 18 . யூலை . 2013

**அமரர் முருகர் வைத்திலிங்கம்**


திதி: 06.08.2014

முருகர் பெற்றெடுத்த அன்பு மகன் வைத்திலிங்கம்
மாதகல் பூமியிலே மலர்ந்து வந்த மாமனிதர்
நிமிர்ந்து பார்க்க வைக்கும் உன் உருவம்
நேர்கொண்ட பார்வை பொன்னொத்த அழகு நிறம்
அறிவும் ஆற்றலும் அவர் தோற்றத்திற்கு மெருகேற்றும்
பூசகர் மட்டுமல்ல அவர், நூதனசாலை பாதுகாவலரும் கூட
இல்லற வாழ்க்கை இனிதாக இல்லாளுடன்
பூவுலகில் பெற்றெடுத்தார் பாசமுடன் எழுவரை
கனிவோடு கண்டிப்பும் கல்வியும் கலையும் தந்து
வாழ வைத்த எந்தையே..! எங்கள் தந்தையே
ஓராண்டு ஆனதையா உங்களை நாம் பிரிந்து
ஆனாலும் ஒருபோதும் உங்கள் நினைவு எமைவிட்டு
அகலவில்லை தெய்வமாய் ஆனவரே
தேம்பியழும் எங்களுக்கும், எங்கள் குடும்பத்திற்கும்
வழிகாட்டும் ஒளி விளக்காய் வாழ்க்கைப் பாதையிலே
துணையாக வந்திடுவீர் துதி செய்து கரம்குவித்தோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 08.07.2014 செவ்வாய்க்கிழமை
காலை இறைபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்
அமரர்
**சின்னட்டியன் பசுபதி**
(முன்னாள் முகாமையாளர், ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம் )

தோற்றம் 03.04.1926 — மறைவு 08.07.2014

அன்பென்ற வார்த்தையை ஊட்டி வளர்த்து
எம்மை வாழ்வென்னும் அண்டத்தில் விட்டுச்
சென்றாயே தந்தையே! பிரிவென்னும்
பெரும் துயரால் பரிதவிக்கவிட்டாய்.
31 நாள்களென்ன முப்பத்தொரு யுகங்களே
கடந்தாலும் மறையாது தந்தையே உங்கள்
நினைவலைகள்.

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் எம்வாழ்வின் ஒளியாய் எமக்கெல்லாம் சுமைதாங்கியாய் நின்று எம் வளமான வாழ்விற்கு வழிகாட்டிய எம் தெய்வமே! எம்மைவிட்டுப் பிரிந்த துயர்தனை சுமந்த வண்ணம் இன்றைய தினம் உங்கள் 31ஆம் நாளில் நினைவு கூருகின்றோம். எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னட்டியன் பசுபதி அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது அவரை அன்போடு நேசித்துப் பழகியோருக்கும் அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடனடியாக வந்து உரிய உதவிகள் செய்தவர்க்கும், அவரின் இறுதிக்கிரியைகளில் பெரும் திரளாகக் கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும் தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்து துயர் பகிர்ந்தோருக்கும், இரங்கலுரை நிகழ்த்தியோருக்கும் இறுதிக்கிரியைகளின் போது மயானம் வரை வந்து ஆறுதல் அளித்தோருக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் எல்லா உதவிகளும் புரிந்து எமக்கு அமைதியைத் தந்தவர்களுக்கும் நாம் எமது காலத்தால் அழியாத நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிரியை மற்றும் சபிண்டீகரணக் கிரியையும் நாளை (07.08.2014) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு.077 673 5994
குடும்பத்தினர்.

# குள்ளமான மரம்

மரங்களை நட்டுவிட்டு தண்ணீர் ஊற்றி உரம் இட்டுத் தீவிரமாக வளர்ப்பார்கள். எல்லாம், நாம் நாட்டிய மரங்களின் வளர்ச்சியை நாம் பார்த்துவிடலாமே என்ற ஆசைதான்.


ஆனால் பொன்சாய் என்ற மர வளர்ப்பு முறையொன்று உள்ளது. அதாவது இயற்கையில் பெரிதாக வளரக்கூடிய மரங்களைத் திறமையான கத்தரிப்பு மூலமும், அவற்றின் தண்டுகளில் கம்பிகளைச் சுற்றிக் கட்டுப்படுத்துவதன் மூலமும், உரிய அளவுக்கு வளரவிடாது கட்டுப்படுத்துவதாகும்.

முதிர்ந்த மரங்களின் தோற்றத்தில் குள்ளமாகவும், பார்வைக்கு அழகாகவும் இருக்கும்படி சட்டிகளில் வளர்க்கும் முறை பொன்சாய் எனப்படும்.





# நாள் முழுவதும் ஏசியில் இருப்பவர்களா?



பலர் தங்கள் வீடுகளில் குளிரூட்டி வசதிகளை ஏற்படுத்தி, வீட்டின் சுற்றுச்சூழலைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்கின்றனர். அதுமட்டுமின்றி, தற்போது பெரும்பாலான அலுவலகங்களில் ஏசி பொருத்தப்பட்டுள்ளது.

இப்படி நாள் முழுவதும் ஏசியில் இருந்தால், நன்கு குளிர்ச்சியாக இருந்தாலும், அதனால் பல ஆரோக்கியப் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். இதோ நாம் சந்திக்கும் பிரச்சினைகள்.

### நுரையீரல் பாதிப்பு

ஏசியில் இருப்பதால் சந்திக்கக் கூடிய பிரச்சினைகளில் ஒன்றுதான் நுரையீரல் பாதிப்பு. ஏனெனில் திடீரென்று வெப்பநிலை மாறுவதால், அது நுரையீரலில் பாதிப்பை ஏற்படுத்தும்.

### சருமப் பாதிப்பு

அதிக நேரம் ஏசியில் இருந்தால், அது சருமத்தில் வறட்சியை ஏற்படுத்துவதுடன், சளி சவ்வுகளிலும் வறட்சியை ஏற்படுத்திவிடும்.

### சுவாசக் கோளாறு

மற்றொரு பிரச்சினை. காற்றைச் சுவாசிக்க முடியாமல் போவதுடன், மிகவும் குறைவான காற்றுச் சுழற்சியால், சுவாசக் கோளாறுகள் ஏற்படும்.

### ஒவ்வாமை

ஏசி அறையில் சுற்றும் தூசிகள் மற்றும் பூஞ்சைகள் இருப்பதால், அவை ஒவ்வாமைகளை ஏற்படுத்தி, தும்மலை அதிகரிக்கும்.

### எரிச்சல்

ஏசியால் சருமத்தில் மட்டுமின்றி, தொண்டையிலும் அரிப்புடன் கூடிய எரிச்சல் ஏற்படக்கூடும்.

### சளி

ஒரே அறையில் காற்றானது அடைக்கப்பட்டிருப்பதால், ஒரு வருக்கு சளி வந்தால், அது மற்றவரை எளிதில் தொற்றக் கூடும். அதிலும் வைரஸ் தொற்றுகள் ஏசி அறையில் எளிதில் பரவக்கூடும்.

### கண் பிரச்சினைகள்

ஏசியால் விழி வெண்படல அழற்சி மற்றும் கண் இமை அழற்சிகள் ஏற்படக்கூடும். அதிலும் காண்டாக்ட் லென்ஸ் அணிந்திருப்பவர்களுக்கும் இத்தகைய அழற்சி ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

# நீரிழிவு நோயை இலகுவாக கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

நீரிழிவு நோய் இல்லை என்று சொல்வது தற்போது அரிதாகிவிட்டது. பிறந்த குழந்தை முதல் வயதானவர்கள் வரை இந்த நீரிழிவு நோய்க்கு ஆளாகியுள்ளதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய நீரிழிவு உடலில் வந்துவிட்டால், அதனை முற்றிலும் சரிசெய்ய முடியாது. ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தி, ஆரோக்கியமாக வாழ முடியும். அதற்கு இன்சுலின் ஊசி தான் ஒரே வழி அல்ல.

அத்தகைய நீரிழிவை இயற்கை முறையிலும் கட்டுப்படுத்தலாம். அதிலும் காய்கறிகளில் வெண்டிக்காயைச் உண்டால், நீரிழிவு கட்டுப்படும்.

நீரிழிவைக் கட்டுப்படுத்த எப்படி வெண்டிக்காயைப் பயன்படுத்த வேண்டும்? இரண்டு வெண்டிக்காய்களை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அவற்றின் இரு முனை களையும் நீக்கிவிட வேண்டும்.

அவற்றை சிறிய துண்டு களாக்க, அதிலிருந்து வெள்ளை நிறத்தில் ஒரு திரவம் வரும். அப்போது அதனைக் கழுவி விடாமல், ஒரு குவளை நீரில் அந்தத் துண்டு களைப் போட்டு இரவில் படுக்கும் முன்பு ஊற வைத்து, மறக் காமல் மூடிவிட வேண் டும். பின்னர் காலையில் எழுந்து எதுவும் உண்ணாமல், அந்தத் துண்டுகளை நீக்கி, அந்த நீரைப் பருக வேண்டும். இவ்வாறு தினமும் காலையில் குடித்து வந்தால், இரத்தத் தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைந்து விடும். வெண்டிக் காயை வேக வைத்து உண்பதை விட, இவ்வாறு உண்பதுதான், சிறந்த பலனைத் தரும்.

சிறுநீரகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு அதிகமாக இருப் பதோடு, சிறுநீரகத்துக்கும் பாதிப்பை உண்டாக்கும். ஆகவே வெண் டிக்காயைச் சாப்பிட் டால், சிறு நீரகத்தில் எந்த ஒரு நோயும் வராமல் தடுக்கலாம்.



எனவே வெண்டிக்காயை குழம்பு, பொரியல் என்று உண்பதைத் தவிர்த்து, மேற்கூறிய வாறு உண்டால், நீரிழிவைக் கட்டுப் படுத்தலாம். நீரிழிவில் டைப்-2 நீரிழிவு என்று ஒன்று உள்ளது.

இது சிறுநீரகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவு அதிகமாக இருப்பதோடு, சிறுநீரகத்துக்கும் பாதிப்பை உண்டாக்கும். ஆகவே வெண் டிக்காயைச் உண்டால், சிறு நீரகத்தில் எந்த ஒரு நோயும் வராமல் தடுக்கலாம்.

எளிதில் கரையக்கூடிய நார்ச் சத்து உள்ள உணவுகள் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது.

ஏனெனில் இந்தச் சத்து உட லில் இருக்கும் காபோஹைத ரேட்டின் செரிமான நேரத்தைக் குறைத்து, அவை இரத்தத்தில் கலக்காமல் தடுக்கிறது.

இத்தகைய சத்து வெண்டிக் கா யில் அதிகம் உள்ளது. எனவே, வெண்டிக்காயை அதிகமாக உண்பது நல்ல பயனைத் தரும்.

கையடக்க தொலைபேசி
மலிவு விற்பனை



30% வரை விலைக்கழிவு
சிங்ககிரி காட்சியறை
யாழ்ப்பாணம்
ஆகஸ்ட் 7 முதல் 9 வரை
சிங்ககிரி (பிரைவட்) லிமிடட்
011 5 413 413 / 011 4 413 413
www.singhagiri.lk
021 2 220 984
SAMSUNG
SINGHAGIRI

# காடுகளை அழித்து கிரவல் மண் அகழ்வதால் சூழலியல் ஆபத்து

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்


கிளிநொச்சி, ஓக.6

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காடுகளை அழித்து கிரவல் மண் அகழ்வதால் சூழலியல் ஆபத்துக்கள் ஏற்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காடுகளை அழித்து பெருமளவு கிரவல் மண் எடுத்துச் செல்லப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் அமதிபுரம் கிராமத்தைச் சூழவுள்ள இடங்களில் பெருமளவில் கிரவல் மண் அகழ்வு இடம்பெறுவதால் பெருமளவு காடுகள் அழிந்து வருகின்றன.

இதேபோன்று கோணாவில், யூனியன்குளம் பகுதியிலும் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழப்பட்டு வருகின்றது. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய கிராமங்களில் பெருமளவு கிரவல்மண் அகழ்வு வேலைகள் இடம்பெறுகின்றன.



அழிக்கப்பட்டு வரும் காட்டு வளம்

இதேபோன்று கிளிநொச்சியிலுள்ள இராமநாதபுரம் கிராமத்தின் காட்டுப்பகுதியிலும் முல்லைத்தீவின் அம்பகாமம் பகுதியிலும் கிரவல் மண் அகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதே வேளை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதி கிராமங்களில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டு மணல் கொண்டு செல்லப்படுவதாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் தட்டார்மலைப் பகுதியில் நடைபெறும் சட்டவிரோத கல் அகழ்வு தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சட்டவிரோத கிரவல் மண் அகழ்வு, களவாக மரங்களை அழித்து எடுத்துச் செல்லுதல் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிரதேச செய லர்கள், மாவட்ட அரச அதிபர்கள் கூட மேற்படி விடயங்களைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தென்னிலங்கையில் இருந்து வழங்கப்படும் அனுமதியின் கீழ் மேற்படி செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பாக வட மாகாண சபை கவனம் செலுத்த வேண்டும் என சூழலியலாளர்களும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிரவல் மண் அகழ்வுகள் மற்றும் மரங்களை அழிக்கும் நடவடிக்கைகளைத் தடுக்காவிட்டால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் எதிர்காலத்தில் பெருமள்வு சூழலியல் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

---

## உப்புக்குளம் அம்பாள் ஆலயத்தில் பணம் திருட்டு



விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார்

மன்னார், ஓக.6

மன்னார் உப்புக்குளம் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மூலஸ்தானக் கதவு உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் கடந்த 3 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது. மறுநாள் காலை 6 மணியளவில் ஆலயக் குருவான பரமேஸ்வரசர்மா ஆலயத்துக்குச் சென்றபோது மூலஸ்தான கதவு உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா பணம் திருடப் பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதை அடுத்து குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கு வந்த உப பரிசோதகர் சமன் குமார தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மோப்ப நாய் சம்பவ இடத்துக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இதே வேளை அம்பாள் அமர்ந்திருக்கும் பீடத்தை சற்று நகர்த்தி அங்கு நகைகள் உள்ளதா எனத் திருடர்கள் ஆராய்ந்துள்ளனர். ஆனால் குறித்த இடத்தில் நகைகள் எதுவும் வைக்கப்படவில்லை என்று ஆலயக் குரு தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் சென்று பார்வையிட்டுள்ளார். (க)

---

## பொதுச் சந்தை கட்டுமான பணிகள்


முல்லைத்தீவு, ஓக.6

மாங்குளம் பொதுச் சந்தையின் கட்டுமானப் பணிகள் நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் 55 மில்லியன் ரூபா செலவில் இடம்பெற்று வருகின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள மாங்குளம் பொதுச் சந்தை கடந்த 1990 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போர் காரணமாக முழுமையாக அழிவடைந்த நிலையில் காணப்பட்டது.

இதனை புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்திருந்தனர். (க-55)

---



மல்லாவி கடைத் தொகுதிக்குரிய பொதுக் கிணற்றின் புனரமைப்புப் பணிகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் தண்ணீரைப் பெறுவதில் சிரமம் ஏற்படுவதோடு கிணற்றுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள குழியால் பொது மக்களுக்கு அபாயம் ஏற்படக்கூடிய நிலையும் உருவாகியுள்ளது. (க-415)

---

## தொலைபேசி அச்சுறுத்தல் குறித்து ஊடகவியலாளர் முறைப்பாடு

வவுனியா, ஓக. 6

வவுனியா மாவட்ட ஊடகவியலாளரான நவரத்தினம் கபிலநாத்துக்கு கடந்த சனிக்கிழமை இரவு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது தொடர்பில் அவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அவரது கையடக்கத் தொலைபேசிக்கு இரண்டு இலக்கங்களில் இருந்தும் அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி அச்சுறுத்தப்பட்டுள்ளதாக அவர் முறையிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் நவரத்தினம் கபில்நாத் அண்மையில் ஓமந்தை பிரதேசத்தில் யாழ். ஊடகவியலாளர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் ஏனைய ஊடகவியலாளர்களுடன் இணைந்து குரல் கொடுத்திருந்ததுடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-56)

---

## அடிப்படை வசதி காணாத ஒதியமலை கிராம மக்கள்

முல்லைத்தீவு, ஓக. 6

முல்லைத்தீவு ஒதியமலை கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒதியமலையில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 136 பேரும், பெரியகுளத்தில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேரும் வசிக்கின்றனர்.

இங்கு மீள்குடியமர்ந்த பல குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா மட்டுமே மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

மீதி 25 ஆயிரம் ரூபா இதுவரையில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

---

## தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளைக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு



நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உரையாற்றுகின்றார்.

வவுனியா, ஓக.6

பழம்பெரும் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியாத் தொகுதிக் கிளையின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டக் கிளைத் தலைவர் டேவிட் நாகநாதன் தலைமையில் அண்மையில் விசேட பொதுக்கூட்டம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தலைவராக டேவிட் நாகநாதன், துணைத் தலைவராக ப.சத்தியலிங்கம் (சுகாதார அமைச்சர்), செயலாளராக சி.சிவசோதி, உப செயலாளராக மு.முகுந்தரதன், பொருளாளராக தி.கோபி, இணைப் பொருளாளராக பரராஜசிங்கமும் நிர்வாக சபை உறுப்பினர்களாக நா.சேனாதிராஜா, க.சிவலிங்கம், றோய் ஜெயக்குமார், ச.வாமதேவன், காசிநாதர், கருணாநிதி, வேல்மாறன், செல்வரட்ணம், பாரதி ஆனந்தன் ஆகியோர் வவுனியாத் தொகுதிக் கிளையின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# அனைத்து அரசியல்வாதிகள் மீதும் சுன்னாகம் பகுதி மக்கள் கடும் சீற்றம்

## குடிதண்ணீரில் எண்ணெய்ப் படிவு குறித்துக் கண்டுகொள்ளவில்லை என்பதால்



வலி. வடக்கு, ஓக. 6

சுன்னாகம் பிரதேசத்தில், மின் உற்பத்தி நிலையத்தைச் சுற்றியுள்ள குடிதண்ணீர்க் கிணறுகளில் எண்ணெய்ப் படிவுகள் கலப்பது குறித்து மாகாண சபையோ உள்ளூராட்சி அமைப்புகளோ உள்ளூர் சுகாதார அதிகாரிகளோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று கடும் சீற்றத்துடன் குற்றஞ் சாட்டுகிறார்கள் அப்பகுதிப் பொதுமக்கள்.

வட மாகாண சபை பதவியேற்று ஒரு வருடத்தை அண்மிக்கின்ற போதும் இது குறித்து, மாகாண சுற்றுச் சூழல் அமைச்சரோ, சுகாதார அமைச்சரோ கிஞ்சித்தும் அக்கறை காட்டவில்லை என்றும் அவர்கள் கொந்தளிக்கிறார்கள்.

கிணறுகளில் எண்ணெய்ப் படிவு கலந்து அந்த நீர் குடிப்பதற்கும் விவசாயத்துக்கும் பயன்படுத்தப்பட முடியாத அளவுக்குக் கெட்டுப் போவது தொடர்பாகக் கலந்துரையாடும் கூட்டம் கடந்த வார இறுதியில் சுன்னாகம் சிவன் கோவில் வீதியில் சுன்னாகம் சனசமூக நிலையத் தலைவர் எஸ். கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர். தமக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புக் குறித்து அவர்கள் எடுத்துக் கூறினர். மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து கழிவு ஓயில் நிலத் திலுள் செலுத்தப்பட்டதாலேயே தமது குடிதண்ணீர் ஆதாரங்களும் விவசாய ஆதாரங்களும் கெட்டுப் போய்விட்டதாக அவர்கள் சரமாரியாகக் குற்றஞ்சாட்டினர். எனவே இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை உள்ளிட்ட எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேற்கொண்டு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த 10 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. முதற் கட்டமாக, தமது குடிதண்ணீர் ஆதாரத்தை அழித்து தமது அடிப்படை உரிமையை மீறியமைக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இது தொடர்பில் உடனடியாக முறையிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட கிணறுகளை அடையாளம் காண்பதுடன் அந்தக் கிணறுகளின் நீர் எந்தளவுக்குக் கெட்டுப்போயுள்ளது என்பதைப் பாசோதிக்க நடவடிக்கை எடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தமது வாழ்வாதாரப் பிரச்சினையாக இது மாறிவிட்ட போதும் இது குறித்து உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த உள்ளூர் அரசியல்வாதிகளும் மாகாண அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாராமுகமாக இருக்கிறார்கள் என்று கூட்டத்தில் பலரும் குமுறினர்.

"தென்னிலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பொது மக்களுடைய பிரச்சினைகள் குறித்த இத்தகைய கலந்துரையாடல்கள் என்றால் முன்னின்று தாங்களாக வலிந்து சென்று உழைக்கின்றார்கள். ஆனால் எமது தலைவர்கள் அது பற்றி அக்கறைப்படுவதே இல்லை. வாக்குக் கேட்டு வருவதுடன் அவர் களின் கடமைகள் நிறைவடைந்து விடுகின்றன" என்று காரசாரமான விமர்சனங்களும் அங்கு முன்வைக்கப்பட்டன. ஆளும், எதிர் கட்சிகளைச் சேர்ந்த எல்லா அரசியல்வாதிகள் மீதும் மக்கள் வசை பாடினார்கள்.

தமது பகுதியில் இருந்து இரண்டு மாகாண சபை உறுப்பினர்களையும் பிரதேச சபைகளையும் தெரிவு செய்து விட்டுள்ள போதும் அவர்கள்கூட இந்தப் பிரச்சினையில் அக்கறைப்படவில்லை என்று மக்கள் குறைப்பட்டார்கள். இந்தக் கூட்டத்துக்குக்கூட அவர்கள் வரவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் எண்பது சதவீதமானவைகளில் இவ்வாறு எண் ணெய்படிவு கலப்பதால் நீர் மாசடைந்திருப்பதாகவும் பொது மக்கள் கூறுகின்றனர்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் தேசிய நீர்வளங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையால் பெறப்பட்ட இருநூறு கிணறுகளின் மாதிரியில் எண்பது வீதமான கிணறுகளின் நீர் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதாக இனம் காணப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும் இது சம்பந்தமாக இதுவரையில் இந்தப் பகுதியில் உள்ள எந்தவொரு பொது மகனுக்கும் அவர்களது கிணற்றுநீரைப் பயன்படுத்தலாமா இல்லையா என்பது குறித்த தெளிவான அறிவுறுத்தல்கள் எவையும் நீர்வளங்கள் அதிகார சபை அதிகாரிகளால் தெரிவிக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். எனவே இது குறித்து தாமே களத்தில் இறங்கிச் செயற்படுவது விடுவது என்றும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

(உ-86)

## இரசாயன கலப்பற்ற மரக்கறி, பழங்கள்; யாழ். நகரில் விரைவில் விற்பனை நிலையம்



யாழ்ப்பாணம், ஓக.6

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரசாயன சேர்க்கைகள் இல்லாத உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், மக்களது நலனைக் கருத்தில் கொண்டு இரசாயன மருந்துகள் சேர்க்கப்படாத கலப்பற்ற மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் இதர உற்பத்திப்பொருள்களையும் விற்பனை செய்வதற்குத் தீர்மானித்துள்ளோம். இந்தப் பொருள்களை விற்பனை செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கிளை நிலையம் ஒன்று யாழ்.நகரில் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள யாழ்.தபாலகக் கட்டடத்துக்கு முன்பாக உள்ள சங்கத்தின் தலைமை அலுவலக கட்டடத் தொகுதியில் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த விற்பனை நடவடிக்கைகளுக்காக விவசாய மற்றும் பயிர்ச் செய்கைகளின் உற்பத்திகளை மேற்கொள்ளும் விவசாயிகள், உற்பத்தியாளர்களிடமிருந்து அவர்களின் உற்பத்திப் பொருள்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுடைய உற்பத்திப் பொருள்கள் இரசாயனக் கலப்பு அற்றவை என உறுதிப்படுத்தப்பட்டால் அந்த உற்பத்திப் பொருள்களை அவர் களிடம் இருந்து நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கும் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இரசாயன கலப்பற்ற உற்பத்திப் பொருள்கள் விற்பனைக்கு வரும்போது அவற்றை நுகர்வோர் விருப்பத்துடன் பெற்று பெரும் பயன்பெறுவர் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-ரி-17)

## சைக்கிளில் சென்ற பெண்ணின் கைப்பை மோ.சைக்கிள் இளைஞர்களால் அபேஸ்

### பின்தொடர்ந்து வந்து கைவரிசை

அச்சுவேலி, ஓக.6

அச்சுவேலி வைத்தியசாலைக்குச் சென்று பிள்ளைக்கு மருந்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த இளம் பெண்ணின் கைப்பை, மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த வாலிபர்களால் அபகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பிரதான வீதியில் அச்சுவேலி தெற்கு வெட்டுக் குளத்தடியில் நடைபெற்றது.

அதில் பணம், கைத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை, வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் மற்றும் குடும்ப அட்டை போன்றவை இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்குச் சென்று பிள்ளைக்கு மருந்து பெற்றுக்கொண்டு பிள்ளையோடு சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் பெண்ணொருவர் அவரது கைப்பை சைக்கிளின் கூடையில் இருந் தது.

இவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அச்சுவேலி தெற்கு வெட்டுக்குளத்தடியில் சைக்கிளைக் கடந்து செல்லும்போது கைப்பையை இலாவகமாகத் தூக்கிக் கொண்டு வேகமாக தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-11)

## மவுன்காமம் வீதிப் புனரமைப்பில் யாழ். மாநகர சபை பாரபட்சம்

### சபை எதிரணி உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 6

குருநகர் மவுன்காமம் வீதியின் புனரமைப்பு தொடர்பாக யாழ். மாநகர சபைக்கு கோரிக்கை விடுத்து 5 வருடங்கள் கடந்தும் அதுதொடர்பில் மாநகர சபை பாரபட்சத்துடன் செயற்படுவதாக யாழ். மாநகர சபையின் எதிரணி உறுப்பினர் திருமதி. அ.மேரியம்மா குற்றஞ் சாட்டியுள்ளார்.

குருநகர் மவுன்காமம் ஆயர் இல்லத்துக்குச் செல்லும் குறித்த வீதி நீண்ட காலம் புனரமைப்பு இன்றிக் காணப்படுகிறது. ஆயர் இல்லத்துக்குச் செல்வோர் அதிகமாகக் குறித்த வீதியைப் பயன்படுத்தி வருவதால் பிரதேச மக்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை எதிரணி உறுப்பினர் என்ற ரீதியில் சபையில் பிரேரணையாக முன்வைத்திருந்தார்.

குறித்த பிரேரணை முன்வைத்து வருடங்கள் கடந்த நிலையிலும் மாநகர சபை அந்தக் கோரிக்கையை உதாசீனப்படுத்தியுள்ளது.

கட்சி பேதம் பார்ப்பதன் காரணமாகவே சிறிய வீதியைக் கூட புனரமைப்புச் செய்வதில் மாநகர சபை பின்நிற்கிறது.

மாதாந்தக் கூட்டங்கள் பலவற்றில் இந்தக் கோரிக்கை என்னால் முன்வைக்கப்பட்ட போதிலும் அதில் மாநகர சபை அக்கறை காட்டவில்லை. எனவே இந்தக் கோரிக்கையை மாநகர சபை ஏற்று வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த மாதாந்தக் கூட்டத்தின் போது தெரிவித்தார்.

(வ-14)

## கழிவு நீர் தேங்கிய மக்கிக் குளத்தின் அருகில் குடியிருப்போர் அசௌகரியம்



யாழ்ப்பாணம், ஓக.6

யாழ்.ஈச்சமோட்டை சந்தியிலுள்ள குளத்துக்கு முன்பாகவுள்ள மக்கிக்குளம் கழிவு நீர் தேங்கிக் காணப்படுவதால் குளத்தை அண்டியுள்ள மக்களின் குடியிருப்பு கிணறுகள் மாசடையும் நிலை ஏற்பட்டிருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அந்தக் குளத்தை அண்டியுள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்கால் தடைப்பட்டுள்ளதால் குறித்த குளம் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகிறது.

இவ்வாறு கழிவு நீர் தேங்கியுள்ளதால் குளத்தை அண்மித்ததாய் குடியிருக்கும் மக்களின் கிணறுகள் மாசடைய வாய்ப்புக் காணப்படுகின்றது. எனவே தேங்கியுள்ள கழிவு நீரை வாய்க்கால் ஊடாகக் கடலுக்கு வழிந்தோடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் குளத்தில் தேங்கிய கழிவு நீரில் இருந்து நுளம்புக் குடம்பிகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

(வ-7)

## நவீன மீன் சந்தை சங்கானையில் அடிக்கல்

சங்கானை, ஓக. 6

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 320 லட்சம் மூலம் சங்கானையில் புதியதோர் நவீன மீன் சந்தைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

தற்போது அமைந்துள்ள மீன் சந்தை வலி.மேற்கு பிரதேச செயலகத்துக்கு முன்னாலும், வர்த்தக நிலையங்களுக்கு முன்னாலும் அமைந்துள்ளதால் பொது மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தொடர்ந்து இதே வீதியில் சங்கானை மண்டியற்குளத்துக்கு அண்மையில் இந்த நவீன மீன் சந்தை அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் நட்டனர்.

(ஒ-29)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எதுவும் சரியாயில்லை

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் மண்விழுந்திருப்பது கவலையளிக்கிறது. இந்த நாட்டில் ஒருபோதுமே இன நல்லிணக்கம் சாத்தியப்படாமல் போய்விடுமோ என்ற அச்சம் பரவ ஆரம்பிக்கிறது. இருக்கிற நிலைமைகள் மீண்டும் ஒரு வன்முறையை நோக்கி இந்த நாட்டை மெல்ல மெல்ல திட்டமிட்டு நகர்த்திச் செல்கின்றதான உள்ளுணர்வு கிலி கொள்ள வைக்கின்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு உத்தரவிடும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை என்று உயர் நீதிமன்றம் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டது. மாகாணத்தை ஆள்வதற்காக மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர் முதலமைச்சர். அவரால் மாகாணத்தின் பிரதம நிர்வாகிக்கு உத்தரவிட முடியாது என்றால் மாகாண சபைக்கும் முதலமைச்சருக்கும் என்னதான் அதிகாரம்? இதனால்தானே இந்த 13ஆவது திருத்தத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அடியோடு நிராகரித்தார். ஒரு அரச அதிகாரிக்குக்கூட உத்தரவிட முடி யாத மாகாண அமைச்சுக்கான தேர்தலை நடத்தி விட்டா, நாங்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்தினோம், மாகாண சபைத் தேர்தலை நடத்தினோம் என்று கொழும்பு அரசு கூவித் திரிந்தது? இதற்கு அந்தத் தேர்தல் நடத்தப்படாமல் விட்டால்தான் என்னவாகி இருக்கப் போகிறது. ஆக மொத்தத்தில் அனைத்தும் வெறும் ஏமாற்று, வெற்றுவேட்டு என்பது தானே இப்போது வெட்ட வெளிச்சமாகி இருக்கிறது.

அதுபோக, காணாமற்போனோர் தொடர்பில் கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுக்கு விளக்கச் சென்றவர்களை, பிக்குகள் தலைமையில் வந்த குழுவினர் மிரட்டி விரட்டியடிக்கிறார்கள். தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டும் தொழில்சார் பயிற்சிகளை அளிப்பதை ஒரு குழு தடுத்து நிறுத்துகிறது. அதனை வெளிவிவகார அமைச்சும் நியாயப்படுத்து கிறது. சிங்கள ஊடகவியலாளர்களுக்கு அளிக்கப்படும் அதே பயிற்சி தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அளிக்கப்படக்கூடாது என்று வெளிப்படையாகவே பாரபட்சம் காட்டு கிறது இலங்கை அரசு.

அரச சார்பற்ற நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. உள்நாட்டில் கிளர்ச்சியைத் தூண்டி விட்டுவிடப்போகின்றவோ என்ற சந்தேகத்தில் நடந்துகொள்வதைப்போல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அரசு நடந்து கொள்கிறது.

தெற்குப் பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். கொல்லப்படுவீர்கள் என்று மிரட்டப்படுகிறார்கள். ஆனால் அது மாணவர்கள் இடையிலான சிறிய மோதல் என்று தட்டிக்கழிக்கிறது அரசு. விளையாடப்போன வடக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் தாக்கித் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அவற்றில் படையினர் களியாட்ட விடுதிகள் அமைக்கிறார்கள். அந்த மண்ணுக்குரிய மக்களுக்கு ஒரு ரூபாய் இழப்பீடுகூடக் கிடையாது. விசாரணைகள் என்ற பேரில் நடக்கும் கூத்துகள் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

இவை எவையும் நல்லவையாகத் தெரியவில்லை. நாட்டை நிரந்தர அமைதியை நோக்கி வழிப்படுத்துபவையாகத் தெரியவில்லை.

மொத்தத்தில் எதுவும் சரியாக இல்லை என்பது தெளிவாகிறது. விளைவு...?

# போர்க் குற்ற விசாரணை; சிக்கலுக்கு மேல் சிக்கல்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் விசாரணைப் பரப்பளவு விரிவுபடுத்தப்பட்டு அதற்கு ஆலோசனை கூறுவதற்கென வெளிநாட்டு நிபுணர்கள் மூவர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பும் விளக்கம் கோரலும் அதிகரித்து வருகின்றன. ஜனாதிபதியின் பிரகடனத்தைத் தவிர ஆணைக்குழுவின் விசாரணை விரிவாக்கம் தொடர்பாக அரசு தரப்பில் எந்த ஒரு பிரமுகரும் கருத்து எதுவும் வெளியிடவில்லை. எதிர்த்தரப்பில் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில்; இது நிலைமைகளை மேலும் சிக்கலாக்கப் போகிறது என்றார். போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணையொன்றுக்கு இடமளிக்கப் போவதில்லையென்று அரசு கூறிக் கொண்டிருந்தாலும், ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீமூனிடம் ஜனாதிபதிதான் அப்படியொரு விசாரணைக்கு ஒத்துக்கொண்டிருந்தார் என்றார் அவர்.

2009 ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதி இலங்கைக்கு பான் கீ மூன் வருகை தந்து ஜனாதிபதியுடன் இணைந்து வெளியிட்டிருந்த கூட்டறிக்கையையே பொன்சேகா குறிப்பிட்டிருந்தார். கூட்டறிக்கையின் இறுதிப் பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"சர்வதேச மனித உரிமைகளின் தரங்கள் மற்றும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கும் அமைவாக இலங்கை அரசானது மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் அதன் முன்னேற்றத்துக்கு தனது வலுவான பற்றுறுதியை மீண்டும் வலியுறுத்துகின்றது. சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டமீறல்களை கவனத்தில் கொண்டவையாக இருக்க வேண்டும் என்று செயலாளர் நாயகம் வலியுறுத்தினார். அந்தக் குறைபாடுகளைக் கவனத்தில் எடுத்து செயற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐ.நா.விசாரணையை அரசு அலட்சியம் செய்துவிடமுடியாது. அதற்கு செவிசாய்ப்பது அரசின் கடமை. இப்பொழுது ஐ.நா.விசாரணையிலிருந்து தப்புவதற்கு அரசு தனது சொந்த சர்வதேச ஆலோசனைச் சபையை நியமிக்கவிருக்கிறது. இது ஒரு கேலிக்கூத்தாக மாறியிருக்கிறது. நாம் குற்றச்சாட்டுக்களை மறுத்திருக்கலாம். அதற்கு விசாரணையை எதிர்கொண்டு நாம் குற்றம் புரியவில்லை என்பதை நிரூபித்திருக்கலாம். அரசு இப்போது என்ன செய்கிறது என்றால் காசு கொடுத்து தனக்குச் சாதகமான ஓர் அறிக்கையைப் பெற்றுக் கொள்ளப் பார்க்கின்றது. அரசு பணம் கொடுத்து அப்படியான ஓர் அறிக்கையைப் பெற முயன்றாலும், அதை விட அதிக பணம் கொடுத்து தமது கருத்துக்களைப் பதிவு செய்யக் கூடிய ஆள்களும் இருக்கிறார்கள் என்பதை அரசு தெரிந்து கொள்ள வேண்டும். மோசமான பதிவுகள் இடம்பெற்றுவிடுமானால் அரசு கஷ்டமான நிலைமைகளை எதிர்நோக்க வேண்டிவரும். அரசின் முட்டாள்தனமான செயல்கள் எல்லாவற்றையும் சிக்கலாக்கிக் கொண்டிருக்கின்றன என்றார் பொன்சேகா.

ஐந்து வருட காலமாக இராணுவம் போர்க் குற்றம் எதனையும் மேற்கொள்ளவில்லையென்று கூறிக்கொண்டிருந்துவிட்டு இப்படியான ஒரு செயற்பாட்டை ஏன் அரசு மேற்கொண்டது என்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. கேள்வி எழுப்பப் போவதாக அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

## நெருப்பெடுக்கும் எதிர்க்கட்சிகள்

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துமாறு கேட்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருப்பதுடன், ஊவா மாகாண சபைத் தேர்தலில் இதனையே முக்கிய பரப்புரை விடயமாக முன்வைக்கும் என்றும் தெரிகின்றது.

உலக தரத்தில் நம்பகமான உள்ளக விசாரணை ஒன்றை நடத்தினால் மட்டுமே சர்வதேச விசாரணையை தவிர்க்க முடியும் என்று நாம் கூறி வந்திருக்கிறோம். இந்த யோசனையை நாடாளுமன்றத்தில் நாங்கள் வைத்த போதெல்லாம் நாம் துரோகிகள் என்றே வர்ணிக்கப்பட்டோம் என்று கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகரான மங்கள சமரவீர.

ஜனாதிபதியின் அறிவித்தல் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மாத்திரமே சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார். உள்ளக விசாரணையொன்று நடக்குமானால் எமது நோக்கத்தை அது நிறைவேற்றுவதாக இருக்கும். எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஆலோசகர் இருந்தால் நல்லது என்று அரசு கருதுகிறது. ஆலோசகர்கள் என்ற வகையில் அவர்கள் ஆலோசனைகள் வழங்கலாம். எமக்கு ஏற்புடையதாயின் அதனைச் செயற்படுத்துவோம். ஆலோசனைகள் எப்பொழுதுமே ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும் என்றில்லை என்று கூறியுள்ளார் ரம்புக்வெல.

### பாதுகாப்புச் சட்டம் அவசியம்

போர்க் குற்ற விசாரணைக் குழுவுக்கு முன்னால் சாட்சியமளிக்க விரும்பும் சில எதிர்த் தரப்புகள், குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியமளிப்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டம் நடைமுறையில் இருப்பது அவசியம் என்று கருதுகிறார்கள். போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக் குழு தனது ஆய்வுகளை மேற்கொள்ளும்போது அவ்வாறான ஒரு சட்டம் செயற்பாட்டில் இருக்குமா என்பது கேள்விக் குறியாகக் காணப்படுகின்றது. நீதியமைச்சின் தகவலொன்றின்படி 38 பக்கங்களைக் கொண்ட அவ்வாறான சட்டமொன்று இப்போது மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது. அந்தச் சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அவசியமான கட்டமைப்புகள் மற்றும் வேறு அவசியமான அம்சங்கள், அவை அமைய வேண்டிய இடங்களில் இடம்பெறும் வகையில் சட்டத்தின். வெவ்வேறு பகுதிகளும் வெவ்வேறு தினங்களில் செயற்படுவதற்கு சட்டத்தில் வகை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. உதாரணமாக பொலிஸ் மா அதிபர் குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் புரியும் வகையில் ஒரு சிறப்புப் பிரிவினை உருவாக்க வேண்டியவராய் இருப்பார். இன்னொன்று என்னவென்றால் பாதிக்கப்பட்டவர்களின் அல்லது சாட்சிகளின் உரிமைகள் அல்லது பாத்தியதைகளில் தலையீடுகள் செய்யப்படுவதற்கான சூழ்நிலைகள் பற்றிய புகார்களின் மீது விசாரணைகள் நடத்துவதற்கான பொறி அமைப்பொன்றை நிறுவுவது பற்றியதாகும்.

இந்தச் சட்டத்தில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசாரணைக் குழுவுடன் தொடர்புடைய மிக முக்கியமானதொரு அம்சம் என்னவென்றால்; எந்தவொரு சட்டத்தை அமுலாக்கும் அதிகாரியிடம் அல்லது ஏதாகிலும் நீதிமன்றில், ஆணைக்குழுவில் சட்ட நடவடிக்கை எடுக்கும்படியாக தனக்கு ஏற்படக்கூடிய துன்பம், அச்சுறுத்தல், பழிவாங்கல் அல்லது பிரதிபலிப்புக்கள் தொடர்பாக செய்து கொண்ட புகார், வழங்கிய தகவல் அல்லது வாக்குமூலம் விடயத்தில் சாட்சியானவர் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதாகும். பாதிக்கப்பட்டவரை அச்சுறுத்தியதாக அல்லது காயப்படுத்தியதாக ஒருவர் மீது குற்றம் காணப்படுமானால் அவருக்கு மூன்று வருடங்களுக்கு குறையாமலும் 10 வருடங்களுக்கு மேற்படாமலும் சிறைத் தண்டனை விதிக்கப்படமுடியும். அவர்களுக்கு குற்றப் பணமாக 20 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படலாம்.

ஜனாதிபதியால் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் சர்வதேச நிபுணர்களின் ஆலோசனை பெறுதல் போன்றவை தொடர்பான பிரகடனம் விடுக்கப்பட்டு இப்போது இரண்டு வாரங்கள் ஆகிவிட்ட போதிலும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி அதுபற்றி எதுவும் குறிப்பிடவுமில்லை. அமைச்சர்கள் எவரும் பிரச்சினை கிளப்பவுமில்லை.

ஆனால் வழமைபோல் பொதுவான விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் ஒன்று, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் கொண்டு வரப்படவுள்ள கொழும்பை அடுத்துள்ள பகுதிகளில் புதிதாக ஐந்து பாடசாலைகளை நிறுவுவதாகும். அவைகளை றோயல் கல்லூரி, ஆனந்தா கல்லூரி, சென்.தோமஸ் கல்லூரிபோன்றவற்றுடன் இணைத்துவிடுவது அவருடைய திட்டமாகும். மாணவர்களின் வளர்ச்சி எண்ணிக்கை அதிகரித்து வருவதைச் சமாளிக்கவே இந்தத் திட்டம் என்பது அவரது கருத்து. முக்கிய முதன்மைக் கல்லூரிகளில் அழுத்தம் அதிகரித்து வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தத் திட்டத்துக்கு அமைச்சர் பாட்டலி சம்பிக்க எதிர்ப்புத் தெரிவித்தார். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகையில்;

இந்த மாதிரிப் பாடசாலைகளுக்கு பெற்றோர் தமது பிள்ளைகளை அனுப்ப விரும்பமாட்டார்கள் என்றார் . அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விடயம் மாகாண சபைகளின் கீழ் இருந்தாலும், முதலமைச்சர்கள் இதில் எதுவும் செய்யாமல் இருக்கிறார்கள் என்றார். அரசின் 1,000 பாடசாலைகளை அமைக்கும் திட்டம் கைகூடாமலிருக்கிறது என்றும் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்த்தன கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மேற்கொண்டும் விவாதிக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் மாகாண முதலமைச்சரும் வருகை தந்திருப்பார் என்பதாக முடிவெடுக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் இடம்பெறவிருப்பதால் அமைச்சர்கள் தத்தமது வாக்கு வங்கிகளை அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் 5 பாடசாலைகள் திட்டமும் அப்படியான ஒன்றுதான் என்கிறார்கள் அவர்கள்.

இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு வீட்டை சொந்தமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற மஹிந்த சிந்தனையின் எதிர்கால கனவை நனவாக்கும் வகையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்ட அளவில் தனது பங்களிப்பை அளிக்கும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறினார்.

# பரீட்சையை எப்படி எதிர்கொள்வது?



கு.யோகன்ராஜ், ஆசிரியர்.

பரீட்சையைச் சிறந்த முறையில் எழுதுவதற்கான சில ஆலோசனைகளை முன் வைக்கின் றேன். இதனை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். நிச்சயம் வெற்றியடைவீர்கள்.

பரீட்சைக்கு முன்னதாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளாவன:

**குழுவாகச் சேர்ந்து கற்றல்**

உங்கள் நண்பர்கள் சிலருடன் இணைந்து குழுவாகக் கற்றல் முறையாகும். அப்போது உங்களால் கடினமான விடயங்களை அவதானிக்க முடிவதுடன் அவற்றைக் கிரகித்துக் கொள்ளவும் முடியும். இதிலும் உங்களால் கடைப் பிடிக்க வேண்டிய விதி யொன்றுண்டு. அதாவது குழுவாகச் சேர்ந்து கற்பதற்கு முன் அன்றைய தினத்தில் படிக்கத் திட்டமிட்டிருக்கும் விடயங்களைப் பற்றி குறைந்தது ஒரு நாளைக்கு முன்பேனும் முன்னாயத்தம் செய்தல் வேண்டும்.

**ஆலோசனை பெறுதல்**

இங்கு உமது ஆலாசகர் பாட ஆசிரியராயிருக்கலாம். அவ்வாறில்லையெனில் வெளியாலிருந்தும் ஆலோசனை பெறலாம். அதற்காக நீங்கள் தயாராதல் வேண்டும். இங்கு ஆலோசகர்களிடமிருந்து நீர் எதிர்பார்க்கும் மாதிரி வினாக்கள் முதலில் இடம்பெற வேண்டும். பெரும்பாலான திறமையான ஆசிரியர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் வினாத்தாள்களை எதிர்பார்க்கை செய்யும் அதீத ஆற்றலிருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**கடந்த கால வினாக்கள்**

கடந்த கால வினாத்தாள்களிலும் அதிக கவனம் செலுத்துவது குறிப்பிட்ட பரீட்சையில் ஒரே தடைவையில் சித்தியடைவதற்கு நீங்கள் மேற்கொள்ளும் மிகச் சிறந்த முறைகளிலொன்றாகும்.

குறைந்த பட்சம் 5 வருடங்களுக்குரிய வினாப்பத்திரங்களையாவது தேடி எடுத்து அவற்றுக்கு விடையளிப்பது உங்களால் செய்யப்படுதல் வேண்டும். இதற்கு மிகப் பொருத்தமான காலம் பரீட்சைக்கு ஒரு வாரம் இருக்கும்போது ஆரம்பித்தலாகும். குறிப்பிட்ட நேரத்துள் ஒவ்வொரு வினாத்தாளாக விடை அளிப்பதற்கு ஆரம்பித்தல் வேண்டும். இது ஒரு ஒத்திகை பார்த்தலாகும்.

**முன்னெச்சரிக்கை**

நீங்கள் படிக்கும் இடம் இடையூறு மிகுந்த இடமாக இருக்கக் கூடாது. இதனால் உங்கள் கவனம் விடுபடலாம்.

கடலின் இரைச்சல் போன்றவை உமது மனதை ஒரு நிலைப்படுத்துவதில் இடர்களாக அமையும். மேலும் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றிலிருந்து ஏற்படும் ஒலி உங்களுக்கு மிகவும் இடையூறாக அமையுமாக இருந்தால், அவற்றிலிருந்து விலகியிருந்து படிப்பது நல் லது.

பரீட்சைக்கு முன்னான பகுதியை நான்கு பகுதிகளாக வகுக்கலாம்.

✦ முறையான ஓய்வும் ஊட்டச்சத்து நிறைந்த உணவும்.
✦ நேர்நிலை மனப்பாங்கு.
✦ தேவைகளை நிறைவேற்றல்.
✦ பரீட்சை நேரத்துக்கு முன்னதாக பரீட்சை நிலையத்தை அடைதல்.

முறையான ஓய்வும் ஊட்டச்சத்து நிறைந்த உணவும் மிக அவசியம். பரீட்சைக்கு முன்தினம் இரவு ஒருபோதும் விடியும் 'வரை படிக்க வேண்டாம். அனைத்து பாட விடயங்களையும் பரீட்சைக்கு முன்தினம் இரவு 8 மணியுடன் நிறைவு செய்தல் வேண்டும். பரீட்சைத் தினம் காலை கோயில்களுக்குச் சென்று வழிபடலாம். பெரும்பாலான மாண வர்கள் போதியளவில் பரீட்சைக்குத் தயாராகாது ஆலயங்களின் துணையை வேண்டி நிற்பர். இது பிழையான நடவடிக்கையாகும். நேர்த்தி வைப்பதன் மூலம் மாத்திரம் பரீட்சைகளில் சித்தியடைய முடியுமாயின் எதையும் படிக்காமல் வேண்டுதல் செய்து எல்லோரும் சித்தியடையலாம். நீங்கள் படிக்கும் காலங்களில் ஊட்டச் சத்து நிறைந்த உணவுகளை உள்ளெடுக்க வேண்டும்.

**தகுந்த மனப்பாங்கு**

இதன் மூலம் உமது மனதுக்கு தைரியமளித்தல், எதிர்பார்க்கப்படுகின்றது. "நான் சித்தியடைவேன்" என்பதை உமது மனதினுள் எப்போதும் புகுத்த வேண்டும். "ஐயோ! என்னால் சித்தி பெற முடியுமா?" போன்ற கேள்விகளை நீக்கிவிடவும்.

**நேரகாலத்தோடு பரீட்சை நிலையத்தை அடைதல்**

பரீட்சை நிலையத்தை முன்கூட்டியே அடைவதன் மூலம் பரீட்சை மண்டபத்தை, ஆசனத்தை இலகுவாக அறிய முடியும். அத்துடன் மேலதிகமான இறுக்கங்களைத் தவிர்த்து மென்மையான மனத்துடன் அமரலாம். ஒருபோதும் பரீட்சை மண்டபத்துக்கு முன்சென்று மீண்டும் குறிப்புக்களைப் பார்ப்பது ஆகாத விடயமாகும். பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறான பழக்கத்துக்கு அடிமைப்பட்டிருப்பது தெரிகின்றது. இது பரீட்சை மண்டபத்தை நோக்கும் எவருக்கும் பொதுவாக தென்படும் அம்சமாகும்.

**பரீட்சை மண்டபத்தில்**

பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அறிவுறுத்தல்களை வாசித்தல், வினாத்தாள்களில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை விடையெழுத முன் வாசித்தல் வேண்டும்.

உதாரணம்- எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்பது.

**பரீட்சைகளின் அறிவுறுத்தல்களை செவிமடுத்தல்**

பரீட்சை ஆரம்பிப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் அனைத்துப் பரீட்சார்த்திகளையும் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிப்பார்கள். அதன் பின்னர் பரீட்சகரின் வாய்மூல அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். அவ்வாறான அறிவுறுத்தல்களை செவிமடுத்தல் உங்களது விளைதிறனை அதிகரிக்கும்.

**நேரத்தை மதிப்பீடு செய்தல்**

இது உம்மால் நிச்சயம் சிறப்பாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உதாரணமாக நீங்கள் முகம் கொடுக்கவிருப்பது கட்டாயமான வினா ஒன்றுக்கும் மற்றும் தரப் பட்டுள்ள 7 வினாக்களில் 5 இற்கும் எனக்கொள்க. *நேரத்தை பின்வருமாறு*
*பாதீடு செய்யலாம்.*
*முழுநேரம்- 3 மணி (180 நிமிடம்)*
*வினாத்தாளை வாசிப்பதற்கு (10 நிமிடம்)*
*கட்டாயமான வினாவுக்கு (60 நிமிடம்)*
*ஏனைய வினாக்கள் 5 இற்கும் ( 100 நிமிடம்)*
*(ஒரு வினாவுக்கு 20 நிமிடம்)*
*மீள்பார்வை (10 நிமிடம்)*
*மொத்த நேரம்- 180 நிமிடம்*

**விடையெழுதலைத் திட்டம் ஒன்றுக்கமைய ஒழுங்கமைத்தல்**

கட்டாயமான வினாவுக்கு விடையளிப் பது கட்டாயமானது. அதனை உம்மால் ஒதுக்க முடியாது. ஏனைய வினாக்கள் 7 இல் 5 வினாக்களைத் தெரிவு செய்ய முடியுமென்பதால் தெரிவு செய்யும் போது இலகுவான வினாக்களைத் தெரிவு செய்வது கட்டாயமானது.

அவ்வாறு 7 வினாக்களில் 5 வினாக்களைத் தெரிவு செய்த பின் அவற்றுள் உங்களது அறிவுக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப முதலில் விடையளிக்கும் ஒழுங்கில் வினாக்களை வரிசைப் படுத்த வேண்டும். இவ் வாறு செய்வதன் மூலம் உங்கள் மனதில் பெருமகிழ்ச்சி ஏற்படுவதுடன் உங்களுக்குள் உயர் தன்னம்பிக்கையும் ஏற்படும்.

விடைத்தாளில் சரியாக இலக்கமிடல், அனைத்துத் தாள்களிலும் பரீட்சை சுட்டெண்களைக் குறிப்பிடல் என்பவற்றை உங்கள் நேரப் பாதீட்டில் மீளாய்வுக்காக ஒதுக்கிய 10 நிமிட நேரத்தினுள் பரீட்சித்துப் பார்த்தல் மிக முக்கியம்.

ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கிய நேரம் நிறைவுற்றதும் அடுத்த வினாவுக்கு விடையளிக்க வேண்டும். தாமதம் ஆகுமாயின் அந்த வினாவுக்கு விடைய ளித்தலை உடனே நிறுத்திக் கொள்ளுங் கள். சில வினாக்களுக்கு விடையளிக்கும்போது, அதற்கு வழங்கப்பட்டுள்ள காலம் அதிகமெனத் தோன்ற இடமுண்டு. அவ்வாறான நிலைமைகளில் எஞ்சிய நேரத்தையும் முன்னர் நிறைவு செய்ய முடியாது போன வினாவுக்காக ஒதுக்க முடியும். நீங்கள் வெற்றிகரமாகத் தேர்வுக்கு முகம் கொடுத்த ஒருவராயின் பரீட்சை மண்டபத்திலிருந்து நிறைந்த மனத்துடன் மகிழ்ச்சியுடன் வெளியேறலாம்.

---

*இன்று அதன் 69ஆவது நினைவு தினம்*

## ஜப்பான் நாட்டைச் சீரழித்த அமெரிக்காவின்

# அணுகுண்டுத் தாக்குதல்

றொ.ராஜப்பிரகாஷ்

உலகத்தையே உலுக்கியெடுத்த நாள்களில் முதன்மையானவையாக ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் மீது அணுகுண்டு வீச்சு நடத்தப்பட்ட நாள்கள் கருதப்படுகின்றன. இந்தக் கொடிய சம்பவம் நிகழ்ந்து இன்றோடு 69 ஆண்டுகள் கடந்த போதிலும், ஜப்பானிய மக்கள் அந்தக் கொடூர நாள்களை இன்றும் மீளாத் துயரோடு நினைவு கூர்ந்து வருகின்றனர். ஜப்பானின் மீது அணுகுண்டு வீச்சு நடத்துவதற்கான வலுவான காரணங்கள் இல்லாமல் இல்லை. இரண்டாம் உலகப் போரின்போது உலகத்துக்கே குறிப்பாக அமெரிக்காவுக்கே ஜப்பான் சவால் விட்டுக் கொண்டிருந்தது. இரண்டாம் உலகப் போரின் உச்சக் கட்டப் பகுதியில் அமெரிக்காவின் அழகும் சிறப்பும் வாய்ந்த அதிமுக்கிய பேர்ள் துறைமுகத்தை ஜப்பானியர்கள் தாக்கி நாசம் செய்தனர். இந்தத் தாக்குதலில் 189 ஜப்பானிய விமானங்கள் பங்குபற்றின. இந்தச் சரமாரியான தாக்குதலில் அமெரிக்காவின் 2 போர்க் கப்பல்கள் முழுமையாக மூழ்கடிக்கப்பட்டதுடன் 188 போர் விமானங்களும் முற்றாக நாசமாக்கப்பட்டன. மேலும் 6 போர்க் கப்பல்களும் 155 விமானங்களும் பகுதியளவில் நாசம் செய்யப்பட்டன. மேலும் 2,300 போர் வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 1,200 வீரர்கள் காயமடைந்தனர். இதைவிட 55 பொது மக்களும் கொல்லப்பட்டனர். இதற்குப் பழி வாங்குவதற்காக அமெரிக்கா காத்திருந்தது. இதன் விளைவாகப் பல ஆண்டுகாலம் பரிசோதிக்காமல் வைக்கப்பட்டிருந்த அணுகுண்டுகளை ஜப்பானின் ஹிரோசிமா மற்றும் நாகசாகி நகரங்களில் பரிசோதிக்க அமெரிக்கா முடிவெடுத்தது. ஆனால் இந்த அணுகுண்டு வெடிப்பால் இந்த அளவுக்கு கொடூரம் நிகழுமென அமெரிக்காவே



எதிர்பார்க்கவில்லை.

1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி காலை 8.10 மணியளவில் அமெரிக்காவின் 'எனோலாகே' என்ற போர் விமானம் அந்த அப்பாவிகளின் நகரத்தின் நடுப் பகுதியில் முதலாவது அணுப் பரிசோதனையை மேற்கொண்டது. இந்தப் பேராபத்து நிறைந்த அணுகுண்டுக்கு அமெரிக்கா விளையாட்டாக வைத்த பெயர் 'சின்னப்பையன்' என்பதாகும். 4,400 கிலோ கிராம் நிறையுள்ள இந்த அணுகுண்டு ஹரோசிமாவை நன்கு பதம்பார்த்தது. இந்தப் பேரழிவால் ஜப்பானே உறைந்துபோய் இருந்த வேளையில் மூன்று நாள்கள் கழித்து அதாவது 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி முற்பகல் 11.02 மணியளவில் ஜப்பானில் நாகசாகி நகர்மீது 2ஆவது அணுகுண்டை அமெரிக்கா வீசியது. இதற்கு அமெரிக்கா வைத்த பெயர் 'குண்டு மனிதன்'.

இந்த அகோரக் குண்டு வீச்சுக்களால் ஏற்பட்ட உயிரிழப்புக்களையும் பேரழிவுகளையும் துல்லியமாக மதிப்பிட முடியவில்லை. வரலாறு காணாத பேரழிவு என்று மட்டுமே இதைச் சொல்ல முடியும்.

இரண்டு அணுகுண்டு வீச்சுக்களாலும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குண்டு வீச்சுக்கள் இடம்பெற்ற பின்னரும் பல மாதங்களாக ஏன், பல வருடங் களாகப் பலர் குற்றுயிராக இருந்து கதிர்வீச்சின் தாக்கத்தால் இறந்தனர் என்றும் தெரிய வருகின்றது. நெஞ்சு பதறும் இந்தக் கொடூரச் செயல் குறித்து உலகெங்கும் இன்றும் சர்ச்சைகள் தொடர்கின்றன. அணுகுண்டு நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு பிரமாண்டமான சத்தத்துடன் வெடித்தது. 2000 அடிகளுக்கும் மேலாகத் தீப்பிளம்புகள் எழுந்தன. பேரிடியோடு இரண்டாவது சூரியன் தோன்றியது போன்று அந்தக் காட்சி அமைந்திருந்தது. சுமார் 16 கிலோமீற்றர் நிலப்பரப்பில் இருந்த அனைத்தும் முழுமையாக அழிந்தன. கட்டடங்கள் தரைமட்டமாயின, தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டன. ஜப்பானியரின் வழிபாடுகளின்போது பயன்படுத்தப்படும் உலோகச் சொரூபங்கள் வெப்பத்தால் உருகின. ஹிரோசிமா மீது குண்டு வீசப்பட்டு 16 மணி நேரம் கழித்து அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்து வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலமாகவே ஜப்பானுக்கும், ஏனைய உலக நாடுகளுக்கும் ஏன் அமெரிக்காவுக்கும்கூட அணுகுண்டின் விபரீதம் விளங்கியது. இந்தக் குண்டு வெடிப்பு குறித்து ஜப்பான் வெளியிட்ட அறிக்கையில்; 'சமாதிகள் எழுதப்படாத சுடுகாடாக ஹிரோசிமா மற்றும் நாகசாகி நகரங்கள் காணப்பட்டன' எனக் குறிப்பிடப் பட்டது. இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்து பல ஆண்டுகள் ஆன பின்பும் ஏன் இன்றும் கூட சதைப் பிண்டங்களாகவும் கை, கால், கண், மூக்கு போன்ற உடல் பாகங்கள் இன்றி ஊனமாகவும் குழந்தைகள் பிறக்கின்றன.

இந்தப் பேரழிவைக் கண்டு அணுவின் அபாயத்தை உணர்ந்த உலக நாடுகள் பலவும் அணுகுண்டு அச்சுறுத்தலுக்கு எதிரான செயற்றிட்டங்களை முன்னெடுக்கின்றன. ஆனால் உலக நாடுகள் தமது ஆயுத பலத்தை அணு ஆயுதங்களின் கையிருப்பைக் கொண்டே உறுதி செய்கின்றன. ஏனைய நாடுகளுக்குச் சவால் விடுகின்றன. இது உலகில் இன்னமும் அணுகுண்டுகளின் அச்சுறுத்தல் நீங்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுவதோடு, உலக நாடுகள் இன்னொரு ஹிரோசிமா மற்றும் நாகசாகிக்காகக் காத்திருப்பதை உணர்த்துகின்றது.

இன்று பல நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் இடம்பெற்று வருகின்றன. இவை நாடுகளுக்கு இடையேயும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. இந்த நிலையில் மூன்றாவது உலகப் போர் ஒன்று இடம்பெறுமாயின், அங்கு அணுகுண்டுகள் பயன்படுத்தப்படும் சாத்தியங் கள் அதிகளவில் உள்ளன. இதனால் முழு உல குமே ஹிரோசிமாவாகவும் நாகசாகியாக வும் மாறிவிடக் கூடிய அவல நிலையை நிராகரிக்க முடியாது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: மற்றவர்களுடன் பகை ஏற்படலாம். நெருக்கடியான நேரத்தில் உறவி ரர்கள், நண்பர்கள் உங்களை விட்டு விலகிச் செல்லலாம். மனதில் நிலையான எண்ணம் இருக்காது. எதிர்பார்த்த உதவிகள் கிடைக் தும்.



**இடபம்**: தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.



**மிதுனம்**: குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். பணத் தேவை பூர்த்தியாகும். நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.



**கடகம்**: எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் தடுமாற்றம் உண்டாகும். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும்.



**சிங்கம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதற்றத்துடன் காணப்படுவார்கள். பிரிந்த நண்பர்கள் உங்களைத் தேடி வருவார்கள்.



**கன்னி**:குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தைத் தூண்டுவதாக இருக்கும். பிள்ளைகளுடன் அனுசரித் துச் செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும் பயணாங் களின்போதும் கூடுதல் கவனம் தேவை.



**துலாம்**: எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மன உறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். நீண்ட நாள்களாக இருந்த பிரச்சினை குறையும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும்.



**விருச்சிகம்**: வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும்.



**தனுசு**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு. வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும். சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.



**மகரம்**: பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். அதேநேரத்தில் அவர்களால் செலவும் வரும். உங்களது முயற்சிகளுக்கு இருந்த தடைகள் அகலும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப் பீர்கள். அலுவலகங்களில் பாராட்டுப் பெறுவீர்கள்.



**கும்பம்**: மற்றவர்களிடம் அனுசரித்துச் செல்லுங்கள். நண்பர் களிடம் பகை ஏற்படலாம். பிடிவாதத்தை விடுவதால் காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம். அலுவல கங்களில் அவதானமாகச் செயற்படவும்.



**மீனம்**: பயணம் மூலம் சாதகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும். புதுவியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும்.

## நாளை

**ஆடி-22 வியாழக்கிழமை | 07.08.2014**

திதி: ஏகாதசி மு.ப.09.45 வரை
நட்சத்திரம்: மூலம்
பி.இ.04.55 வரை

சுபநேரம்: 07.34-09.04 வரை
இராகுகாலம்: 01.34-03.04 வரை
ஏகாதசி விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## சமயம், புலத்தொடர்பை அடிப்படையாகக் கொண்டது

எங்கள் இந்து மூதாதையர் கள் தனியிடத்தில் அமர்ந்து, இறைவனையும் ஒழுக்கத் தையும் பற்றிச் சிந்தித்தார் கள். அதே நோக்கத்துக் காகப் பயன்படும் அறிவுத் திறனை நாங்கள் பெற்றி ருந்தோம்.ஆனால்,பொருள் தேடுதலில் எங்களுக்குள்ள வேகத்தால் அந்த அறிவுத் திறமையைமீண்டும்இழந்து வருகிறோம்.

தனக்குத் தானே நோய் தீர்க்கும் திறன் உடலுக்குச் சிறிதளவு உண்டு. மன நிலை, மருந்து, பயிற்சி போன்ற பலமுறைகள் உட லிலுள்ள நோய் தீர்க்கும் ஆற்றலைச் செயலுக்குக் கொண்டுவர வல்லவை. உடலில் சஞ்சலம் நேரும் போதெல்லாம், உடலின் துணையைக் கொண்டே அந்தச் சஞ்சலத்தைப் போக் கிக்கொள்ள வேண்டும். நரம்பின் பிடிப்புகளிலி ருந்து நாம் விடுபடாத வரை அவற்றை நாம் புறக் கணிக்க முடியாது.

உணர்வுக்கு வராத மனம் எனஒன்றுஉள்ளது;ஆனால், அது மனித அமைப்பின் ஒரு பகுதியேயாகிய உணர் வுள்ள மனதின் ஆதிக்கத்தில் உள்ளது. தத்துவ ஆராய்ச்சி என்பது மனத்தைப் பற்றி உத்தேசமாகச் சொல்வதே. அறிவுக்கு ஓர் ஆதாரமான காட்சியை அதாவது புலத் தொடர்பை அடிப்படையாகக் கொண்டது சமயம். உணர்வு கடந்த மனதைத் தொடுவது எதுவோ அதுவே உண்மை. நேரடிக் காட்சி மூலம் சம யத்தைக் கண்டவர்கள் ஆப் தர்கள். நீங்களும் கடைப் பிடித்தால், அந்த நிலையை அடையலாம் என்பதே அதற் குச் சான்று. ஒவ்வொரு சாஸ்திரத்துக்கும் ஏற்ற முறை யும் கருவியும் உண்டு. சமை யல் அறையில் இருக்கும் பாத்திரங்களைப் பயன் படுத்தி வான இயல் அறி ஞர் ஒருவர் சனிக்கிரகத் தைச் சுற்றியுள்ள வளை யத்தை உங்களுக்குக் காட்ட முடியாது, அதற்குத் தொலை நோக்கிக் கண் ணாடி தேவை. இதே போல, சமயத்தின் பேருண்மை களைக் காண, முன்னரே அவற்றைக்கண்டவர்களின் முறைகளையே நாமும் பின்பற்ற வேண்டும்; சாஸ் திர அறிவு விரிவடைய விரி வடைய அவற்றை ஆரா யும் முறைகளும் முன்னரை விட வேறுபடுகின்றன.

# மழலை மொழி



படுத்துறங்கும் குழந்தை களை மிகவும் அழகிய வடி வில், வித்தியாசமான கோணங் களில் பெண்ணொருவர் ஒளிப்படமெடுத்து இணை யத்தளங்களில் வெளியிட் டுள்ளார்.

அவரது ஒளிப்படங்களில், அழகிய சிறிய முகங்களைக் கொண்ட குழந்தைகள் தங் களது உணர்வுகளை வெளிப் படுத்தும் காட்சிகள் தத்ரூப மாக அமையப்பெற்றுள்ளன. சேன்டி போர்ட் என்ற 35 வயது டைய பெண்ணே உள்ளத்தை கவர்ந்திழுக்கும் இந்தப் ஒளிப் படங்களை பிடித்து வெளி யிட்டுள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | | 5 | 2 | | | 8 | 1 |
| 2 | | | 6 | | | | | |
| 5 | | 6 | | 3 | | | 2 | |
| | 2 | | | | 6 | | | 7 |
| | 3 | | | 7 | | | 1 | |
| 9 | | | 4 | | | | 5 | |
| | 4 | | | 8 | | 1 | | 2 |
| | | | | | 3 | | | 9 |
| 7 | 1 | | | 4 | 9 | | 6 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 1 | 8 | 6 | 3 | 2 | 7 | 5 |
| 8 | 6 | 2 | 5 | 7 | 1 | 3 | 9 | 4 |
| 5 | 3 | 7 | 2 | 4 | 9 | 8 | 1 | 6 |
| 1 | 7 | 3 | 4 | 5 | 2 | 9 | 6 | 8 |
| 4 | 2 | 5 | 9 | 8 | 6 | 7 | 3 | 1 |
| 6 | 8 | 9 | 3 | 1 | 7 | 5 | 4 | 2 |
| 3 | 9 | 4 | 1 | 2 | 5 | 6 | 8 | 7 |
| 7 | 5 | 8 | 6 | 9 | 4 | 1 | 2 | 3 |
| 2 | 1 | 6 | 7 | 3 | 8 | 4 | 5 | 9 |

# அனைத்துப் பல்கலை அணிகள் மோதும் உதைபந்தாட்டப்போட்டி யாழ்ப்பாணத்தில்

## எதிர்வரும் வெள்ளி முதல் ஞாயிறு வரை

யாழ்ப்பாணம், ஒக.6

2014 ஆம் ஆண்டுக்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிமுதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் 8,9,10 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 14 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றுகின்றன. லீக் போட்டிகளும் கால் இறுதிப் போட்டிகளும் 8ஆம், 9ஆம் (வெள்ளி, சனி) திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும். அரையிறுதிப் போட்டிகள், 3ஆம் இடத்துக்கான போட்டி, இறுதிப் போட்டி ஆகியவை 10ஆம் திகதி (ஞாயிறு) யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

ஆரம்ப நாளான 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் யாழ்.பல் கலைக்கழக மைதானத்தில், நடைபெறும் போட்டிகளுக்கான விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் எ.ஆசையானந்தனும்,



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் போட்டிகளுக்கு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் பி.எஸ்.மோகனக்குமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இறுதி நாளான 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டிக்கு விருந்தினராக யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளையும் காலை 9.30 மணிக்கு நடைபெறும் 2ஆவது அரையிறுதிப் போட்டிக்கு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் ஓய்வுபெற்ற உடற்கல்விப் போதனாசிரியரான எம்.பத்மநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் 3ஆம் இடத்துக்கான போட்டிக்கும் 4.30 மணிக்கு இடம்பெறும் இறுதிப் போட்டிக்கும் பிரதம விருந்தினராக 12ஆவது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவும், சிறப்புவிருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் வணக்கத்துக்குரிய கலாநிதி டீ.எஸ்.சொலமனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக 6

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ வி.க. மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் வி.க. அணியை எதிர்த்துக்கரவைச் சுடர் வி.க. அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் வி.க. அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் வி.க. அணி மோதவுள்ளது.

* * *

றொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம் மகாத்மா சனசமூக நிலையம் என்பன யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.நீக்கிலஸ் வி.க. அணியை எதிர்த்து காளியம்பாள் வி.க. அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஒக 6


தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தின்ம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

## யாழ். மத்திய கல்லூரி வெற்றி



யாழ்ப்பாணம், ஒக 6

இலங்கைப் பாடசாலைக் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான பிரிவு 3 இற்கான மூன்றாம் சுற்றுத் தொடர் ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி 99 ஒட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 48 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 211 ஒட்டங்களைப் பெற்றது.

இதில் கோமோதரன் 69 ஒட்டங்களையும், ஐரேகன் 65 ஒட்டங்களையும், திரேசன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் பிரகாஸ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 44 ஒட்டங்களைக் கொடுத்து 3 இலக்கையும், டினுசன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13ஒட்டங்களைக் கொடுத்து 2 இலக்கையும் வீழ்த்தினர்.

212 ஒட்டங்கள் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 32 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 110 ஒட்டங்களைப் பெற்றது.

இதில் சரண்ராஜ் 31 ஒட்டங்களையும், டினோஷன் 27 ஒட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் தினுஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஒட்டங்களுக்கு 3 இலக்கினையும், திரேசன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஒட்டங்களுக்கு 3 இலக்கினையும், அலன்ராஜ்; 6பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஒட்டங்களுக்கு 3 இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

# பாடும்மீனின் வெற்றிக்கிண்ணம் யாழ். பல்கலை அணி வசம்



ஆட்ட நாயகனாகத் தெரிவான சென்.மேரிஸ் அணி வீரன் ஜூட்டுக்கு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை விருது வழங்குகின்றார். (த-23)



ஆட்ட தொடர் நாயகனாகத் தெரிவான யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் ஞானரூபனுக்கு பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பிரான்ஸ் கிளைச் செயலாளர் எமிலியானுஸ் யூட் விருது வழங்குகின்றார். (த-23)

யாழ்ப்பாணம் ஒக. 6

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி முதலாவது நிமிடத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் ஞானரூபன் தனது அதிரடி ஆட்டத்தினால் எதிர் அணி வீரர்களின் வியூகங்களைத் தகர்த்து தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

பதிலுக்குச் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோலினைப் பெறுவதற்காக எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

இதன் போது சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் நிதர்சன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இதனை அடுத்து இரண்டு அணியினரும் தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்து எதிர் அணியின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆனால் கோல்களைப் பெறமுடியவில்லை. இதனால் முதற்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கினர். இரு அணிகளின் முன் கள வீரர்களும் தமக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். இரண்டாம் பாதி ஆட்டம் முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜூட் தெரிவானார். ஆட்ட தொடர்நாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் ஞானரூபன் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் நிருசாந் தெரிவானார். (த-23)

# பாகிஸ்தானின் இடத்தை தட்டிப்பறிக்குமா இந்தியா?




ர்வதேச டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி ஆவது இடத்தில் நீடிக்கிறது.
டெஸ்ட் போட்டிகளில் சிறந்த அணிக்கான தர வரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை பாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது.
தல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்கா (124 ள்ளி), ஆஸ்திரேலியா (123 புள்ளி), பாகிஸ் ான் (103 புள்ளி) அணிகள் உள்ளன.
மீபத்தில் நடந்த இங்கிலாந்து அணிக்கெதிரான ஆவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த போதிலும், இந்தியா 102 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டது.
ந்தப்பட்டியலில், இந்திய அணி 3ஆவது இடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளது. அதற்கு இங்கிலாந்துக்கு எதிரான மீதமுள்ள இரண்டு டெஸ்டிலும் இந்திய அணி சிறப்பாக செயற்பட வேண்டும்.
அதேபோல் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி இழக்க வேண்டும். இதன்மூலம் இந்திய அணி 3ஆவது இடத்துக்கு முன்னேறலாம்.
அதேசமயம் பாகிஸ்தான் அணி, 3ஆவது இடத்தை தக்கவைத்துக் கொள்வது மட்டுமல்லாமல் முதலிடத்தை பிடிக்கவும் போராடும். இதனால் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும். (கு)

# இலங்கையை வீழ்த்துவோம்




டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தி தரவரிசையில் முதலிடம் பிடிப்போம் என பாகிஸ்தான் அணியின் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறியுள்ளார்.
இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளது. இதன் முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்கவுள்ளது.
தற்போது டெஸ்ட் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள பாகிஸ்தான் இதுவரை முதல் இடத்தை பிடித்ததில்லை. அதிகபட்சமாக கடந்த 2006 ஆம் ஆண்டு 2ஆவது இடத்துக்கு முன்னேறியது.
இது பற்றி பாகிஸ்தான் அணித் தலைவர் கூறுகையில்; இலங்கையை இந்தத் தொடரில் வீழ்த்தி பிறகு ஒக்ரோபரில் நடக்கவுள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலும் வென்று தரவரிசையில் முதலிடம் பிடிப்போம்.
நீண்ட நாள்கள் கழித்து டெஸ்ட் போட்டியில் விளையாடுவதால் உடற்தகுதி உள்ளிட்ட விவகாரங்களில் நல்ல பயிற்சி செய்தோம். பிறகு உத்திரீதியாக சிறிது கவனம் செலுத்தினோம். இப்போதைக்கு காலி மைதானத்தில் தொடங்கும் முதல் டெஸ்ட் பற்றியே கவனம் உள்ளது. முதலிடத்தைப் பிடிக்க எங்களுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை தவறவிடப்போவதில்லை என்று கூறியுள்ளார். (கு)

# டோனியையும் திட்டினார் அன்டர்சன்



ஜடேஜாவை தகாத வார்த்தைகளில் திட்டிய விவகாரத்தில் டோனியையும் ஆபாச வார்த்தைகளால் அன்டர்சன் திட்டியுள்ளார் என்ற புதிய செய்தி வெளியாகியுள்ளது.
இந்தியா, இங்கிலாந்து இடையிலான நாட்டிங்காமில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின் போது ஜடேஜா மற்றும் அன்டர்சன் இடையே மோதல் ஏற்பட்டது.
இந்த விவகாரத்தில் முதலில் ஜடேஜாவுக்கு போட்டிக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.
பின்னர் நடந்த விசாரணையில் இருவர் மீதும் எந்தவிதமான தவறும் இல்லை என அன்டர்சன் மீதான புகார்கள் கைவிடப்பட்டு, அவர் விடுவிக்கப்பட்டார். அதேபோல ஜடேஜா மீதான புகாரும் கைவிடப்பட்டது.
இந்த மோசமான தீர்ப்பு இந்திய அணிக்கு அதிருப்தி அளித்தது. இதனை இந்திய அணித்தலைவர் டோனி கூட கடுமையாக விமர்சனப்படுத்தியுள்ளார்.
இந்நிலையில் அன்டர்சன், ஜடேஜாவை மட்டுமல்லாமல் அணித் தலைவர் டோனியையும் ஆபாச வார்த்தைகளால் திட்டியது பற்றிய செய்தி வெளியாகியுள்ளது.
இதைத் தொடர்ந்து டோனி அப்போதே பதிலுக்கு அன்டர்சனை விமர்சித்துள்ளார். ஆனால் ஆபாசமாக ஏதும் பேசவில்லை. மாறாக இந்திய அணியினர் அறை பக்கம் மட்டும் வந்து விடாதீர்கள் என்று எச்சரித்துள்ளதாக ஆங்கில இணை யத்தளம் ஒன்று கூறியுள்ளது. (கு)


# உங்களை நான் மகிழ்விப்பேன்



டெஸ்ட் தோல்வியால் வருத்தமாக இருக்கும் ரசிகர்களை நான் மகிழ்ப்பேன் என்று டுவிட்டரில் பதிவு செய்திருந்தார் இந்திய தடகள வீரர் விகாஸ் கௌடா.
பொதுநலவாயப் போட்டிகளின் போது இந்திய தடகள வீரர் விகாஸ் கௌடா, இந்தியா டெஸ்ட் போட்டியில் தோற்றது வருத்தமளிக்கிறது. ஆனால் நான் அந்த வருத்தத்தை போக்குவேன் என்று டுவிட்டரில் பதிவு செய்திருந்தார்.
ஆனால் அவர் சென்னது போலவே அன்று இரவு நடைபெற்ற ஆடவருக்கான தட்டு எறிதலில் 63.64 மீற்றர் தூரத்துக்கு தட்டை எறிந்து முதலிடம் பிடித்து தங்கம் வென்று அசத்தினார்.
இதற்காக கர்நாடக அரசிடம் இருந்து ரூ 75 லட்சம் சன்மானம் பெற்றார் விகாஸ் கௌடா. கூடவே, மில்கா சிங்குக்குப் பின் தடகளத்தில் தங்கம் வென்றவர் என்ற பெருமையையும் பெற்றார்.
இதற்கு முன் 1958 இல் நடைபெற்ற பொதுநலவாயப் போட்டியில் மில்கா சிங், 400 மீற்றர் ஓட்டத்தில், இலக்கை 46.71 வினாடிகளில் கடந்து தடகளத்தில் இந்தியாவுக்கு முதல் தங்கத்தை வென்றது குறிப்பிடத்தக்கது. (கு)

# இலங்கைக்கு புதிய சிக்கல்

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மால் காயமடைந்து இருப்பதால் இலங்கைக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.
சமீபத்தில் நடந்து முடிந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை 1-0 என்ற கணக்கில் தொடரை பறிகொடுத்தது.
இந்நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகின்றது. இந்தத் தொடரை கைப்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது இலங்கை.
ஆனால் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மாலுக்கு காயம் ஏற்பட்டிருப்பதால் அவர் 2 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ள மாட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இது இலங்கைக்கு நெருக்கடியை உருவாக்கியுள்ளது. மாற்று வீரருக்கான அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை. (கு)






## இலங்கையின் உதவி, சுழற்பந்து பயிற்சியாளர்கள் பதவி விலகல்

இலங்கை கிரிக்கெட் அணியின் உதவிப் பயிற்சியாளர் ருவான் கல்பகே மற்றும் சுழற்பந்து பயிற்சியாளர் பியால் விஜேயதுங்க ஆகியோர் தங்களது பதவி விலகல் கடிதத்தை இலங்கை கிரிக்கெட் சபையிடம் உத்தியோக பூர்வமாக கையளித் துள்ளதாகக் கிரிக்கட் சபை தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணிக்கான பயிற்சியாளராகப் பணிபுரியும் ஹத்துருசிங்கவின் உதவிப் பயிற்சியாளர்களாக இணைவதற்கான சந் தர்ப்பம் கிடைத்ததை தொடர்ந்தே இருவரும் இவ்வாறான முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.


தமது சுய விருப்பத்தின் பேரிலேயே பதவி விலகல் கடிதத்தை ஒப்படைத்துள்ளனர் எனவும் அவர்களது விருப்பத்தின் படி இலங்கையிலோ பங்களாதேஷிலோ தமது சேவையை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக் கப்படுகின்றது. (த)

## இங்கிலாந்து அணியில் ஸ்டீவ் பின்

இங்கிலாந்து அணியில் வேகப் பந்து வீச்சாளர் லிம் பிளங்கட் டுக்கு பதிலாக ஸ்டீவ் பின் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியா வுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் களமிறங்கு வார்.

வேகப்பந்து வீச்சாளரான பிளங்கட் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 3 இலக்குகளும், 2ஆவது டெஸ்ட் போட்டியில் 4 இலக்குகளும் வீழ்த்தினார். காயம் காரணமாக 3ஆவது டெஸ்ட்டில் அவர் விளையாட வில்லை. 2ஆவது டெஸ்ட் போட்டிமுடிவின் போது அவருக்கு இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. எனவே அவர் அணியில் இருந்து விலகினார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அடைந்த மோசமான தோல் விக்குப் பின் அணியில் ஸ்டீவ் பின் சேர்க்கப்படவில்லை. இதுவரை 23 டெஸ்ட் போட்டி களில் பங்கேற்றுள்ள அவர் 90 இலக்குகளை வீழ்த்தி யுள்ளார். (த)



## மைதான அலுவலகக் கட்டடத்துக்கு தீ வைத்தவர் சிம்பாப்வே அணியில்



ஹராரே விளையாட்டு அணியின் டெஸ்ட் மைதானத்தில் உள்ள யூனியன் அலுவலக கட்டடம் மற்றும் வேறொரு இடத்தில் உள்ள அக்கடமி கட்டடம் ஆகிய வற்றிற்கு தீ வைத்த மார்க் வெர்மியூலன் என்ற வீரர் தற்போது சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

2006ஆம் ஆண்ட் அவர் இரண்டு கட்டடங்களுக்குத் தீ வைத்ததை நீதிமன்ற விசாரணையில் ஒப்புக் கொண்டார். ஆனால் அப்போது தான் மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாக திறம்பட நீதிமன்றில் அவரது வழக்கறிஞர் வாதாட தண்டனையிலிருந்து தப்பினார் எனவே 2008ஆம் ஆண்டு இந்த வழக்கின் தீர்ப்பு வெளியான போது அவரை மனநிலை சரியில்லாதவர் என்பதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் பந்து தலையில் அடித்து தனக்கு வலிப்பு நோய் ஏற்பட்டதால் மனநிலை பாதிக்கப்பட்டது என்ற வாதத்தை அவரது வழக்கறிஞர் திறம்பட நிரூபித்தார்.

அந்த மார்க் வெர்மியூலன் என்ற வீரர் தற்போது சிம்பாப்பே அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 35 வயதான மார்க் வெர்மியூலன் சிம்பாப்வே ஏ அணிக்காக ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக சதம் எடுத்ததால் சிம்பாப்வே தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பிடித்துள்ளார்.

சிம்பாப்வேக்கு தென்னாபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் பயணம் மேற்கொள்கின்றன.

வெர்மியூலன் இதுவரை 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள் ளார். கடைசியாக 2004ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்காக ஆடினார். பிறகு 2009ஆம் ஆண்டு ஒருநாள் அணியில் இடம்பெற்றார்.

தென்னாபிரிக்கா அணி சிம்பாப்வே அணிக்கு எதிராக ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. அந்தப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை தொடங்குகிறது.

பிறகு ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, சிம்பாப்வே பங்கு பெறும் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. (த)

## மரண அறிவித்தல்



### திருமதி மங்கையர்க்கரசி ராஜாராம்

[முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்), முன்னாள் விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம் (மகரகம)]


சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி ராஜாராம் நேற்று (05.08.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான பொன்னையா தம்பதியரின் அன்பு மகளும், இ.இராஜாராமின் அன்பு மனைவியும், தனபால சிங்கம், பரராஜசிங்கம், குமாரசிங்கம், சிவபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னபூரணம், சாவித்திரி, நளினி, ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நளினி, சஞ்சயா, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2014) புதன்கிழமை காலை 9 - 12 மணி வரை ஜெயரட்ண மலர்ச்சாலையிலும், பின்னர் நாளை (07.08.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு இல.4, சுதுமலை வீதி, தாவடியில் கிரியைகள் நடைபெற்று, பி.ப 2 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 077 990 6867 (c/15351) தகவல்: குடும்பத்தினர்.

## உசேன் போலட்டின் கனவு!



கிளாஸ்கோவில் நடந்த பொதுநலவாய விளையாட்டு போட்டியில், காயம் காரணமாக தனிநபர் பந்தயங்களை தவிர்த்த உசேன் போல்ட் 100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் கடைசி சுற்றில் ஓடி ஜமெய்க்கா அணிக்கு தங்கம் பெற்று கொடுத்ததுடன், அந்த அணி சாதனை படைக்கவும் முக்கிய காரணமாக விளங்கினார்.

தனது அடுத்த குறி என்ன என்பது குறித்து உசைன் போல்ட் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது:-

200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் 19 வினாடிக்குள் பந்தயக் தூரத்தை கடக்க விரும்புகிறேன். இது என்னுடைய மிகப்பெரிய குறிக்கோள் மற்றும் கனவுகளில் ஒன்றாகும். 100 மீற்றர் ஓட்டத்தில் நான் போதிய அளவு சாதித்து விட்டதாக கருதுகிறேன்.

100 மீற்றர் ஓட்டத்தில் இன்னும் வேகமாக ஓட வேண்டும் என்று மக்கள் விரும்புவது எனக்கு தெரியும். இருப்பினும் எனக்கு பிடித்தமான 200 மீற்றர் ஓட்டத்தையே நான் அதிகம் விரும்புகிறேன். அதில் சிறப்பாக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

உலக சாதனைகள் ஒரு நாள் தகர்க்கப்பட தான் செய்யும். யார் அடுத்து ஆதிக்கம் செலுத்துவார்கள் என்பதை ஒரு போதும் அறிய முடியாது. இருப்பினும் 200 மீற்றர் ஓட்டத்தில் 19 வினாடிக்குள் கடந்து புதிய சாதனை படைக்க நான் கடினமாக பயிற்சி மேற்கொள்வேன். அதன் பிறகு நான் என்ன செய்கிறேன் என்பதை பார்க்கலாம்-இவ்வாறு உசேன் போல்ட் கூறினார்.(த)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாக்கியம் பாலநாதன்

யாழ். சைவமடம் வளமாரி கட்டுவன் தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும் இலந்தைகட்டி வைரவர் கோயிலடி ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் பாலநாதன் நேற்று (05.08.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியம்-இளையதம்பி தம்பதியரின் அன்பு மகளும், பொன்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொ. பாலநாதனின் (ஆசிரியர்) மனைவியும், இ. சிவலிங்கம், இ.விக்கினேஸ்வரன், இ.சிவநாதன், காலஞ்சென்ற சிவஞானவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பா. ஜெயசீலன் மற்றும் பா.ஜெயவதனி (கனடா), பா. ஜெயக்குமார் (பிரான்ஸ்), பா.ஜெயமோகன் (பிரான்ஸ்), பா.ஜெயகௌரி (ஆசிரியை வயாவிளான் ம.ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயும், பொ. சிவாகரன், க.தனேஸ்வரராஜா, ஜெ.சரோஜினி ஆகி யோரின் அன்பு மாமியும், ஒளடதன், மீனாட்சி, பவுத்திரன், சபிஷன் ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
கௌரி:- 077 6393 475

(50621)(10)

## ஆண் பெண் தாதியர்
## ஆண் பெண் பரிசாரகர் (Attendant)

பரமேஸ்வரா சந்தி, 342 பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள நொதன் சென்றல் வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு பயிற்றப்பட்ட அனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதி அனுபவங்களுக்கேற்ப கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். தகுதியுடையோர் சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கவும். அல்லது விண்ணப்பிக்கவும்.

1. ஆண் பெண் தாதியர்
2. ஆண் பெண் பரிசாரகர்



பணிப்பாளர்.

(சி/15340)(10.6)

## சின்னச் சின்ன விடயங்கள்

....கொழும்பில் ஒரு சூதாட்ட நிலையம் ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு சிலர் கைது செய்யப்பட்டனர். உடனடியாகவே பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்லவின் கட்டளையின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதுடன், சுற்றி வளைப்பில் ஈடுபட்ட அத்தனை பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டனர். அதன்பின்பு இன்னொரு பொலிஸ் குழுவினால் அந்தச் சூதாட்ட விடுதி சுற்றி வளைக்கப்பட்டதால் ஏற்கனவே நடந்த விடயங்கள் அம்பலத்துக்கு வந்தன. பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் இழுத்துமூடப்பட்டது. லக்ஷமன் ஹுலுகல்ல மனநோய் சம்பந்தமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக ஒரு உத்தியோகப்பற்றற்ற செய்தி வெளிவந்தது. எப்படியிருப்பினும் இது கூட அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சின்ன விடயம்தான்...




இந்தவார இதழில்....

# இலங்கையில் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியான நிலையே

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார், ஓக.6

ஊடகம் என்பது உண்மைகளை வெளிக் கொண்டு வருவதே. ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் ஊடக சுதந்திரம் என்பது கேள்விக் குறியாகியுள்ளது.

ஊடகவியலாளர்கள் பலர் கொலை செய்யப்படுவதும், காணாமறப்போவதும், ஊடக அலுவலகங்கள் தாக்கப்படுவதும் என நீண்டகாலமாக இருந்துவரும் துர்ப்பாக்கிய நிலை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

உண்மைகள் வெளிவந்து விடும் என்ற அச்சத்தாலேயே அரச கையாள்கள் இவ்வாறான தீய காரியங்களை மேற்கொள்கின்றனர் என்று மன்னார் ஆயர் இராயப்பு ஜேசேப் ஆண்டகை தெரிவித்தார்.

மன்னாரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (வ-56)

## திருட்டுப் போன வைர அட்டியலை மீட்டனர் பொலிஸார்

வலி.வடக்கு, ஓக.6

சுதுமலையிலுள்ள ஒரு வீட்டில் வைர அட்டியலொன்றைத் திருடிய பெண் ஒருவர் பொலிஸாரிடம் அகப்பட் டுக் கொண்டார். அட்டியலைக் கைப்பற்றிய பொலிஸார் அந்த வீட்டில் வேலை செய்த பெண்ணைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

சுதுமலை மத்தியிலுள்ள ஒரு வீட்டில் அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியான வைர அட்டியல் மாயமாக மறைந்துவிட்டது. அட்டியல் காணாமற்போனமை குறித்து அதிர்ச்சிக்குள் ளான வீட்டுப் பெண்மணி இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டை அடுத்து விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் அந்த வீட்டில் வேலை செய்து வந்த பெண்ணை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்குட்படுத்திய போது திருட்டு அம்பலத்துக்கு வந்தது. அட்டியலும் மீட்கப்பட்டது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஓ-115)

**விற்பனைக்கு**

63 - XXXL பஸ் விற்பனைக்கு அத்துடன் அல்சேசன் பெண் நாயும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 015 7414

(50596) (45.6.3)

**J.C.B (பைக்கோ) வாடகைக்கு**



குறிப்பு: ★போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
★ஒப்பந்தவேலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்) /077 984 7285 (பருத்தித்துறை)

புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம்.

(50575) (4.6.3)

**2Annex வாடகைக்கு**

கண்டி வீதி, அரியாலை சித்திவிநாயகர் கோயிலுக்கு அருகில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள Annex வாடகைக்குண்டு. பல்கலைக்கழக மாணவர்கள்/ உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

(50591) (12.3.6)

தொடர்பு:
077 337 1824/077 401 2901

**சாரதி தேவை**

சிறிய ரக வாகனத்திற்கு சாரதி தேவை.

தொடர்புகளுக்கு:
சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

077 344 9603

(ஓ.15327) (12.3.6)

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**




லண்டனில் வசிக்கும் திரு.திருமதி அகிலன் சிவதர்சினி தம்பதியரின்
செல்வப்புதல்வி

06.08.2014

**ஹவிஷா**



Wish your a Happy Birthday

இன்று (06.08.2014) புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை
லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவர் பல்கலையும் கற்று கோண்டாவில் பழனி ஆண்டவர், வெள்ளைப் பிள்ளையார்,
நல்லூர் முருகன், ஏழாலை அம்மன் திருவருள் பெற்று சீரும் சிறப்புடனும்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.






**வாழ்த்துபவர்கள்:**

லண்டனில் வசிக்கும் அப்பா - அகிலன்
அம்மா - சிவதர்சினி
லண்டனில் வசிக்கும் அண்ணாமார் - டிலன், கிலான்
இலங்கையில் வசிக்கும் பாசமுள்ள தாத்தா - வரதராசா
பிரியமுள்ள அம்மம்மா - றஞ்சிதமலர்
அத்தை - துசிதா
லண்டனில் வசிக்கும் அப்பப்பா - குமாரசாமி
இத்தாலியில் வசிக்கும் பெரியமாமா - மோகன்ராஜ் குடும்பம்
கனடாவில் வசிக்கும் சின்னமாமா - கமல்ராஜ் குடும்பம்
கனடாவில் வசிக்கும் குட்டிமாமா - உதயகுமார்
லண்டனில் வசிக்கும் மாமி - சைலா குடும்பம்
நோர்வேயில் வசிக்கும் சித்தப்பா - கபிலன்
நோர்வேயில் வசிக்கும் மாமி - சுமங்கலா குடும்பம்
ஜேர்மனியில் வசிக்கும் மாமி - அனுசலா குடும்பம்

இல. 302, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். S. வரதராசா

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 17 பேர் கைது

அம்பாறை, ஓக.6

அம்பாறை மாவட்டத்துக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களில் சட்டவிரோதமாக மின் சாரம் பெற்ற 17 பேர் அக் கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர் களை தலா ரூபா 50,000 சரீரப்பிணையில் விடுவித்த அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எம். ஜே.எம். நஸீம், அவர்களை அடுத்த மாதம் முதலாம் திகதி மீண்டும் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் அக் கரைப்பற்று, ஆலம்குளம், கண்ணகிபுரம், அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில், கொழும்பிலிருந்து வருகைதந்த இலங்கை மின்சார சபை விசேட அதிகாரிகளும் அக்கரைப்பற்று பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக வயர்கள் மூலம் மின்கம்பிகளில் கொழுவி மின்சாரம் பெற்றமை, ஒரு வீட்டிலிருந்து அயல் வீட்டுக்கு மின்சாரம் வழங்கியமை, மின்மானியில் சேதம் விளைவித்திருந்தமை போன்ற குற்றங்களின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)


## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் முதல்தர காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுப்படுத்தும் முகமாக கொடிகாமத்தில் தனது புதிய கிளையினை ஆரம்பித்துள்ளதுடன் கீழ்க் காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.



**வெற்றிடங்கள்**

1. விற்பனை முகாமையாளர்
2. காசாளர்
3. நிதி திட்டமிடும் உத்தியோகஸ்தர்
4. அலுவலக உதவியாளர்

**கல்வித் தகைமைகள்**

★. க.பொ.த. சா/தரம் கணித பாடம் உட்பட (6) பாடங்களில் சித்தி

★. வயது: 25-50 வரை

விண்ணப்பங்களை எதிர்வரும் 10.08.2014 இற்கு முன் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

C/o உதயன்
விளம்பர இல. 5006
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(50618)(10)


## இந்தியப் போலி நாணயங்களுடன் இருவர் கைது

மட்டக்களப்பு, ஓக.6

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி பகுதியில் இந்திய போலி நாணயம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வர்த்தகர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அதிகாரி ஜே.ஏ.யு.பி.ஜய சிங்கவின் வழிகாட்டலில் இந்திய நாட்டு ஐநூறு ரூபா பெறுமதியில் 98 தாள்கள் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் அதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இர்ண்டு வர்த்தகர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாகவும் வாழைச் சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிதிப்புட்டு முன தெரிவித்தார். (ற)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கைதடி நுணாவில், வைரவர் கோயிலுக்கு அருகில் 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 837 2002
(ஓ15715) (12.3.6)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

அழையுங்கள்: 077 9086 737
GUNAA BEST PC,
52, Hospital Road, Jaffna.
(50519) (10)

## மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | 19000/= | One way |
| கொழும்பு – சென்னை | 21900/= | Return |
| கொழும்பு – திருச்சி | 22400/= | Return |
| கொழும்பு – டோகா | 26000/= | One way |
| கொழும்பு – அபுதாபி | 26500/= | One way |
| கொழும்பு – மலேசியா | 32000/= | Return |
| கொழும்பு – சிங்கப்பூர் | 30500/= | Return |
| கொழும்பு – பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு – லண்டன் | 44800/= | One way |
| கொழும்பு – ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு – சுவிஸ் | 86700/= | Return |
| கொழும்பு – கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குநர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna
128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
Mobile 0773083820 www.nationtravels.com
Hot line 0114651199 Jaffna 0214920920


## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாக்கியம் நல்லையா

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற தம்பு நல்லையாவின் அன்பு மனைவியாகிய சிவபாக்கியம் நல்லையா 04.08.2014 திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- நாகம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், கைலைநாதன், சற்குணநாதன், பத்மநாதன், ஆனந்தேஸ்வரி மற்றும் அற்புதநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி, ஞானறஞ்சினி, புஸ்பாவதி, நவீந்திரன் மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.நிமலன், Dr.சுஜந்தன், சுஜிதா, சபேசன், சதீஸன், சுதர்சன், கலைவாணி, விசாலினி, சிந்து, கோபியா, அசோக், ரதன், லக்ஸ்மன், அஜானி, Dr.சிவானி, பிறேமகாந்தன், மயூரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், 07.08.2014 வியாழக்கிழமை அவரின் சாவகச்சேரி இல்லத்தில் பி.ப.2.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பித்து, பி.ப.3.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : Eng.ந.கைலைநாதன்(மகன்)
36,5/3A சின்சபா வீதி, வெள்ளவத்தை.
Tel : 0776961716, 0772511062
(C15718)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி இராசலிங்கம்

கொக்குவில் மேற்கு, சொர்ணவடலியைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி பூமணி இராசலிங்கம்** 04.08.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், நேசமணி, சபாபதி, ரகுபதி (கனடா), யோகமணி (கனடா), கலாமணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நந்தகுமார், தங்கவேலாயுதம் மற்றும் சுகுமார், இராஜேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும், சோபனா, தினேஷ், காலஞ்சென்ற சுலக்ஷனா மற்றும் சுஜீவ்காந், வனீசன், அனோஜன், ஹம்சா, ராயுலன், ராஜவன், ரவீனா, ஹரீஷ், விதூஷ், ஜெயகாந்தன், தமிழ்ச்செல்வி, அனோஜா, அமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஜித், விஷாந், யுவேதா, நிரோஷ், காயத்திரி, பரத், சுருதி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2014) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நீர்கொழும்பிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, சென்.ஜோசப் மாவத்தை,
ஏத்துகல, நீர்கொழும்பு.
T.P : 031 227 4167
(50547) (7.6.3)

தகவல்:
இ.சபாபதி (மகன்)


## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

பான் ஏஷியா வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் (D.S.OFFICE KARACHCHI MAIN HALL) எதிர்வரும் 09ம் திகதி (09.08.2014 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இக் கடனின் சிறப்பம்சங்களாவன

- ரூபா 500,000/- வரையான கடன் தொகை
- மிக இலகுவான செயற்படுத்தல்
- பிணைகள், பொறுப்புக்கள் தேவையற்றது
- 70 வயது வரையான கடன் மீளச் செலுத்தும் வசதி

நிபந்தனைகள்

- ரூபா 10,000/- இற்கு அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்
- கடன் பாதுகாப்புத் திட்டம் ஒழுங்கு செய்யப்படும் (ஒழுங்குகள் அனைத்தும் வங்கியினால் செய்யப்படும்.)

எமது வங்கியில் ஏற்கனவே கடனைப் பெற்றவர்களும் மேலதிகக் கடன் தொகையைப் பெறும் வாய்ப்புக்கள் உண்டு.

இவை பற்றிய மேலதிக விபரங்களை கலந்துரையாடலில் பங்கு பற்றி அறிந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கலந்துரையாடல் நடைபெறும் இடம் | கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரதான மண்டபம் |
| காலம் | 09.08.2014 - காலை 10.00 மணி |
| மேலதிக விபரங்களுக்கு | பான் ஏஷியா வங்கி, 161, கண்டி வீதி, கிளிநொச்சி 021 4 925 844, 021 4 925 952/3 |

பான் ஏஷியா வங்கி


## மரண அறிவித்தல்



### சபாரட்ணம் சந்திரபோஸ் (சந்திரா)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சந்திரபோஸ் (சந்திரா) 01.08.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குகதாசன் - லோகநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், சிறீரஞ்சினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயூரனின் அன்புத் தகப்பனும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தகணேசன், லட்சுமணலால் மற்றும் திருஞானசெந்தில்லால், காலஞ்சென்ற பாலச்சந்திரலால் மற்றும் சுந்தரலிங்கம், குபேரலால், ஜெயலட்சுமி, ரவீந்திரலால், அம்பலவாணர், பங்கையற்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2014) புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடிலேன், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
077 774 1205
(50544) (12.3.6)

தகவல்:
ச.ரவீந்திரலால்
(குஞ்சுக்கண்ணா - சகோதரன்)


## தாவடி திருவருள் மிகு அம்பலவாண கந்தசுவாமி திருக்கோயில்

## புதிய கைலாசவாகன வெள்ளோட்ட விழாவும் திருமுருகன் அமர்ந்து வரும் கைலாச திருக்காட்சியும்



முருகன் அடியார்களே!

நிகழும் ஜயவருஷம் மங்கலம் பொங்கும் ஆடித்திங்கள் 21ஆம் நாள் (06.08.2014) புதன்கிழமை மாலை 05.00 மணிக்கு புதிய கைலாச வாகன வெள்ளோட்டம் இடம்பெறும். இதே தினத்தில் இரவு 07.00 மணிக்கு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட புதிய கைலாச வாகனத்தில் வள்ளி தேவ சேனா சமேதராக திருமுருகன் விநாயகர் சகிதம் கைலாசத்தில் இருக்கும் வேளையில் சிவாச்சாரியார்கள் வேதம் ஓத விசேட மங்கல வாத்தியங்கள் முழங்க பக்தர்கள் புடை சூழ எம்பெருமான் திருவீதி உலா வரும் அருங்காட்சியும் இடம்பெறும்.

**கைலாச வாகன நிர்மாணிப்பு**
இராசதுரை பிரபாகரன் (பிரான்) குழுவினர்
"ராஜன் சிற்பாலயம்" திருநெல்வேலி.

**மங்கல வாத்தியம்**
தேவஸ்தான வித்துவான் மு.சிவலிங்கம், ந.கணேசமூர்த்தி குழுவினருடன் விசேட தவில் நாதஸ்வர கச்சேரியும் நடைபெறும்.

*அம்பலவாண கந்தன் கைலாச வாகன திருக்காட்சியைக் காண வாரீர்*

தாவடி. (50620)(10)

இ. பிரபாகரன் (பிரான்)
ராஜன் சிற்பாலயம், திருநெல்வேலி.

# முஸ்லிம்கள் திட்டமிட்டு நடத்தியதே அளுத்கம சம்பவம் அதற்கு அரசு எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்

கொழும்பு, ஒக.6

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியென கூறுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாட்டில் அரசை தீர்மானிப்பது பெரும்பான்மை சிங்கள மக்களே. முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு முஸ்லிம்களே காரணம். அதற்கு அரசு ஒருபோதும் பொறுப்பேற்காது என்று தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

"இந்த நாட்டின் சிங்கள மக்களே எப்போதும் ஆட்சியை தீர்மானித்து வருகின்றனர். அரசு என்பதையும் ஜனாதிபதி யார் என்பதையும் தீர்மானிக்கும் சக்தியாக எப்போதுமே சிங்கள மக்களே உள்ளனர். இந்நிலையில் முஸ்லிம்களோ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ ஆட்சியை தீர்மானிக்கின்றனர் எனக்கூறுவது வேடிக்கையாக உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவும் சுயநலத்திற்காகவும் அரசியல் செய்கின்றமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இன்று முஸ்லிம்கள் இதை உணரா விட்டால் எதிர்காலத்திலும் முஸ்லிம் சமூகம் தவறானதொரு கொள்கையிலேயே வழிநடத்தப்படும். ஆட்சி மாற்றத்திற்கு ஏற்ப அரசில் ஆசனங்களை கைப்பற்றுவது மட்டுமே இவர்களின் ஒரு கொள்கையாக உள்ளது. இது இந்த அரசை மட்டுமல்ல எந்தவொரு அரசையும் பாதிக்காது. வடக்கில் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினையினை தூண்டி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனரோ அதேபோல் கிழக்கு முஸ் லிம்களை ஏமாற்றி தீவிரவாதக் கொள்கைகளை முஸ்லிம் சமூகத்திடையே பரப்பும் செயலை ஸ்ரீலங்கா முஸ்லிம்



காங்கிரஸ் செய்து வருகின்றது.

அளுத்கம சம்பவத்திற்கு அரசு காரணமில்லை. அளுத்கம சம்பவம் முஸ்லிம்களினால் திட்டமிட்டு நடத்தப்பட்ட தொன்றாகும். அதில் சிங்கள மக்கள் மீதோ அரசின் மீதோ பழி சுமத்த முயற்சிப்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சர் ஹக்கீம் அளுத்கம சம்பவம் தொடர்பில் சாட்சியங்களை வைத்துள்ளாரெனின் அவற்றை நிரூபித்துக்காட்ட வேண்டும். அதை விடுத்து வார்த்தையில் கூறுவது ஒரு போதும் உண்மையாகாது."- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-10)

## தொடர்ச்சிகள்

### நிறைவேற்று

அமைச்சின் இணையத்தளத்தில் வெளியான கட்டுரை குறித்துக் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, "அந்தக் கட்டுரை குறித்து நாம் மன்னிப்புக் கோரியுள்ளோம். அந்தக் கட்டுரையும் குறித்த இணையத்தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறவுள்ள கால கட்டத்தில், பாப்பாண்டவரின் இலங்கை வருகை அமைந்துள்ளமை தொடர்பில் அவரிடம் வினவப்பட்டபோது, "தேர்தல் எப்போது வேண்டுமானாலும் நடைபெறலாம். தேர்தல் நடைபெற வேண்டும் என்றுதான் எதிர்க்கட்சித் தலைவரும் விரும்புகின்றார். பாப்பாண்டவர் வருவதால் தேர்தலை நிறுத்துமாறு கோரி வத்திக்கானில் இருந்து இதுவரை எந்தக் கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை"- என்று பதிலளித்தார் ஜனாதிபதி.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியலுக்கு வரவுள்ளார் என்று வெளியாகும் தகவல்கள் குறித்து ஜனாதிபதியிடம் ஊடகவியலாளர்களால் வினவப்பட்டது. "கோத்தபாய ராஜபக்ஷ அரசியலுக்கு வருவது குறித்து என்னிடம் எதுவும் கேட்கவில்லை. நான் முன்னர் ஒரு தரம் அவரிடம் அரசியலுக்கு வருமாறு அழைத்த போது அவர் அதை மறுத்திருந்தார்"- என்று ஜனாதிபதி அதற்குப் பதிலளித்தார்.

தொடர்ந்து அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளில் எந்த வித மாற்றங்களும் ஏற் படுத்தப்படாது. அவர்களுக் குரிய சட்டங்கள் தொடர்பில் தான் நாங்கள் சுட்டிக்காட்டு கின்றோம். அரச சார்பற்ற நிறுவனங்களின் அமைப்புக் குறித்து ஆய்வு செய்து ஒழுங்குபடுத்துவது பற்றித் திட்டமிடுகின்றோம்.

பேஸ்புக் மற்றும் பிற சமூக வலைத்தளங்கள் ஊடாக அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் அரசுக்கு பேஸ்புக் போன்ற சமூக இணையதளங்களை நாட்டில் தடை செய்யும் நோக்கம் இல்லை."- என்று தெரிவித்தார். (ற-10)

### கேபிக்கு

தொடர்பாக வழக்கு தொடர்ந்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்ட குமரன் பத்மநாபன் தற்போது இலங்கையில் உள்ளார் என்றும், அவரை இந்தியாவுக்கு அழைத்து விசாரித்தால் பல உண்மைகள் வெளி வரும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த வழக்கை நேற்று விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ். கே. கவுல், நீதிபதி சத்திய நாராயணன், அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்தனர். வழக்கு விசாரணை முடிவுக்கு வந்ததையடுத்து, வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (ற)

### போர்க்குற்ற

ணங்கள் போன்றவற்றிலிருந்து தகவல்கள் பெறப்படும் தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக எந்த நாடும், அமைப்பும், தனிநபரும் தக வல்களை வழங்குவதை மனித உரிமை ஆணைக்குழு வரவேற்கிறது. மின்னஞ்சல் மூலமாக தகவல்களை வழங்க விரும்புவோர் - oisl_submi ssions@ ohchr.org என்ற முகவ ரிக்கு அதனை அனுப்பலாம். அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆராய்ந்த பின்னர், அவற்றின் உண்மைத்தன்மையை ஆராயும் நடவடிக்கைகள் இடம்பெறும்.

தனது பணிகளை முன்னெடுக்கும் வேளை விசாரணைக் குழுவினர் - சுதந்திரம், பக்கச் சார்பின்மை, நேர்மை, வெளிப் படைத்தன்மை, யாருக்கும் பாதிப்பு ஏற்படுத்தாமை போன்ற கொள் கைகளைப் பின்பற்றுவர். விசாரணைக் குழுவினர் சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பு குறித்து நிலவும் சகல கரிசனைகளுக்கும் - தீர்வு காண்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பர்.

அதேபோன்று, இலங்கை அரசும் சாட்சியங்களையும் ஐ.நாவுடன் தகவலை பரிமாறுவோரையும் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-சி)

### காணாமற்

வருகின்றேன்"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் விடயப் பரப்புகளை அதிகரித்திருந்த ஜனாதிபதி, அவர்களுக்கு ஆலோசனை வழங்கவென மூவரை நியமித்திருந்தனர். டெஸ்மன் டீ சில்வாவும், ஜெஃப்றி நைஸ், பேராசிரியர் டேவிட் கிரேன் ஆகிய மூவருமே அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களாவர்.

இந்தநிலையிலேயே அவர்களுக்கு மேலதிகமாக மேலும் மூவர் நியமிக்கப்படலாம் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ற)

### ஆணைக்குழு

மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் 2015 ஆம் ஆண்டின் பெப்ரவரி 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மெக்ஸ்வெல் பரணகம (தலைவர்), சுரஞ்சன வித்தியாரத்ன மற்றும் மனோ இராமநாதன் ஆகியோர் அடங்கிய இந்த மூவர் கொண்ட ஆணைக்குழு 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்டதோடு, காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யவும், ஜனாதிபதிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ற)

### உங்கள்

னோரின் உறவினர்கள் மத்தியில் உரையாற்றினார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இங்கு நடைபெற்றுள்ள வற்றை நீங்கள் நேரிலே கண்டு கொண்டீர்கள். உலகமும் இதனைக் கண்ணுற்றுள்ளது. முன்னே வந்து எம்மோடு உங்களது கதைகளைப் பகிர்ந்து கொண்டதில் உங்களுக்குள்ள துணிச்சலை நான் மெச்சுகின்றேன். வியாழனன்று வெளிவிவகார அமைச்சரை நான் சந்திக்கவுள்ளேன். அப்போது இதுபற்றி நான் அவரிடம் பிரஸ்தாபிப்பேன்"- என்று அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ற-சி)

### செயலாளர்கள்

உறுப்பினர்களும் வலியுறுத்திப் பேசினர். பிரதம செயலாளர் விடயத்தில் உயர் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பிலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், உயர் நீதிமன்றத் தீர்ப்பினை அடியொட்டி, வடக்கு முதலமைச்சர் அரச பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கோரிக்கை விட வேண்டும். இந்தக் கூட்டத்துக்கு பிரதம செயலாளரை அனுப்பிவைக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு. இதனை விட வேறு வழியில் அவர்களைக் கேவலப்படுத்த முடியாது என்றார்.

இதன் பின்னர் பதிலளித்த அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், இன்றைய (நேற்றைய) கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல செயலாளர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தேன். எங்கள் அரச அதிகாரிகளை நாங்கள் நேசிக்கின்றோம். ஆனால் அவர்கள் எங்களை நேசிக்கவில்லை.

எம்மை உதாசீனப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்கலாம். இது பல அதிகாரிகளுக்கு தெரியவில்லை. நாம் எமது சிறப்புரிமையைப் பாவித்து அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

இதனை இனிவருங் காலங்களில் நடைமுறைப் படுத்துவோம். இதனை உடனடியாகவே சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு சபையின் செயலாளரை அவைத் தலைவர் பணித்தார். (ற-5)

### கமலுக்கு

வில்லை என்று வழக்கின் போது பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்தே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடமாகாணசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். (ற-4)

### காலதாமதம்

பிடப்பட்டுள்ளது. 'வரிகளையும் கட்டணங்களையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டம்' என்று.

கிழக்கு மாகாண ஆளுநரால் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதியன்று சம்மதம் தெரிவிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபையின் 2008 ஆம் ஆண்டின் முதலாவது நிதி நியதிச்சட்டத்தின் தலைப்பு வாசகம் அச்சொட்டாக எந்த ஒரு சொல்கூட மாற்றமில்லாமல் இவ்வாறே உள்ளது என்று தெரியவருகின்றது. அவ்வாறிருக்க எமது நியதிச்சட்ட ஏற்பாடுகளைத் திருத்தி அமைத்து இவ்வாறான நியதிச் சட்டம் கையாளக் கூடிய விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிடும் படி கோரியுள்ளமை மயக்கத்தைத் தருகின்றது.

அதுமட்டுமல்ல, நிதி நியதிச் சட்டத் தலைப்பை முகப்பு வாசகம் என்றும் முகப்பு வாசகத்தைத் தலைப்பு என்றும் குறிப்பிட்டிருப்பது எதற்காக என்று விளங்கவில்லை. எனினும் இவ்வாறான சில்லறை மாற்றங்களைச் செய்வதால் சிக்கல்கள் எதுவும் ஏற்படாது என்பதே உண்மை. ஆனால் இவற்றைத் தூக்கிப் பிடிப்பதால் கால விரயம்தான் ஏற்படுகின்றது.

ஆனால் தலைப்புக்கும் முகப்பு வாசகத்திற்கும் இடையில் உள்ள இடத்தில் எந்தெந்தச் சட்டங்களுக்கு முரணாக இந்த நியதிச்சட்டம் தயாரித்து இருக்கக் கூடும் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் சான்றியல் கட்டளைச் சட்டம், நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம் போன்றன குறிப்பிடப் பட் டுள்ளன. அவ்வாறு செய்ததன் காரணம் சட்டப்படி நாட்டின் சட்டத்துடன் தொடர்புடையதாக அல்லது முரண்பாடுடையதாக ஏதேனும் நியதிச் சட்டத்தின் ஏதேனும் சரத்துக்கள் அமைந்தால் அவற்றைக் குறிப்பிடவேண்டும் என்பதால். எந்த வகையில் அவ்வாறான முரண்பாடு இருக்கக் கூடும் என்பதை ஆராயாமல் அவற்றை நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விற்பனைப் புரள்வு வரி தொடர்பாக 1995 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விற்பனைப் புரள்வு வரி (கட்டுப்பாடுகளும் விதிவிலக்குகளும்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மாற்றங்கள் செய்யக் கோரப்பட்டுள்ளது. அதாவது வரைவின் பிரிவு 3(1) விற்பனவு வரி விகிதத்தை கட்டளைகள் மூலம் அமைச்சர் நிர்ணயிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை மாகாணசபைக்கு அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டாலும் மாகாணசபைச் சட்டத்தின் 24(1) பிரிவுக்கு முரணானதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்திலும் கிழக்கு மாகாணசபையின் நிதி நியதிச் சட்டத்தின் பிரிவு 77(1) இன் படி விதிகளைப் பிரகடனப்படுத்தும் அதிகாரம் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம். அப்படியிருந்தும் எல்லா வரிவிதிப்புக்களையும் நியதிச்சட்டம் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டுமெனத் தெரிவிப்பது நிர்வாக தாமதங்களை ஏற்படுத்துவதுடன் நியதிச்சட்டங்களின் பெருமைகளைக் குறைத்து விடவே செய்யும்.

இவ்வாறான மாற்றங்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. மூன்றாவதாக நாங்கள் சமர்ப்பித்த நியதிச்சட்ட வரைவு வட மாகாண முதலமைச்சரின் நிதியம் பற்றியது. அதை நாங்கள் ஆளுநருக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் எதுவும் இருக்கவில்லை. எனினும் நல்லாட்சிக்கான வெளிப்படைத் தன்மையை முன்னிட்டு அதையும் அனுப்பி வைத்தோம். அதைத்தான் அவர் நிராகரித்துள்ளார். அது பற்றி அவரின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை எனது செயலாளர் மூலம் அனுப்பியுள்ளேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### ஆளுநரின்

குழுநிலை விவாதம் இடம் பெற்றது. இதன் போது எதிர்க் கட்சித் தலைவர் தவராஜா, இது ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்க வேண்டியதில்லை. இருப்பினும் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டு அவர் நிராகரித்துள்ளமையால் இது சர்ச்சையாகியுள்ளது. அவ்வாறு முரணான விடயத்துக்கு நாம் ஆதரவு தர முடியாது என்று தெரிவித்தார்.

இதன் போது ஆளுந்தரப்பு உறுப்பினர்கள், வடக்கின் அபிவிருத்திக்கும், மக்களுக்கு நல்ல விடயங்கள் நடக்க வேண்டும் என்பதற்கும் யார் தடையாக இருக்கின்றார்கள் என்பது இப்போது வெளிச்சமாகத் தெரிகின்றது. உங்களுக்கு இந்த மக்கள் மேல் அக்கறையில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்தனர்.

இதன் பின்னர் நியதிச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்புக்கு விடுமாறு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். அவைத் தலைவர் சி.வீ. கே.சிவஞானம், எதிர்கட்சியினர் இந்த விடயத்தில் ஆதரிக்கலாம், எதிர்கலாம் அல்லது நடுநிலை வகிக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார். இதன் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமக்குள் கலந்துரையாடி விட்டு இதற்கு நடுநிலை வகிப்பதாகத் தெரிவித்தனர்.

இதனால் முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் எதிர்ப்பின்றி 23 மேலதிக ஆதரவு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிதியத்தினூடாக, வறுமையில் வாடுபவர்கள், கடுமையான சுகவீனங்களுக்கு உட்பட்டிருப்போர், கல்வியைத் தொடர்வதற்கு வசதியற்றவர்கள் மற்றும் கடந்த கால போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறவுள்ளனர்.

மேலும் இந்த நிதியத்துக்கு உள்நாட்டிலிருந்தோ, வெளிநாட்டிலிருந்தோ நன்கொடை, அன்பளிப்புக்கள் என்பன பணமாகவோ அல்லது வேறு வழியிலோ நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-5)

# இலங்கையில் அதிகரிக்கும் அகதிகளின் எண்ணிக்கை

## ஐ.நா. தலையிடுமாறு கோரிக்கை

இலங்கையில் அதிகரித்து வரும் வெளிநாட்டு அகதிகள் தொடர்பான விவகாரத்தில் ஐ.நா. தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங் கையில் புகலிடம் கோரும் வெளி நாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக அவர்க ளுக்குத் தேவையான வசதி களைச் செய்து கொடுப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 1970 பேர் வரையானோர் இலங்கை யில் புகலிடம் கோரியுள்ளனர். அவர்களில் பெரும்பாலா னவர்கள் பாகிஸ்தானியர்கள் என்று தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் இந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் விட யத்தில் ஐ.நா. அகதிகளுக் கான நிறுவனம் தலையிட வேண்டும் என்று வெளிநாட் டமைச்சு கோரிக்கை விடுத் துள்ளது.

இந்த விவகாரத்தில் ஐ.நா. தலையிடாத பட்சத்தில் புக லிடக் கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது. (வ)

# ‘சோர்விலாச் சொல்’ நூல் நிதி காஸா குழந்தைகளுக்கு

கொழும்பு, ஓக.6

தான் எழுதி வெளியிட்ட ‘சோர் விலாச் சொல்’ நூல் வெளி யீட்டின் மூலம் கிடைக்கும் நிதி பலஸ்தீன், காஸாவிலுள்ள குழந்கைளுக்கு பால்மா வாங் குவதற்கு அனுப்பப்படவுள்ள தாக அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவி சாளருமான பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் குறிப்பிடு கையில்,

‘சோர்விலாச் சொல்’ நூல் வெளியீட்டின் மூலம் கிடைக் கும் நிதியில் ஒரு ரூபாயைக் கூட நான் எடுத்துக்கொள்ளப் போவதில்லை.

இதன்மூலம் கிடைக்கும் நிதி பலஸ்தீன் காஸாவிலுள்ள குழந்கைளுக்கு பால்மா வாங் குவதற்கு முழுவதுமாக அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித் தார்.

அமைச்சர் பசீர் சேகுதாவூத் 1991ஆம் ஆண்டிலிருந்து 2011 வரை நாடாளுமன் றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக ‘சோர்விலாச் சொல்’ என்ற நூல் வெளிவந்துள்ளது. இந்த நூல் கடந்த ஞாயிற்றுக் கிழமை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

# இத்தாலிய குறும்படப் போட்டியில் ஈழத்தமிழர் குறும்படம் முதலிடம்

ஈழத்து கலைஞர் ஈழன் இளங்கோவின் ‘மொழிப் பிறழ்வு’ என்ற தலைப்பிலான குறும்படத்துக்கு இத்தாலிய குறும்படப் போட்டியில் முதலா வது பரிசில் கிடைத்துள்ளது.


ஈழத்து தமிழ் திரைப்படத் துறையில் இன்னுமொரு மைல்கல்லாக அமைந்தி ருப்பது மொழிப்பிறழ்வு என்ற குறுந் திரைப்படம். ஆஸ்தி ரேலியாவில் நடை பெற்ற, சிட்னி திரைப்பட கல்லூரி ஒருங்கமைத்திருந்த இத்தா லிய குறும்படப் போட்டியில், பல மொழி குறுந் திரைப்படங் களுடன் போட்டியிட்டு முத லாம் பரிசைத் தட்டிச் சென் றுள்ளது இந்தப் படம். இந் தப்படத்தில், ஒரு ஈழத்து அக திப்பெண்ணின் துன்பங்கள் தத்ரூபமாக சித்திரிக்கப்பட்டுள் ளன. கலாசார சீர்கேடுகள், வன்முறைகள் போன்றவை இல்லாமல் மிக அழகான முறையில் காட்சிகள் அமைக் கப்பட்டுள்ளன.

ஈழத்து உறவுகளின் உண் மை நிலையைவெளிநாட்டவர் களுக்கும்தெரியப்படுத்தி உள்ளார் என்று பலராலும் பாராட்டப்பட் டுள்ளது. இந்தக் குறும்படம் சிறந்த ஒளிப்பதிவு, பின்னணி இசை, காட்சி அமைப்பு என்று தமிழ் சினிமாவைத் தாண்டி வேறு கோணத்தில் உருவாக் கப்பட்டுள்ளது. இக்குறும்பட இயக்குநர் ஈழன் இளங்கோ, பிரான்ஸ் நாட்டில் இயக்கி நடித்த ‘தொடரும்’ என்ற ஈழத்து மக்களின் பிரிவுகளையும் தேடல்களையும் சித்திரிக்கும் மற்றுமொரு குறுந் திரைப்படம் இதே போட்டியில் தெரிவு செய்யப்பட்டு திரையிடப்பட்ட தும் குறிப்பிடத்தக்கது. (வ)



க.பொ.த. உயர்தரப்பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. ஆர்வத்துடன் பரீட்சை எழுத செல்லும் மாணவர்கள். (வ-20-21

# பொலித்தீன் பைக்குள் சுற்றப்பட்டு வீட்டுவாசலில் போடப்பட்ட மண்டையோடு



மட்டக்களப்பு, ஓக.6

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வந்தாறுமூலை, களுவாஞ்சிக்குடி வீதியில் உள்ள வீடொன்றின் முற் றத்தில் பொலித்தீன் பை ஒன் றில் இருந்து மண்டை ஓடு ஒன்று நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டு உரிமையாளரால் பொலி ஸாருக்கு வழங்கப்பட்ட தக வலை அடுத்தே இந்த மண் டையோட்டைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அந்தப் பகுதி யில் விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார், அயல வர்களிடம் வாக்குமூலங்களை யும் பெற்றுக்கொண்டனர்.

இதுகுறித்துக் கூறிய வீட்டு உரிமையாளரான பெண், "காலையில் வீட்டு முற்றத்தில் பொலித்தீன் பை ஒன்று, சில பொருள்களுடன் காணப்பட் டது. அந்தப் பையைக் குப் பையில் இட்டு எரித்தபோது துர்நாற்றம் எழுந்தது. அதை யடுத்து அயலவர்களை அழைத்து அந்தப் பையினுள் என்ன இருந்தது என்று பார்த்தபோது, அதற்குள் மண்டையோடு காணப்பட்டது. அதையடுத்துப் பொலிஸா ருக்கு தகவல் தெரிவித்தோம்"- என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்துக் கருத் துத் தெரிவித்துள்ள அயல வர்கள், "சூனியம் செய் வதற்காக மந்திரவாதிகளால் மண்டையோடு கொண்டு வரப்பட்டுப் போடப்பட்டிருக்க லாம்"- என்று அச்சம் தெரி வித்தனர். பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# வர்த்தகர்க ஐந்து பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஓக 6

வங்காலை பொதுசுகாத பரிசோதகர் பிரிவுக்கு உ பட்ட பகுதியில் வியாப நிலையங்களில் காலா யான பொருள்களை வி னைக்கு வைத்திருந்த குற் துக்காக நீதிமன்று 5 பேரு 25 ஆயிரம் ரூபா அபரா விதித்துள்ளது.

மன்னார் நானாட்டா சுகாதார வைத்திய அதிக பிரிவுக்கு உட்பட்ட வ காலையில் உள்ள 5 க களில் பொதுச்சுகாதார சோதகர்கள் பரிசோதன யில் ஈடுபட்டபோதே வியாபார நிலையங்கள காலாவதியான பொருள் இருந்தமை கண்டறியப் டது.

அவர்களுக்கு எதிராக கட 22 ஆம் திகதி மன்னார் மன்றில் வழக்குத் தொட பட்டது. பதில்நீதிவான் மு ன்னிலையில் இந்த வழ நேற்று விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்ட பே அவர்கள் தம் மீது குற்றத்தை ஒப்புக் கொ டதையடுத்து அவர்களு தலா 5 ஆயிரம் ரூபா ராதம் விதிக்கப்பட்டது. (வ

# உடல், உள பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்கும் நேய

## யாழில் சுகாதாரத் திணைக்களத்தின் புதிய பிரிவு

யாழ்ப்பாணம், ஓக .6

வடக்கில் வன்முறைகள், துஷ் பிரயோகங்கள் மற்றும் மது பாவனை போன்ற உள சமூக பிரச்சினைகள் மோசமாக அதிகரித்துள்ள நிலையில் உடல், உள ரீதியாகப் பாதிக் கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக யாழ்ப்பாணத்தில் ‘நேயம்’ என்ற பிரிவு ஆரம் பிக்கப்பட்டுள்ளது. பிரச்சினை உள்ளவர்கள் 021 222 6666 என்னும் தொலைபேசி இலக் கத்துக்குத் தொடாபு கொள்ளு மாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது: சகலவித வன்முறைகள், துஷ் பிரயோகங்கள் மற்றும் மது பாவனை போன்ற உள சமூக பிரச்சினைகளால் ஒருவர் உடல், உள ரீதியாகப் பாதிக்கப் படுகிறார். அந்த வேளைகளில் அவர்கள் கடுமையான உள நெருக்கீடுகளுக்கு ஆளாகின் றார்கள். அந்த வேளைகளில் என்ன செய்யலாம், மனக் குழப்பத்திலிருந்து எவ்வாறு மீளலாம், யாரிடம் ஆதரவு அல்லது உதவி கேட்கலாம் போன்றவழிவகைகள்தெரியாது அத்தகைய நெருக்கீடு அல்லது பிரச்சினையில் மூழ் கிப்போய் அவஸ்தைப்படுவர். என்ன செய் வது என்று தெரியாது தவிப்பர். அந்த வேளைகளில் பொருத் தமான ஆதரவை வழங்க வும், அந்த நேர மனக் குழப்பத் தில் இருந்து ஆறுதல் அடைய வும், பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கான பொருத் தமான வழிகாட்டல்களை வழங்கவும் இந்த அவசர தொலைபேசி அழைப்பான 021 222 6666 என்ற இலக் கத்துக்குத் தொடர்பு கொள் ளுங்கள். அதன்மூலமாக பொருத்தமான உதவிகளை, வழிகாட்டல்களை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். அத னால் நீங்கள் அந்த வேளைய பிரச்சினை, நெருக்கீட்டிலி ருந்து விடுபட முடியும். இவ் வாறான உள சமூக உதவிச் செயற்பாடுகள் மூலம் பலநாடு களிலும் பலர் தினமும் பயன் பெறுகின்றனர்.

இந்தச் சேவை யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக 24 மணித்தியாலமும், வாரத் தின் ஏழு நாள்களிலும் நடை முறையில் உள்ளது. பயிற்சி பெற்ற பணியாளர்கள் இந்த ‘நேயம்’ பிரிவில் பணியில் ஈடுபடுகின்றனர். அவசர அழைப் பெண் (நேயம்) சேவை பெறு வோரின் தொடர்பாடல் உள சமூக் நீதிநெறிக் கோவைக்கு அமைவாக மிக இரகசிய பேணப்படும். ஆயினும் சே தொடர்பான உயர் தரத் பேணுவதற்காகத் தொ பேசி உரையாடல்கள் செய்யப்பட்டு அவை ரங்கமாகப் பேணப்படும்.

இது சுகாதார சேவையின் தின் தேவையைப் பூர்த்தி யும் மேலும் ஒரு சேவை வங்கும் ஆகும். கடந்த ஜீ லாம் திகதியிலிருந்து இ பிரிவு செயற்பட்டுவருகிறது தெரிவிக்கப்பட்டுள்ளது.

# SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

நேரடியான உரையாடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.

அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை ,உயர்கல்வி மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 09.08.2014 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல், பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்
பயிற்சியில் இணைய அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை.

SAAMSON LANGUAGE SCHOOL 979, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567 021 320 3313

## சிங்கள மொழி வகுப்புக்கள்

இரண்டாவது தொகுதி ஆரம்பம் 08.08.2014 மாலை 3.30 மணிக்கு சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் சிங்கள மொழி ஆசிரியையை சந்தித்து விவரங்களை அறியலாம்.

தொடர்புகளுக்கு: 077 309 5176 (C/15349)(10.6.3) நிர்வாகி சதாபோன்ஸ்.

## காணி விற்பனைக்கு உண்டு

★ கிளிநொச்சி, வில்சன் றோட் மகிழங் காடு நெற்காணி 26 ஏக்கர் (வயல்)
★ மல்லாகம், K.K.S. றோட்டில் வெற்றுக் காணி ஒன்றும் விற்பனைக்கு உண்டு.

(50613)(10.6.3) தொடர்பு: 071 654 3294

## Mega Sale

Mangala ARPICO DAMRO Plyesira

ஆடி தள்ளுபடி
என்றும் எங்கும் கிடைக்காத
அமோக விலை குறைப்பு

மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

## சிங்கள வகுப்புக்கள்

அரச உத்தியோகத்தர்கள், O/L பரீட்சை எடுப்பவர்களுக் கான வகுப்புக்கள்.
★ மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற சிங்கள ஆசிரியர்
S.M. RASAM THARANGA MARASINGHE ஆல்
கற்பிக்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம்: 09.08.2014, 1 pm (சி/15342)(10.6.3)

புதிய உயர்கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

# STUDY IN LATVIA



- January / February Intake இற்கான அனுமதிகளை பெற்றுக் கொள்ள விரையுங்கள்.
- தற்போது September Intake இற்கான அனுமதிகள் முடிவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் January / February இற்கான அனுமதிகள் ஏற்றுக்கொப்படுகின்றன
- October 10ல் நடைபெறும் அனுமதி தேர்விற்கான மாணவர்களை தயார்படுத்தும் வகுப்புக்கள் ஆரம்பம்

01st BATCH 11.08.2014 - Week days
02nd BATCH 16.08.2014 - Week end

September Intake ற்கு 52 மாணவர்கள் இணைந்து கொண்டும் அனுமதி தேர்வில் 18 மாணவர்கள் மாத்திரமே அனுமதிகளை பெற்றுக் கொண்டுள்ளனர். இவ்வெற்றிடத்தினை நிவர்த்தி செய்யும் பொருட்டு தற்பொழுது அனுமதி தேர்விற்கான தயார்படுத்தல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

எம்முடன் இணைவதன் மூலம் மாணவர்கள் தமது வெளிநாட்டுக்கல்வி கனவினை இலகுவாக நனவாக்க முடியும்.

EXPONET Overseas Consultants

Head Office: 379 ½, Galle Road, Colombo 06. Hotline: 011 755 55511/14/18
Branch: 197, Arasady Road, Jaffna. 021 7538395 / 021 2227230
Email: nimal@expogroup.lk Web: www.expogroup.lk

FLEX Graphic


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி துரைராஜா



இராசமாளிகை பிரம்படி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா சரஸ்வதி 05.08.2014 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், துரைராஜாவின் அன்பு மனைவியும், வசந்தி (இத்தாலி), மாலா (இலங்கை), காலஞ்சென்றவர்களான ஜீவகுமார், தேவகுமார் மற்றும் கிசோக்குமார் (லண்டன்) ஆகி யோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குலேந்திரன் மற் றும் தேவராஜா (இத்தாலி), தீன் (இலங்கை), நளினி (இலங்கை), குமுதினி (நோர்வே), சிவசாந்தினி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், காண்டீபன், வாசுகி (பிரான்ஸ்), பர்வின், பர்கான், நஸ்ணா, பஸ்ணா, சுல்விகான் (இலங்கை), சகனா (நோர்வே), ரிஷாந், டிலானி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசமாளிகை, பிரம்படி,
கொக்குவில். (50599)(7.6.3)

தகவல்: கணவர் - துரைராசா,
மகள் - வசந்தி T.P : 021 492 5038,
மகன் - கிசோக்குமார் T.P : 077 672 2139.


# Arul Study Circle

111, Bonjean Road, Kotahena, Colombo 13,
T.P: 011 2331 495, 011 2470 148

## G.C.E. (O/L) 2014

மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

Free Seminar

| பாடம் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | வே.தேவசேனாதிபதி (L.L.B சட்டத்தரணி)<br>K. வசந்தராஜ் (ஆசிரியர், நாவலப்பிட்டி) |
| விஞ்ஞானம் | வே.சுந்தரேஸ்வரன் (D.G.M National Lotteries Board)<br>V. பிரேம்குமார் (PHI, Jaffna)<br>மணிமாறன் |
| வரலாறு | S. நடராஜா B.A,<br>S. ஜங்கரன் B.A. Hons (Geo), M.A. (Geo), PGDE, PGDE (Adm.,), A.C.P.K, M.P.A (J.Pura)<br>செல்வி மேகலா பேர்னாந்தோ (L.L.B சட்டத்தரணி) |
| தமிழ் | K. திவாகர் B.A Hons |



### இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடமும் திகதியும்

**ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்**
08.08.2014 (வெள்ளி, காலை 8.30 - மாலை 5.00. இருபாலாரும்)

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**
(தொழிநுட்பக் கல்லூரி) 09.08.2014 (சனி, காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்.)

**யாழ். வீரசிங்கம் மண்டபம்**
10.08.2014 (ஞாயிறு, காலை 6.00 - மாலை 5.00. மாணவிகள் மட்டும்.)
11.08.2014 (திங்கள், காலை 6.00 - மாலை 5.00. ஆண் மாணவர்கள் மட்டும்.)
12.08.2014 (செவ்வாய், காலை 6.00 மாலை 5.00. இருபாலாரும்.)

**உருத்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயம்**
13.08.2014 (புதன், காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்.)

**கற்சிலைமடு அ.த.க. பாடசாலை**
14.08.2014 வியாழன், காலை 8.30 - மாலை 5.00 வரை.

**மன்னார் ஆகாஸ் ஹோட்டல் மண்டபம்**
15.08.2014 (வெள்ளி, காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்.)

### முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் நூல்கள்

★ கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 2009, 2010, 2011, 2012, 2013, ஆகிய வருட க.பொ.த. (சா/த) பரீட்சை வினா-விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ கணிதம் கடந்த 17 வருட க.பொ.த (சா/த) பரீட்சை வினா - விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ அனைத்துப் பாடங்களிலும் மாதிரி வினாக்கொத்து (Tutes) வழங்கப்படும்.
★ விஞ்ஞான வினாவிடை நூல் இலவசமாக வழங்கப்படும். (25 வருட கடந்தகால வினாவிடைத் தொகுப்பு)

(C/14781)(10.6.3)

இலவச கருத்தரங்குக்கான முழு அனுசரணை: வே.தேவசேனாதிபதி L.L.B சட்டத்தரணி

தொடர்புகளுக்கு: பே.இளமுருகன் ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி. தொ.பே.: 077 907 3593

ஊடக அனுசரணை: உதயன் மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/14782)(10.6.3)

# உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி **Construction Organization** இல் கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு

**தகுதியானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.**

- Site Managers-Expected from Experience Civil Engineers
- Civil Engineers-B.Sc Eng.(Civil with 02 Years Experience) or N.D.T.(Civil with 05 Years Experience)
- Asst.Engineers-N.D.T-(Civil or Equivalent) with 02 Years Experience
- Safety officers-N.C.T (Civil Engineering) with Experience in Building Construction
- Admin Officers-G.C.E (A/L) with Construction Experience in Purchasing (Accounting)
- Store Keepers/Stores Assistant- Having Experience/

**Vacancies are available only in Colombo. Vavuniya and Kilinochchi.**
இந்த இடங்களுக்கு செல்லுபவர்கள் மட்டும்

சுயவிவரக் கோவை அனுப்பவேண்டிய முகவரி:
adminjaffna@sanken.lk
or Sanken Construction(Pvt) Ltd

(சி/15320)(4.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஏமாறாதே! ஏமாற்றாதே!!



ராஜராஜன்

"யாரைத்தான் நம்புவதோ ஏழை நெஞ்சம்" என்ற பாடல் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த திரைப்படமொன்றில் ஒலித்ததொன்றான போதிலும் அந்தப் பாடல் வரிகளிலுள்ள உண்மையான அர்த்தம் இன்றைய மனிதர்களுக்கு மிகவும் பொருத்தமானதாகவே காணப்படுகின்றது. 'நம்ப நட நம்பி நடவாதே' யென அன்றே கூறிச் சென்றார்கள் எம் முன்னோர். மனிதர்களைச் சரியாக எடைபோட்ட ஞானிகள் அவர்கள். இன்று மனிதர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதும், ஏய்ப்பதுவும் சர்வசாதாரணமான விடயங்களாக மாறியுள்ள நிலையில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதைப் பிரித்தறிய முடியவில்லை.

ஒரு சிலர் தமது இயலாமை காரணமாக வாய்மை தவறி நிற்கின்றனர். இவர்கள் மற்றவர்களை ஏமாற்றுவதற்கு ஒருபோதுமே நினைப்பதில்லை. ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவர்களைப் பற்றி தவறான எண்ணங்களை ஏற்படுத்தி விடுகின்றன. காலப் போக்கில் இவர்கள் தொடர்பான உண்மை நிலை தெரியவரும்.

ஆனால் சிலர் பிறரை ஏமாற்றுவதற்கென்றே பிறந்தவர்கள் போன்று செயற்படுகின்றனர். உடல் உழைப்பில் சிறிதும் நாட்டமில்லாத இவர்கள் பிறரை ஏமாற்றி வயிறு வளர்ப்பதிலேயே குறியாக இருப்பார்கள். ஏமாறுபவர்கள் இருக்கும் வரையில் இவர்களின் காட்டில் மழைக்குக் குறைவிருக்காது. ஆனால் அப்பாவிகளான மக்களின் வாழ்வில் இவர்கள் குறுக்கிட்டு பாதிப்புக்களை ஏற்படுவதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஒருவரைப் பார்க்கும்போது அவர் நல்லவரா அல்லது கெட்டவரா என்பதை அனுமானிப்பது எளிதான விடயமல்ல. அதுவும் இந்தக் காலத்து மனிதர்கள் சிறந்த நடிகர்களாகவே மாறிவிட்டனர். அவர்களை எடை போடுவதென்பது எளிதான விடயமல்ல. இந்த நிலையில் ஏமாறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

ஏமாற்றுதல் என்பது எமது நாட்டு அரசியலை எடுத்துக் கொண்டால் அரசியல்வாதிகளுக்கு சர்வ சாதாரணமானதொரு விடயமாகவும், அரசியலைத் தாங்கி நிற்கும் மூல வேராகவும் காணப்படுகின்றது. எந்தவொரு விடயத்தையும் திரித்துக் கூறுவதன் மூலமாகப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற உயர்ந்த தத்துவத்தை மூலமந்திரமாகக் கொண்டவர்கள் எமது நாட்டு அரசியல்வாதிகள். முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைத்து மறைக்கும் தத்துவத்தைப் புரிந்து கொண்ட தத்துவ மேதைகள் இவர்கள். காரைநகரில் புலிச் சீருடை அணிந்த ஒருவரே பாதிக்கப்பட்ட சிறுமியைத் தூக்கிச் சென்று பாலியல் பலாத்காரம் புரிந்ததாக நாட்டின் பிரதமரே நாடாளுமன்றத்தில் கூறியதைக் கேட்டு கொதித்துப் போகாதவர்கள் எவருமே இல்லையென்றுதான் கூற வேண்டும். ஒரு நாட்டின் உயர்ந்த பதவியொன்றில் அமர்ந்திருக்கும் மூத்த அரசியல்வாதியான அவர் யாரை ஏமாற்றப் பார்க்கின்றார் என்பது புரியவில்லை. அதுவும் புலிச் சீருடை அணிந்து வந்த ஒருவர் வட பகுதியில் நடமாடுவதாக அவர் கூறியமை அவர் மீது உளவியல் ரீதியான சந்தேகங்களையும் எழுப்பி விட்டுள்ளது. இந்த நிலையில் ஏனைய அரசியல்வாதிகள் தொடர்பாக சொல்லவே தேவையில்லை.

ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான திருமணத் தரகர்களை இன்று எவருமே நம்புவதில்லை. மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காமல் தமது பைகள் நிறைந்துவிட வேண்டும்என்ற குறிக்கோளுடன் உலா வரும் பிரகிருதிகள் இவர்கள். வாயைத் திறந்தால் பொய்கள் தவிர வேறொன்றையும் இவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. தமது தரகுப் பணம் அதிகரிக்க வேண்டுமென்பதற்காக அதிகரித்த அளவில் சீதனத்தை உயர்த்தி விடும் இவர்கள் பெண்களைப் பெற்றவர்களின் அவல நிலையைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. மாப்பிள்ளைப் பையன் கெட்ட பழக்க வழக்கமுள்ளவராக இருந்தாலும் அதையெல்லாம் மூடி மறைத்து பெண்ணின் தலையில் அவனைக் கட்டி வைத்து அவளின் வாழ்க்கையையே சீரழிக்கும் இவர்களின் மனதில் ஈவிரக்கமே இருக்காது. மற்றவர்களை ஏமாற்றிக் காலம் கடத்தும் இவர்கள் இந்தச் சமுதாயத்தால் ஒதுக்கி வைக்கப்படவேண்டியவர்கள். தற்போது ஒரு லட்சம் ரூபா சீதனமாக வழங்கினால் அதில் பதினாறு ஆயி ரம் ரூபா தரகர்களுக்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றது. இவர்கள் உடல் உழைப்பு ஏதுமின்றி இந்தக் கொழுத்த தொகையைக் கொத்திக் கொண்டு போய் விடுகின்றனர். மற்றவர்களை ஏமாற்றுவதற்கென்றே பிறந்த இவர்களை இனியும் நம்பியிருப்பதால் தீமைகள்தான் ஏற்படும். மதம் என்பது ஒவ்வொரு மனிதனின் உயிரிலும் கலந்து நிற்கின்றது. மத ரீதியான பிளவுகள் பலவாக இருந்தாலும் நம்பிக்கை என்பது அனைவருக்கும் பொதுவானதுதான். ஆனால் இன்று மதங்களிலும் களங்கம் புகுந்துவிட்டன. மதப் பெரியவர்கள் எனக் கூறுபவர்கள் தமது ஒழுக்கங்களை மீறிச் செயற்படுகின்றமை வேதனையைக் கொடுக்கின்றது. தம்மை நம்பியிருக்கும் மக்களுக்கு இந்தப் போலி ஆசாமிகள் துரோகம் இழைப்பதுடன் ஏமாற்றியும் வருகின்றமை அந்த இறைவனாலேயே மன்னிக்க முடியாத குற்றங்களாகும்.

இறுதிப்போரின்போது பல தரப்பினராலும் இலங்கைத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். இந்தியா தமக்கு உதவுமென இறுதிவரை அவர்கள் நம்பியிருந்த போதிலும் இறுதியில் பிரணாப் முகர்ஜியின் இலங்கைக்கான பயணம், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உண்ணா நோன்பு ஆகியன ஏமாற்று வித்தைகளாகவே மாறிவிட்டன. வெள்ளைக்கொடி விவகாரத்தில் கூட ஐ.நா. சபை தனது கடமைகளை ஆற்றுவதற்குத் தவறிவிட்டது. ஐ.நா. சபை ஏமாற்றியதால் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடையச் சென்ற பல தமிழர்கள் குரூரமான வகையில் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி வழங்கும் உறுதி மொழிகளின் நம்பகத்தன்மை எத்தகையது என்பது உலகறிந்த விடயம். சர்வதேச சமூகம் கூட அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாததொரு நிலை உருவாகியுள்ளது. ஏமாற்றப்படுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் இதற்கும் ஓர் எல்லை உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று கல்வியிலிருந்து வியாபாரம் வரை எல்லாமே ஏமாற்றும் தன்மை நிறைந்தனவாகக் காணப்படுகின்றன. அதிலும் கல்வியில் இது ஊடுருவியுள்ளமை கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தவல்லது.

ஆகவேதான் எந்த விடயமாக இருந்தாலும் அது தொடர்பாக ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கும் மனப்பாங்கு மக்களிடத்தில் உருவாக வேண்டும். மலிவாகக் கிடைக்கின்றது என்பதற்காக எதனையும் ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்திலிருந்தும் எம்மை நாம் விடுவித்துக்கொள்ள வேண்டும். இனிக்கப் பேசுபவர்கள் எல்லோருமே நல்லவர்களல்ல. அவர்கள் தமது ஆழ் மனதில் புதைந்து கிடக்கும் கள்ளத்தை மறைப்பதற்காகவே அவ்வாறு வேடமிடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் அவர்களிடம் ஏமாறும் நிலை உருவாகாது. ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். எமது மனதிலுள்ள பலவீனங்களும் மற்றவர்களுக்குச் சாதகமாக அமைந்து விடுவதால் எம்மை அவர்கள் எளிதாக ஏமாற்ற முடிகின்றது. ஆகவே எமது பலவீனங்களை நாம் போக்கிக்கொள்வதற்கு முயல வேண்டும். எச்சரிக்கை உணர்வுடன் நாம்செயற்பட ஆரம்பித்தால் ஏமாற்றுபவர்களும், ஏமாற்றங்களும் எம்மை அணுக முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# கண்டிப்பான மேலதிகாரிகளை சமாளிக்கும் வழிமுறைகள்

வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது பழமொழி. அது அலுவலகச் சூழலுக்கும் பொருந்தும். எந்த பணி செய்தாலும், அது எத்தனை சிறப்பானதாக இருந்தாலும் விமர்சனம் செய்ய மேலதிகாரிகள் தயாராக இருப்பார்கள். சிறப்பான பணி என்று பிறர் பாராட்டும் பட்சத்தில் அந்த வெற்றியைத் தனதாக்கிக் கொள்வது அநேக மேலதிகாரிகளின் போக்காக உள்ளது. இந்தச் சூழலில் தமது உரிமை பறிக்கப்படுவதாக நினைக்கின்றனர் பலர்.

இத்தகைய இறுக்கமான சூழலில் பணி புரிவது, உங்களால் மட்டுமின்றி, பெரும்பாலான பணியாளர்களால் சகிக்க முடியாது தான். இச்சூழல் உங்கள் பணியின் தரத்தைப் படிப்படியாக நாளடைவில் குறைத்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உங்களைத் தனது ஆளுகைக்கு உட்படுத்தும் ஒருவரோடு தொடர்ந்து பணி புரிய முடியாதுதான். ஆனால், சில கட்டாயத்தினால் அவருக் குக் கீழ் வேலை செய்தே ஆகவேண்டிய சூழ்நிலைக்கு நீங்கள் தள்ளப்பட்டு விடுகின்றீர்கள். சவாலாக நிற்கும் அலுவலக மேலதிகாரிகளை சமாளிக்க சில எளிய டிப்ஸ்.



### திறமையின் மீது நம்பிக்கை

உங்கள் பணித்திறமையின் மீது உங்களுக்கு நூறு சதவீத நம்பிக்கை இருக்கவேண்டும். ஏனெனில் அப்போதுதான் பிறரால் உங்களை எளிதில் ஆதிக்கத்துக்கு உட்படுத்த முடியாது. சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்கு எளிதில் நீங்களே தீர்வுகாண முயல வேண்டும். எதற்கெடுத்தாலும் மேலதிகாரியை எதிர்பார்ப்பதால்தான் அவர் உங்களை அடக்கியாள நினைப்பார்.

கடுமையான உங்கள் மேலதிகாரி உங்களுக்குக் கட்டளையிட வருவதற்கு முன், அவருடைய முகபாவங்களைக் குறிப்பால் உணர்ந்து, உங்களை அவரிடமிருந்து சற்றுத் தொலைவாகவே வைத்துக்கொள்ள வேண்டும். உங்களின் மற்றைய வேலைகளில் முனைப்பாக இருப்பதாகக் காட்டிக்கொண்டால், அவர் உங்களிடம் வருவதையேகூடத் தவிர்த்துக் கொள்ளலாம். இதைவிட பழைமையான - இலகு வான முறை ஒன்று உள்ளது அது க்ட்டுப் பாடான

(மிது)



மேலதிகாரியை உங்கள்மீது கட்டுப்பாடு விதிக்க விடக் கூடாது.

### நேர விரயத்தைத் தவிர்க்கலாம்

எப்பொழுதுமே தான் செய்வதுதான் சரி என்பது மேலதிகாரிகளின் கருத்து. அத்தகைய எண்ணம் கொண்ட நபரிடம் விவாதம் செய்வது நேர விரயம்தான். அடக்கியாளும் தன்மையுடைய மேலதிகாரியுடன் தர்க்கம் செய்வது, எமது நேரத்தை வீணடிப்பதாகும். தர்க்கம் தொடர்ந்தால், அதற்கு முடிவே இல்லாமலாகி இறுதியில் அவருடைய அதிகாரமே நிலைபெறும் அளவுக்குப் போய்விடும். அவருக்கு எதிராகச் சவால் விட்டால், அதுவே பெரிய ஆபத்தானதாகி உங்களுடன் அவர் எவ்விதப் பேச்சு வார்த்தைக்கும் முன்வர மாட்டார்.

### தேவையற்ற விவாதம் வேண்டாம்

இருவருக்கிடையே மோதல் ஏற்படும் சூழலில், நீங்கள் உங்களைக் குறையற்றவராக வாதிட முற்பட்டால், இந்த ஆதிக்கமான தலைமை அதிகாரி உங்களை அடக்கி ஒடுக்க முனைவார். இதனால் அவருடைய வலிமைதான் கூடும். எனவே, சற்றே நிதானிப்பது உங்களுக்கு நல்லது. உங்களைக் குறை கூறித் தாழ்த்த முற்பட்டாலும், அச்சுறுத்தினாலும் அதனால் நீங்கள் பாதிக்கப்படப் போவதில்லை என்பதை வெளிப்படுத்தாதீர்கள். உங்களின் நிதானம், அவரை முட்டாளாக்கும்; அல்லது, அவரே தனது போக்கை மாற்றிக் கொள்வார்.

### வெற்றி பெற வழி

மேலதிகாரி கூறுவது சரிதான் என்று காட்டிக்கொள்வதே நாம் வெற்றி பெற ஓர் எளிதான வழி என்கின்றனர் உளவியலாளர்கள். ஏனெனில் எந்த ஒரு மேலதிகாரியுமே தான் கூறுவதை நீங்கள் கேட்க வேண்டும் என்று தான் விரும்புவார். அவர் கூறுவதைச் செவி தாழ்த்திக் கேட்பதே இந்தப் போராட்டத்தில் பாதி வெற்றி கிட்டியதாகும். செயற்பாட்டுத் திட்டங்களில் முடிவெடுக்கும் உரிமையை முழுமையாக அவருக்கே விட்டுக்கொடுக்க வேண்டும். இல்லை, முடியாது, சாத்தியமில்லை என்பவை போன்ற சொற்களை உங்களிடமிருந்து வருவதை அவர் விரும்பமாட்டார் என்பதால், அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய இறுக்கமான சூழ்நிலையில் உங்களுக்குத் தேவையான தும் தவிர்க்க முடியாததும் ஒன்றே ஒன்று தான். அதுதான் - தன்னடக்கம்.

### அச்ச உணர்வே அடிப்படை

உங்களுடைய திறமையை ஒப்புக்கொண்டால் எங்கே மேலதிகாரியை முந்திச் சென்று விடுவீர்களோ என்ற அச்சம் சகல அதிகாரிகளுக்கும் வருவது இயற்கை. எனவே கெடுபிடியான மேலதிகாரியின் செயற்பாடுகள் அனைத்தும், அவரிடத்தில் உள்ள அச்சத்தாலும், ஆத்திரத்தாலும், பாதுகாப்பற்ற தன்மையினாலுமே வெளிப்படுகின்றன என்பதை நீங்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். தன்னைப் பாதுகாக்கவே அவர் பிறரை அடக்கியாள முற்படுகிறார் என்ற உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் கண்டிப்பான மேலதிகாரியை எளிதில் சமாளிக்க முடியும்.

# தமது மகனின் ஆசிரியருக்கு லிங்கன் எழுதிய புகழ் பெற்ற கடிதம்

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல, அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதை எனது மகன் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், மனிதர்களில், அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள் என்பதையும், சுயநல அரசியல்வாதிகளுக்கு இடையில் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக் குணம் வந்து விடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

எதற் கெடுத்தாலும் பயந்து சுருங்கிக்கொள்வது கோழைத்தனம் என்பதைப் புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதேவேளையில், இயற்கையின் அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும் பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கு அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

ஏமாற்றுவதைவிடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுய சிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டுக் குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

கும்பலோடு கும்பலாய்க் கரைந்துபோய்விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயற்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். கண்ணீர்விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால், எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

தனது செயற்றிறனுக்கும், அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும். ஆனால், தனது இதயத்துக்கும், தனது ஆன்மாவுக்கும் விலை பேசுபவர்களை அவன் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

பெருங் கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்டத் தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்குக் நம்பிக்கை கொடுங்கள்.

அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம் கொடுத்துச் சார்ந்திருக்கவைக்க வேண்டாம். ஏனென்றால் கடுமையான தீயில் வாட்டப்படும் இரும்பு மட்டும்தான் பயன்மிக்கதாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கைகொள்வான். இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான், இதில்

இணையவன்



உங்களுக்குச் சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் மிக நல்லவன், எனது அன்பு மகன்.

உதயன்
06.08.2014

# மரபணு விதையால் வந்த வினை

செல்வம்

கோஜோனப், மேற்கு ஆஸ்திரேலியாவின் சின்னஞ்சிறு விவசாய கிராமம். இங்கே வசிக்கும் ஸ்டீவ் மார்ஷ் மற்றும் மைக்கேல் பாக்ஸ்டர் இருவரும் சிறுவயதிலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். இருவர் குடும்பமும் தலைமுறை தலைமுறையாக நட்புள்ள குடும்பம் என்பதால், இரட்டையர் போலவே வளர்ந்தவர்கள். பாக்ஸ்டருக்கு 1,175 ஹெக்ரேயர்... ஸ்டீவ் மார்ஷ்க்கு 400 ஹெக்ரேயர் என பரம்பரை நிலம் உண்டு. தங்கள் நிலங்களில் மட்டுமல்லாது, நண்பரின் பண்ணையிலும் விவசாய வேலைகளைப் பகிர்ந்து செய்வதில் இருவருக்கும் அலாதி ஆனந்தம்!

இந்த ஆனந்தத்தில் மண்ணை அள்ளிப் போட்டது, மான்சான்டோ. இப்போது இருவரும் எதிரிகள். அவர்களது சண்டையை ஆஸ்திரேலியா மட்டுமல்ல, உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது. சுமார் 2 ஆயிரம் பேர் வசிக்கும் கோஜோனப் கிராமத்தையும் இரண்டாக்கிவிட்டது இந்தச் சண்டை. இதற்குக் காரணம்... பணமோ, புகழோ, பொன்னோ... ஏன், மண்ணோகூட இல்லை. பாக்ஸ்டர் பயிரிட்ட 'மரபணு மாற்று கனோலா என்கிற பயிர்தான். இது, எள் போன்றதொரு எண்ணெய் வித்துப் பயிர்.

நீண்டகாலமாகவே இருவரும் இரசாயன விவசாயம்தான் செய்து வந்தனர். இடையில், இயற்கை விவசாயத்துக்கு மாறினார் மார்ஷ். 2010 ஆம் ஆண்டு, 'வளம் குன்றாத வேளாண் மைக்கான ஆஸ்திரேலிய அமைப்பிடம், இயற்கை விவசாயச் சான்றிதழையும் பெற்றுவிட்டார். கோதுமை, கனோலா மற்றும் ஓட்ஸ் ஆகியவற்றையெல்லாம், இயற்கை விவசாய வழியில் விளைவித்து ஏற்றுமதி செய்தார். இந்த நிலையில்தான், சனியனாக வந்தது, மேற்கு ஆஸ்திரேலிய அரசின் மரபணு மாற்றுப் பயிர்களை அனுமதிக்கும் முடிவு.

அரசின் அறிவுறுத்தல்கள்படி, மான்சான்டோவின் மரபணு மாற்றப்பட்ட 'ரவுண்டப் ரெடி கனோலா'வைப் பயிரிடப் போவதாக அயலில் உள்ள விவசாயிகளுக்குத் தெரிவித்தார் பாக்ஸ்டர். இந்த விடயத்தை நண்பர் ஸ்டீவ் மார்ஷுக்கும் தெரிவித்தார். இந்த மரபணு மாற்றப்பட்ட பயிர், அயலில் உள்ள விவசாயப் பயிர்களில் கலந்துவிடக் கூடாது என்பதற்காக ஆஸ்திரேலிய அரசு அறிவுறுத்தியபடி பக்கத்து வயலில் இருந்து 15 மீற்றர் இடைவெளி கொடுத்து, கனோலாவைப் பயிரிடுகிறார் பாக்ஸ்டர் (மான்சான்டோ அறிவுறுத்தியிருப்பது 5 மீற்றர்தான்).




கனோலாவை அறுவடை செய்த பாக்ஸ்டர், நிலத்தின் அருகிலேயே அவற்றைக் காய வைத்தார். நண்பர்களின் போதாத காலம்... பலத்த சூறாவளி வீச, அந்த மர பணு மாற்று கனோலா, வேலி தாண்டி ஸ்டீவ் மார்ஷ் நிலத்துக்குள் பரவிவிட்டது. தன்னுடைய 400 ஹெக்ரேயர் நிலத்தில், கிட்டத்தட்ட 350 ஹெக்ரேயர் பரப்பில் இந்த கனோலா விளைந்துள்ளதைக் கண்டு அதிர்ச்சியடைகிறார் மார்ஷ். மேற்கு ஆஸ்திரேலியாவின் வளம் குன்றாத வேளாண்மைக்கான அமைப்பும் இதை உறுதி செய்து, அந்த 350 ஹெக்ரேயர் பரப்பளவு நிலத்தை, ஏற்கெனவே தான் வழங்கிய இயற்கை விவசாயச் சான்றிலிருந்து நீக்குகிறது (அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள், இயற்கை விவசாய விளைபொருள்களில் 0.9-5 வீதம் வரை கலப்படம் இருக்கலாம் என்று விதிகளை வைத்துள்ளன. ஆனால், மிகக் கடுமையான விதிகளை வைத்திருக்கிறது ஆஸ்திரேலியா). இதையடுத்து, 'எனக்கு 47.6 லட்சம் ரூபா நட்டம்' என்று பாக்ஸ்டர் மீது குற்றம்சாட்டி, 2011 ஆம் ஆண்டு நீதிமன்ற படியேறிவிட்டார் மார்ஷ்.

மரபணு மாற்றுப் பயிர்கள், எந்த ரூபத்தில் அடுத்தவரின் தோட்டத்துக்குள் பரவினாலும், 'விவசாயிகள் திருட்டுத்தனமாக எங்களுடைய விதைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று உலக அளவில் ஒவ்வொரு மூன்று வாரத்துக்கும் ஒரு விவசாயி மீது வழக்கு போட்டு வருகிறது மான்சான்டோ. 1997 ஆம் ஆண்டு மரபணு மாற்றுப் பயிர்களை அறிமுகப்படுத்திய வேளை தொடங்கி, இந்த 16 ஆண்டுகளில், இப்படி பல லட்சம் டொலர்களை நட்டஈடாகவும் பெற்றிருக்கும் மான்சான்டோ, இந்தத் தடவை மார்ஷ் மீது வழக்கு எதுவும் தொடுக்கவில்லை. 'இந்தச் சூழல் வருந்தத்தக்கது என்று அறிக்கை மட்டும் கொடுத்து விட்டு, வாயை மூடிக் கொண்டு விட்டது. அதேசமயம், பாக்ஸ்டருக்காக மான்சான்டோதான் வழக்கையே நடத்திக் கொண்டிருக்கிறதாம், ஒரு தொண்டு நிறுவனம், மார்ஷின் வழக்கை நடத்தி வருகிறது. வழக்குச் செலவுக்காக இசைக் கச்சேரிகள் நடத்தி பொதுமக்களிடம் நிதி திரட்டி வரு கிறது அந்தத் தொண்டு நிறுவனம். வழக்கு, இன்று இருவரின் கைகளை விட்டு மாறியிருப்பினும்... 'என் நண்பனைக் கஷ்டப் படுத்துவது வருத்தமளிக்கிறது என்றே இருவரும் பரஸ்பரம் கூறி வருகின்றனர்.

இரு தரப்பிலிருந்தும் பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 20 வல்லுநர்கள், உலகின் மிகமிக அரிதான இந்த வழக்கில் சாட்சி அளிக்க உள்ளனர். 'மார்ஷ் மீது குறையோ, குற்றமோ சொல்ல முடியாது' என்று சொல்லியிருப்பதுடன்... 'இந்த வழக்கு பொதுமக்கள் அதிக அக்கறை காட்டும் வழக்காக உள்ளதால், வழக்குச் சார்ந்த எல்லா விவரங்களையும், இணையத்தில் வெளியிடுங்கள்' என்று உத்தரவிட்டிருக்கிறார் நீதிபதி கென்னத் மார்ட்டின். மார்ஷ் மீது எப்படி எந்தக் குற்றமும் காண முடியாதோ... அது போலவே பாக்ஸ்டர் மீதும் எந்தக் குற்றத்தையும் காண இயலாது. அவர், அரசு அறிவுறுத்திய எல்லா விதிகளையும் கடைப்பிடித்திருக்கிறார்.

வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில், நீதிமன்ற உத்தரவின்படி தன்னுடைய அறுவடை முறையை பாக்ஸ்டர் மாற்றிக் கொண்டுவிட்டதால், மறுபடியும் மரபணு மாற்றப்பட்ட கனோலா பயிரிட அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. மார்ஷுக்கும் இயற்கை விவசாயச் சான்று திரும்ப வழங்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் இருவரும் தங்களின் விவசாயத்தைத் தொடரலாம் என்பது மகிழ்ச்சி தரக்கூடிய விடயமே! அதேசமயம், 'சிக்கல்... இருவேறு வகையிலான விவசாய முறையில்தான் இருக்கிறது. எனவே, இரண்டில் ஒன்று மட்டும்தான் இருக்க முடியும்' என்கிற ரீதியிலான சண்டையாக இது மாறியுள்ளது.

"என்னுடைய 1,175 ஹெக்ரேயரின் பசுமை சூழ்ந்த நிலப்பரப்பில் மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்த வாழ்க்கை, இப்படி சிதைந்து போகும் என்று நான் நினைக்கவில்லை. மான்சான்டோ போன்ற நிறுவனங்களின் கைக்கூலி போலவும்... அயலிலுள்ள விவசாயிகளின் நிலத்தைத் தெரிந்தே கலப்படம் செய்தேன் என்பது போலவும் மக் களால் நான் சித்தரிக்கப் படுகிறேன். 'நான் அத்தகையவன் அல்லன் என்பது பலருக்கும் தெரிந்தாலும், இப்படித்தான் சித்தரிக்கப்படுகிறேன். இதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்ததை நினைத்துப் பார்க்கையில் கசப்பும் வருத்தமுமே மிஞ்சி நிற்கிறது. நீண்ட கால நட்பில் விரிசல், தேவையில் லாத கெட்ட பெயர், மோசமான விளம்பரம் எனப்பலவும் கசப் பாகவே உள்ளன" என்று மிகுந்த மன வேதனையுடன் பகிர்ந்து கொள்கிறார் பாக்ஸ்டர். மர பணு மாற்றுப் பயிர்கள்... மண்ணை மட்டுமல்ல... நட்பையும் கெடுக் கும் போலும்!



# பச்சை குத்துவதால் புற்றுநோய் ஏற்படுமாம்

இன்றைய இளம் தலைமுறைப் பெண்கள் தலைக்கு வர்ணம் பூசிக் கொள்ளவும் செயற்கை மருதாணி போடவும் ஆர்வம் காட்டுகின்றனர்.

உடலில் பச்சை குத்திக் கொள்வதும் இன்றைய இளைஞர்களிடையே நாகரிகமாகி வருகிறது.

ஹென்னா பயன்படுத்துவதாலும், பச்சை குத்துவதாலும் லுக்கீமியா புற்றுநோய் தாக்கும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கின்றனர் மருத்துவர்கள்.

## உடலைப் பாதிக்கும் இரசாயனம்

நமது உடலில் உள்ள மரபணுவை நேரடியாகச் சென்று தாக்கக் கூடிய கார்சினோஜினிக் என்னும் இரசாயனம் ஹேர்டையில் கலக்கப்படுவதால் அதனைத் தலைக்குத் தடவும் போது அது தலைமுடிகளில் வேர்ப் பகுதிகளின் மூலம் உடலில் ஊடுருவி இரத்தத்தில் கலந்து விடுகின்றன.

கார்சினோஜினிக் நச்சுப்பொருள்கள் சிறுநீரகப்பையில் நிரந்தரமாகத் தங்கிவிடுவதால் இவை லிம்போமா என்னும் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறது என்கின்றனர் புற்றுநோய் நிபுணர்கள்.

பிற வண்ணங்களைக்காட்டிலும் கறுப்புநிற சாயங்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் நச்சுப்பொருள்கள் அதிகம் உள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தடை செய்யப்பட்ட பென்சின்

இதுமட்டுமல்லாது அடர்த்தியான கூந்தல் வேண்டும் என்பதற்காகவும், நிறம் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும் பெண்கள் செயற்கை மருதாணி எனப்படும் ஹென்னாவை பயன்படுத்துகின்றனர்.

இந்த ஹென்னாவில் கலக்கப்படும் பென்சின் இரசாயனம் தான் லுக்கீமியா எனப்படும் இரத்தம் மற்றும் எலும்பு மச்சைப் புற்றுநோய்ப் பாதிப்புக்கு காரணமாகிறது என்கின்றனர் மருத்துவர்கள்.

அழகுக்காகப் பச்சை குத்திக் கொள்வதும் ஆபத்தானது என்கின்றனர் புற்றுநோய் மருத்துவர்கள்.

பென்சின் கலக்கப்பெற்ற அழகு சாதனப் பொருள்கள் பயன்படுத்துவது வளர்ந்த நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அவை எளிதில் கிடைக்கின்றன. இவை புற்றுநோய் மட்டுமல்லாது தோல் நோய்களையும் ஏற்படுத்துகின்றன.

எனவே அவசியமற்ற தருணங்களில் தலைமுடியில் சாயம் தடவுவதையும் தரமற்ற செயற்கை மருதாணியைப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும் என்பது மருத்துவர்களது ஆலோசனை.



# அதிகமாகத் தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு ஆபத்து



அதிகமாகத் தொலைக்காட்சி பார்ப்பவர்கள் விரைவாகவே இறந்து விடுவார்கள் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் இந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்வில் உற்சாகம் தரும் ஒவ்வொரு பொருளும் எமது உடல் நிலையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதற்கு தொலைக்காட்சி மட்டும் விதிவிலக்கல்ல. பொழுதுபோக்கு அம்சமாக நினைத்து அனைவரும் விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி, உடல்நிலையை எந்தளவுக்கு பாதிக்கும் என்பது குறித்து சமீபத்தில் ஆய்வு நடத்தப்பட்டது. மனிதர்களின் வாழ்விலும், உடல் நிலையிலும் தொலைக்காட்சி ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் மூலம், அதிகம் தொலைக்காட்சி பார்த்தால் ஆயுள் குறையும் என்ற அதிர்ச்சித் தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் 25 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் நீங்கள் தொலைக்காட்சி பார்க்கும் ஒவ்வொரு மணிநேரமும் உங்களின் வாழ்நாளில் 22 நிமிடங்களை இழக்கிறீர்கள் என்று ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது. பெரும்பாலானவர்கள் படுத்துக் கொண்டே தொலைக்காட்சி பார்க்கும் பழக்கம் கொண்டவர்களாக இருப்பதால் அவர்களுக்கு இதய நோய், சர்க்கரை நோய், சில வகையான புற்றுநோய் உள்ளிட்ட பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றனவாம். இதன் விளைவாக இளம்வயதில் மரணமும் ஏற்படுகிறது என்று அந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கடல்நீரில் உப்புத் தன்மை வந்தது எவ்வாறு?

மழை பெய்து குளிரும் போது, வெப்பமான கடல் அடி மட்டத்தில் நீர் சுழற்சி இடம்பெறும்போது பல தாதுக்கள் அதில் எளிதில் கரையும்.


கடலில் நீருக்குள் பல எரிமலைகள் இருக்கின்றன. அவை வெளியிடும் லாவாக்கள் மற்றும் வாயுக்களில் இருக்கும் தாது உப்புகள் நீரில் கலந்து உப்புத் தன்மையை அதிகரிக்கும். அதனாலும் உப்பு கடல் நீரில் சேர்கிறது.

கடல்வாழ் ஜீவராசிகள் கடலில் இறந்து மக்கி தாதுக்களைச் சேர்க்கின்றன. கடலுக்கு நதிகளும் நீரைக் கொண்டு வந்து சேர்க்கிறது. அவ்வாறு வரும் போது எண்ணற்ற தாதுக்களும் அடித்து வரப்படுகின்றன. அவையும் உப்புத் தன்மையை அதிகரிக்கும். கடலில் தான் நதிகள் கலக்கின்றன. கடலில் இருந்து எந்த நதியும் பிறப்பதில்லை. இதனால் நீர் வெளியேற்றம், உப்பு என்று எதுவும் வெளியேறாது.

சூரிய வெப்பத்தின் மூலம் ஆவியாதல் தான் கடலில் இருந்து நீர் வெளியே போகும் ஒரே வழி. அவ்வாறு ஆவியாகும்போது, உப்புக்கள் எடுத்துச் செல்லப்படாது கடலில் தங்கும். பின்னர் மழையாக நிலப்பகுதியில் பெய்து தாதுக்களுடன் மீண்டும் கடலில் சேரும்.

இதுபோன்ற நீர்ச் சுழற்சி பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக நடந்து கடல் நீரில் உப்புத் தன்மை மிகுந்து விட்டது. கடலில் நீர் சேரும் விகிதத்தில் ஆவியாதல் தவிர வேறுவழியில் நீர் வெளியேறிக்கொண்டு இருந்திருந்தால் உப்புத் தன்மை மிகுந்து இருக்காது.

தற்போது கடலில் இருந்து உப்புகள் எடுக்கும் வீதமும், சேரும் வீதமும் சம அளவில் இருப்பதால், கடல் நீரின் உப்பு ஒரு சம நிலை விகிதத்தில் இருக்கிறது.



# நேர்மை பொறுப்புணர்வை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள்



நேர்மறையான எண்ணங்களையும், நல்ல ஒழுக்கமான பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள் எதிர்காலத்தில் தலை சிறந்தவர்களாக உயர்வார்கள் என்கின்றனர் குழந்தை நல மருத்துவர்கள். பிஞ்சுப் பருவத்திலேயே அவர்களுக்கு நேர்மை பொறுப்புணர்வைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்துகின்றனர். அவர்களின் ஆலோசனைகளைப் படியுங்களேன்.

**பொய் சொல்லக்கூடாது**

பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள்தான் சிறந்த முன் உதாரணம். எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு நீங்கள்தான் கற்றுத்தரவேண்டும். பொய் சொல்வதால் ஏற்படும் தீமைகளைப் பெற்றோர்கள்தான் கற்றுக்கொடுக்கவேண்டும். அதை விடுத்து யாரிடமாவது தொலை பேசியில் பேசும் போது வீட்டில் இருந்து கொண்டே வெளியூரில் இருப்பதாகக் கூறினால் அவசியத்துக்குப் பொய் சொல்வது தப்பில்லை என்று நினைத்துக் கொள்வார்கள்.

நேர்மையாக இருப்பதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து 'மரவெட்டியின் கதை' போன்ற நீதிக்கதைகளைக் கூறி பிள்ளைகளை மகிழ்வூட்டலாம்.

**பொறுப்புணர்ச்சி அதிகரிக்க**

வெளியிடங்களுக்குப் போவதானால் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு செல்லுங்கள். யாரிடமும் விட்டு விட்டுப் போகாதீர்கள். எங்கு போனாலும் கூட்டிக்கொண்டு போனால்தான் அவர்களுக்கும் எங்கு, எப்படி நடந்து கொள்வது என்பது தெரியும். கோயிலுக்கு அழைத்துச் சென்றால் அங்கு விளையாடக் கூடாது என்று கூறி அழைத்துச் செல்லுங்கள். அப்பொழுது தான் அங்கு அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும். கண்ணை மூடி இறைவனை வழிபட்டால் மட்டுமே கோவிலின் அமைதி பாதுகாக்கப்படும் என்றும் அவர்களுக்குத் தெரியும்.

ஹோட்டலில் சில குழந்தைகள் ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருப்பார்கள். எதையாவது தட்டி உடைத்து விடுவார் கள். அதுமாதிரியான இடங்களுக்குச் சென்றால் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கற்றுக்கொடுங்களேன். அதே போல் அடுத்தவர்கள் வீட்டுக்குப் போகும் போது எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்றும் பழக்கப்படுத்த வேண்டும்.

சூப்பர் மார்கெட் போன்ற இடங்களுக்கு பொருள்கள் கொள்வனவு செய்யச் சென்றால் குழந்தைகளுக்கு ட்ராலி தள்ளக் கற்றுக் கொடுங்கள். அதுவே மிகப்பெரிய பொறுப்பை அவர்களுக்கு கொடுத்தது போல ஆகும். அதேசமயம் பார்க் போன்ற விளையாடும் இடங்களுக்குச் சென்றால் ஓடி ஆடி விளையாட விடுங்கள். அவர்களின் மகிழ்ச்சி இரட்டிப்பாகும்.

# மனிதக் கண்ணீர் உப்புக்கரிப்பது ஏன்?



மனிதர்களின் கண்ணீரும், வியர்வையும் உப்புக் கரிப்பது ஏன் என்றால் லாக்ரிமல் சுரப்பிகளில் இருந்து கண்ணீர் வருகிறது. அதில் உப்பு வரக்காரணம், எமது உடலில் உள்ள செல்கள் மற்றும் அதன் வெளிப்புறத்தில் உள்ள திரவங்களில் உப்பு இருக்கும்.

உள், வெளி உப்பு அடர்த்திக்கு ஏற்ப செல் உள் நீர் பரிமாற்றம் நடக்கும். எனவே தான் லாக்ரிமல் சுரப்பிகளில் இருந்து வரும் திர்வம் கண்ணீரில் உப்பு ஆக இருக்கிறது.

வியர்வை உடலைக் குளிரவைக்க உதவும் ஒரு தகவமைவு. வியர்வையும் உடல் சுரப்பிகளில் இருந்துதான் வெளியேறுகிறது. அதிலும் எமது உடலில் உள்ள உப்பில் உடல் செயற்படுவதால் ஏற்படும் வளர்சிதை மாற்றத்தால் உருவாகும் யூரியாவும் கலந்து வரும்.

அதனால் வியர்வையும் உப்புக் கரிக்கும்! அதிக வியர்வையால் உடல் உப்பு சத்தை இழந்து உடல் தளர்ச்சி, தசை பிடிப்பு ஏற்படும். அதனை ஈடு செய்ய அப்போது உப்புச் சத்துள்ள திரவங்களை உட்கொள்ள வேண்டும்.

# அப்பாடா தப்பின பூனையின் கண்கள்



ஒரு கிராமத்தில் பணக்காரக்கிழவி ஒருத்தி வசித்து வந்தாள். அவளது பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வந்தார்கள். அவள் உதவியற்றவளாகக் காணப்பட்டாள். அவளது வீட்டின் உணவுக்களஞ்சிய அறைக்குள் எலிகளின் தொல்லை அதிகமாக இருந்தது. அவை தானிய மூடைகளைச் சேதமாக்கின. பலகாரப் பெட்டிகளுக்குள் குதித்து விளையாடின. அவள் சேமித்து வைத்திருந்தவையெல்லாம் எலிகளால் அழிந்து போவதை அவளால் தடுக்க முடியவில்லை. எலிகள் வீட்டுக் கூரையின் உட்பக்கமாக தாம்... தீம்.. என்று குதித்துக் கும்மாளம் இடுவதும் அவளில்லாத வேளைகளில் தானிய மூடைகளைக் காலி செய்வதுமாக இருந்தன.

இதனால் வருத்தமடைந்த கிழவி கடை கடையாக ஏறிஇறங்கி விதவிதமான எலிப்பொறிகளை வாங்கி வந்தாள். களஞ்சிய அறையினுள் அகப்படக்கூடிய வகையில் ஆயத்தப்படுத்தி வைத்து விட்டு அவள் உறங்கிவிட்டாள். காலையில் ஆவலோடு போய் எலிப்பொறிகளை நோக்கினாள். ஏமாற்றமைடைந்தாள். ஒரு பொறியில்கூட ஒரு எலிகூட மாட்டவில்லை. இப்போது கிழவி முன்பிலும் மிகவும் வருத்தமடைந்தாள். எலித்தொல்லையை ஒழிக்க ஒரு பூனைக்குட்டியை வாங்கி வளர்ப்பது என்று தீர்மானித்தாள். அயலூருக்குச் சென்று ஒரு பூனைக் குட்டியையும் வாங்கிவந்தாள். அதற்கு மாமிச உணவை ஊட்டி ஊட்டி ஆர்வத்துடன் வளர்த்தாள். சில மாதங்கள் சென்றதும் அது நன்கு வளர்ந்து விட்டது. பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதற்காக உயரத்துள்ளிக் குதித்து, கால்களில் அகப்பட்ட பொருள்களைத் தட்டி, ஓடித் தாவித்திரிந்தது. மரங்களின் மீது விர் விர் என்று ஏறியது. மூதாட்டி அதற்கு உணவு கொடுக்கத் தாமதமானால் அவளது கால்களின் மீது பாய்ந்து கடித்து விடுவது போல் பாசாங்கு செய்தது. மூதாட்டியோ தனது கால் கைகளைப் பிடிக்கும் பூனை எப்பொழுது எலியைப் பிடிக்கப்போகிறதோ எனக் காத்திருந்தாள்.

நாள்கள் சில கழிந்தன. கிழவி எதிர்பார்த்தது போல் பூனையும் எலி வேட்டையைத் தொடங்கியது. சில வேளைகளில் ஒரு நாளைக்கு இரு எலிகளைக் கூட கொன்று தனது உணவாக்கியது. களஞ்சிய அறையிலும் எலிகளின் நடமாட்டம் குறையத் தொடங்கியது. கிழவி மிக்க மகிழ்ச்சியோடு காணப்பட்டாள். பூனையை அன்பாகத் தடவிவிட்டாள். ஆசையோடு அதனைத் தன் மடிமீது உட்கார வைத்தாள். பூனைக்கு மிகவும் கொண்டாட்டம். அவள் உறங்கும் மெத்தையில் அதுவும் உறங்கியது. அந்த மூதாட்டி வளர்க்கும் இரு நாய்களை விடவும், அதிக உரிமை பூனைக்கு இருந்தது. நன்கு உணர்ந்தது. இதனால், பணக்காரக் கிழவியின் மாளிகை போன்ற அந்த வீட்டுக்கு தானே, இராஜ குமாரன் என நினைத்து இறுமாப்பு அடைந்தது. பூனையின் எலிவேட்டை தொடர்ந்த தால், கொல்லப் பட்டவை போக எஞ்சிய எலிகள் தப்பினோம், பிழைத்தோம் என்று ஓட்டம் பிடித்தன; எங்கோ தொலைந்தும் விட்டன. இதனால், பூனை இராசா, அணில் வேட்டையைத் தொடங்க எண்ணினார்.

பூனை கிழவியின் தோட்டப்பக்கம் உள்ள பழமரங்களை அவதானிக்கத் தொடங்கியது. அணில்கள், சுதந்திர மாகத் தாவிக் குதித்துக் கூடியிருந்து பழங்களை உண்டு மகிழ்வதைப் பார்க்க பூனைக்குப் பொறாமை பொங்கி வழிந்தது. மாமரத்தை நோக்கி மறைவாக நகர்ந்தது. மரத்தின் அடியில் அணில்கள் பழம் கொறித்துக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றைக் குறிவைத்தது பூனை. அந்த அணிலின் மீது பூனை பாய முற்பட்ட பொழுது, அதே மரத்திலிருந்த பறவைக் கூட்டமொன்று கூச்சலிட்டு ஆர்ப்பரித்தது. அது ஒரு எச்சரிக்கை ஒலியாகவே இருந்திருக்க வேண்டும்... அதைப் புரிந்து கொண்ட அணில்கள், பதிலுக்கு தாமும் கூச்சலிட்டுக் கொண்டு மரத்தின் மீது தாவி ஏறி மறைந்து கொண்டன. இப்போது பூனை அந்தப் பறவைகளை உற்று நோக்கியது. தொடர்ந்து அவதானிக்கவும் தொடங்கியது. அப்பொழுது தான், அதற்கொரு விசித்திரம் புரிந்தது. அப்பறவைகள் மரத்திலிருக்கும் பழங்களை உண்ணவில்லை. மரத்தின் இலைகளின் மீதும், பட்டைகளுக்குள்ளும் இருக்கும் புழுக்களையும் பூச்சிகளையும் லபக் என்று ஒரே கொத்தில் தூக்கிவிடுகின்றன. பின்பு அதனை மென்று தின்று விடுகின்றன. பூனை வியப்பில் மூழ்கியது...

மறுநாள் பூனை அணிலைப்பிடிக்க முயன்றது. புழு உண்ணிப் பறவைகளைப் பொருட்படுத்தவில்லை. தன்னுடைய ஆற்றலுடன் ஒப்பிடும் பொழுதும் அந்தப் பறவைகளின் ஆற்றல் எம்மாத்திரம் என்று எண்ணியது. அணிலைப் பிடிப்பதற்கு வசதியாக பூனை பதுங்கிக் கொண்டது. குறிவைத்த அணில் பழம் கொறிப்பதில் ஈடுபட்டிருக்கையில், பூனை மறைவாக பதுங்கியபடியே மெதுவாக நகர்ந்தது.

ஆனால், புழு உண்ணிப் பறவைகளின் கண் களிலிருந்து பூனை தப்பவில்லை. பூனையைக்கண்ட பறவைகள் சத்தமிட்டு ஆர்ப்பரித்தன. அணில்கள் அபாயத்தைப் புரிந்து கொண்டு மர உச்சிக்குத் தாவின. பறவைகள் சற்றுத் தள்ளி பூனையின் குறுக்கே கோபத்தோடு இறக்கைகளைச் சிலிர்த்தன; கூச்சலிட்டன. இறக்கைகளைச் சிலிர்த்தபடி கோபத்தோடு சுழன்றடித்து பூனையைச் சுற்றி வளைத்தன. பூனைக்கு இப்போது பயம் வந்தது. பறவைகளின் நோக் கம் மரத்தின் உச்சியில் அவற்றின் கூட்டுக்குள் இருந்த தனது குஞ்சுகளைக் காப்பதோ அல்லது தமது நண்பரான அணில்ப் பிள்ளைகளுக்கு உதவுவதோ என்பது புரியவில்லை. ஆனால், பூனை அதிர்ந்து விட்டது; திகைப்பு மேலிடப் பதுங்கிக் கொண்டது. இந்தப் பறவைகள் மிகவும் மோசமானவை போலிருக்கின்றன என்று எண்ணிக்கொண்டது. சினத்தில் பூனையை நோக்கி வருவதும் பின் வாங்குவதுமாக இருந்த பறவைகளைப் பார்க்க பூனைக்கு உதறலெடுத்தது. தாய்ப்பறவை ஒன்று பூனையின் கண்களைக் குறிவைத்து தாக்குவதுபோல் பூனை உணர்ந்தது. புழுக்களை லபக் என்று கொத்தி மென்று விழுங்கி விடுவதைப் போலத் தன் கண்களையும் அப்பறவை கொத்தி... மென்று, தின்று விடுமோ என்று, பூனைக்கு நடுக்கமெடுத்தது. பூனை பதுங்கிப் பதுங்கிப் பின்வாங்கியது; மரத்திலிருந்து விர் விர் என்று மின்னல் வேகத்தில் இறங்கி, தோட்டப் பக்கத்தை விட்டு வீட்டுப் பக்கமாக தலை தெறிக்க ஓட்டம் பிடித்தது. அறைக்குள் வந்து ஒளிந்து கொண்டு மூச்சு வாங்கியது; இன்னும் உள்ளுக்குள் உடல் நடுக்கம் மாற வில்லை. அப்பாடா எனது கண் கள் தப்பின என்று நெடுமூச்சு வாங்கிய பூனை, தனது முயற்சியில் தோற்றுப் போன தால் வருத் தமடைந்ததுடன் சோர்வடைந்து சுருண்டு படுத்துக் கொண்டது. தன் இயலாமையை எண்ணியபோது அதன் இறுமாப்பும் அடங்கியது.

## பொது அறிவு

பல் இல்லாத பிராணி எது?
தேவாங்கு

மிகவும் நச்சுத்தன்மையுள்ள பூச்சி எது?
கரும்சிலந்தி

சாரணர் இயக்கத்தின் தந்தை யார்?
பேடன் பவுல் பிரபு

முதன் முதல் முத்திரை வெளியிட்ட நாடு எது?
ஐக்கிய இராச்சியம்

நின்றபடி தூங்கும் விலங்கு எது?
குதிரை

மறைந்த நெல்சன் மண்டலோ எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
தென்னாபிரிக்கா

வன்னியை ஆட்சி செய்த கடைசித் தமிழ் மன்னன் யார்?
ப்ண்டாரவன்னியன்

ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான நாணயம் எது?
யூரோ

பி.ஜூலியல், தரம்-6பி,
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

## எல்லாரும் படிக்கணும்

ஆத்திசூடி படித்து - நீ ஆத்திரத்தை அடக்கணும்
மூதுரையைப் படித்து - நீ தீய உரையை விலக்கணும்
'நல்வழி' யைப் படித்து - நீ நல் வழியில் நடக்கணும்
கொன்றை வேந்தன் படித்து - நீ கொல்லாமை கற்கணும்
திருக்குறளைப் படித்து - நீ அறவழியில் மிளிரணும்
அவ்வை மொழிகள் யாவையும் ஔடதமாய் அருந்தணும்
நிறைவுடன் வாழவே நீ நீதி நூல்கள் படிக்கணும்
கற்றவழி நடக்கணும் கடமை செய்தே பிழைக்கணும்

கி.முகுந்தனா,
புற்றளை மகா வித்தியாலயம்.

## தொகைப் பெயர்

இரு சுடர் - சூரியன், சந்திரன்
இரு குரவர் - தாய், தந்தை
முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
முப்பொறி- மனம், வாக்கு, காயம்
நாற்படை- தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை
நால்வகைப்பா - ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா
ஐம்பெரும் காப்பியங்கள்- சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
ஐவகை நிலங்கள்- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
ஆறறிவு - பார்வை, கேள்வி, முகர்தல், சுவைத்தல், பகுத்தறிவு, தொடுகை
ஆறுபடை வீடு- பழனி, திருச்செந்தூர், திருத்தணிகை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை
எழு ஸ்வரம்- ஸ, ரி, க, ம, ப, த,நி
நவக்கிரகம்- சூரியன், சந்திரன், செவ்வாய், புதன்,சுக்கிரன், குரு,சனி, இராகு, கேது.


க.கஜீபன், தரம்-11 ஏ,
கிளி/ஐயனார் புரம் அ.த.க.பாடசாலை, வன்னேரிக்குளம்.

## கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடித்தோரும்

அச்சியந்திரம் - யோன்மற்றன் பேர்க்
புகைப்படக்கருவி - எல் மாகுரே
குருதிச் சுற்றோட்டம் - வில்லியம் கார்வே
நவீன சத்திரசிகிச்சை - விஸ்ரர் பிரபு
சிமெந்து - ஜோன் சிமிற்றன்
தட்டச்சு இயந்திரம் -ஷோல்ஸ்
ரேடியம் - கியூரி அம்மையார்

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# அதிசய கை அல்ஹாசரும் திருஞானசம்பந்தரும்



ஈஎஸ்பி சக்தியை வெளிப்படுத்திய நவீன கால மனிதர்கள் பற்றியும், அவர்களுடன் தொடர்புடைய புராண, மத ரீதியான சம்பவங்களையும் பார்க்கலாம். (எந்த மதத்தையும் இழிவுபடுத்தும் நோக்கம் இல்லை. வெறும் அறிவியல் ரீதியான பார்வை மட்டுமே) இப்போது இதில் பௌதீக விதிகளை மீறும் சக்திகள் என்ற பிரிவில் உள்ள சில மனிதர்களைப் பற்றிப் பார்க்கலாம்.

இஸ்ரேலின் தலை நகரில் 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்தவர் ஜோசப் அல்ஹாசர். தலை நகரில் மருத்துவராக பணி புரிந்த இவரது வீட்டில் மாலை நேரங்களில் இவரைக் காண்பதற்கென ஏழைகள் முதல் பெரும் பணக்காரர்கள் வரையில் வரிசையில் காத்திருப்பார்கள். காரணம் அவரது கைகள்! மருத்துவமனையில் பணி முடிந்ததும், தனது வீட்டில் நோயாளிகளைப் பார்வையிடுவது அவரது வழக்கம். அவரது வீட்டு பிரத்தியேக மருந்தக அறையில் மருத்துவத்துக்குரிய எந்தப் பொருள்களும் இருக்காது. ஒருவர் படுக்கக்கூடிய அளவில் ஒரு கட்டில் மட்டுமே இருக்கும்.


வரும் நோயாளிகள் அனைவரையும் தனது கைகளால் மெதுவாக வருடுவதன் மூலம் குணப்படுத்தும் அதிசய ஈஎஸ்பி தன்மை கொண்டவர் இவர். உதாரணத்துக்கு பதிவு செய்யப்பட்ட சம்பவங்களில் இருந்து ஒன்று. ஜெருசலேமில் வசித்துவந்த இயாஸ் என்ற பெண்ணுக்கு முதுகுப்புறம் தொடங்கி கால்,கைகள் உட்பட உடலின் அனைத்துப் பாகங்களிலும் திடீர் திடீரென ஊசி குற்றுவது போல் தீராத வலி ஏற்பட்டு பல நாள்களுக்கு நீடிக்கும். இத னால் தற்கொலைக்குக் கூட அந்த பெண் முயற்சித் துள்ளாள். இந்த நேரத்தில், அல்ஹாசர் பற்றிய தகவல் அறிந்து அவரிடம் சிகிச்சை பெற வந்திருந்தாள் அந்தப் பெண்.

பெண்ணின் நோயைக் கேட்டு அறிந்துகொண்ட அல்ஹாசர் ஒரு கணம் கண்ணை மூடித் தியானித்த பின்னர்; தனது கைகள் இரண்டையும் உரசி விட்டு அந்தப் பெண்ணின் முதுகுப்புறத்தை இலேசாகத் தடவினார். சற்று நேரத்தில் அந்தப் பெண்ணிடம் நிலைகொண்டி ருந்த வலிகள் அனைத்தும் காணாமற் போயின! அல் ஹாசரின் கைகள் பட்டபோது தனது உடலில் மின்சாரம் சிறு அளவில் பாய்ச்சப்பட்டது போன்று தான் உணர்ந் ததாக அந்தப்பெண் கூறியுள்ளார். அல்ஹாசரின் புகழ் பரவவே சில விஞ்ஞானிகள் அல்ஹாசரை சோத னைக்கு உட்படுத்த முடிவெடுத்தார்கள். அல்ஹாசர் கண் களை மூடி கைகளை உரசி உடலைத் தொடும்போது, உண்மையிலேயே அல்ஹாசரின் கைகளில் சிறிய மின்னோட்டம் உருவாவதை ஆராய்ச் சிக் கருவிகள் காட்டின. அவரிடம் உருவான அந்த மின் திறன் 3728.5 Watts மின் சாதனத்தை இயக்கவல் லதாக இருந்தது!

ஒரு சாதாரண மனிதனிடம் இவ்வாறான மின் சக்தி உருவாக வாய்ப்பேயில்லை. மேலும் இன்னோர் ஆச்ச ரியமாக, திடகாத்திரமான மனிதர்கள் மீது அவரின் மின் னோட்டம் பாயவில்லை! அது ஏன் என்பது இன்றுவரை இடைவெளியுள்ள கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

அல்ஹாசர் தனது சக்தி குறித்து குறிப்பிடுகையில், தான் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முன்னர் எனது மனதை ஒரு நிலைப்படுத்துகின்றேன். அப்போது எனது கைகளில் மின்னோட்டம் ஓடுவதை உணர்கின்றேன். என்றார். மேலும், சாதாரண நேரங்களில் அத்தகைய மின்னோட்டம் இருப்பதில்லை எனவும், இந்தச் சக்தி தனக்கு சிறுவயது முதல் இல்லை என்றும் குறிப்பிட்டுள் ளார். அதேவேளை, தான் யாரிடமும் கட்டணம் கேக் காமல் இருப்பதும், வாரத்தில் இரு நாள்கள் தாங்களாக முன்வந்து நோயாளி கள் கொடுக் கும் கட்டணத்தைக் கூட வாங்காமல் இலவசமாக சிகிச்சை கொடுப்பதால் இந்தத் திறன் தனக்கு அதிகரிப்பதாக உணர்வதாகவும் குறிப்பிட்டி ருந்தார். பிற்காலத்தில் அவரிடம் அந்த சக்தி இல்லாமல் போனதாக அறியமுடிகிறது.

இந்துபுராண கதைகளில், 64 நாயன்மார்களின் அற்புதங்கள் என்று ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் பெரும் பாலும் மேலே குறிப்பிட்ட அல்ஹாசரின் சம்பவங்களுடன் ஒத்துப் போகும். இந்த நாயன்மார்கள் சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத பல அற்புத செயல்களைச் செய்திருப்பதாக கதைகளில் குறிப்பிடப் படு கிறது. நோய்களை போக்குவது, சுண்ணாம்பு அறையைக் குளிர்மைப் படுத்துவது, நிறைகளை இல்லாமல் செய்வது என்று பல அற்புதங்கள் கூறப்படுகின்றன. அவை அனைத்துமே இந்த ஈஎஸ்பி என்ற அறிவியல் பகுதிக்குள் வைத்துப் பார்க்க கூடியவைகளே.



நான் அறிந்த வரையில், நாயன்மார்கள் தமது விசேட சக்திகளை தவம் இருந்து பெற்றதாக பெரும்பாலும் எங்கும் குறிப்புக்கள் இல்லை. (அதேநேரம் அனைவரும் கடவுள் பக்தியுள்ளவர்களாக இருந்ததாகக் குறிப்புக்கள் உண்டு. (அல்ஹாசர் தனது மனதை ஒருநிலைப்படுத்த கண்மூடித் தியானம் செய்ததும் நாயன்மார்களின் சம்பவங்களில் வரும் கடவுள் வழிபாடும் ஒன்றாகவும் இருக்கலாம்.)

சற்று விரிவாக ஒரு உதாரணத்தைப் பார்த்தால், பாண்டிய மன்னன் நோய் வாய்ப்பட்டிருக்கும்போது திருநீறு மற்றும் கைகளால் அதை திருஞானசம்பந்தர் நீக்கியதாக குறிப்பிடப் படுகிறது. அல்ஹாசர் செய்த சிகிச்சைக்கும் இந்தச் சம்பவத்துக்கும் பெரும் வித்தியாசங்கள் இல்லை. (திருநீறு என்று குறிப்பிடப்பட்டது மூலிகையாகவும் இருக்கலாம். அல்லது, அந்தக் கால கட்டத்தில் நடைபெற்ற சமண, சைவ மோதல் களில் சைவத்தை மேம்படுத்திக்காட்ட பயன்பட்ட யுக்தியாகவும் இருக்கலாம்)





உங்கள் ஸ்கூட்டர் லீற்றருக்கு எத்தனை
கிலோமீற்றர் பயணிக்கின்றது.

உங்கள் ஸ்கூட்டரின் எரிபொருள் சிக்கனத்தை பரிசோதித்து புதிய Activa i ஒன்றினையும் மேலும் பல பரிசில்களையும் வெல்லும் அரிய வாய்ப்பு.

நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் நகருக்கு விஜயம் செய்யும் Activa I Ride & Win Team உடன் இணைந்து உங்களது ஸ்கூட்டரின் எரிபொருள் சிக்கனத்தை பரீட்சித்து அன்றைய தினம் உங்களது ஸ்கூட்டரின் அதி சிறந்த எரிபொருள் சிக்கனத்தை உறுதி செய்து Honda வினால் வழங்கப்படும் பரிசுகளை வெல்லுங்கள்.

இதே வேளை ஸ்கூட்டர் ஒன்றினை கொள்வனவு செய்ய நீங்கள் நினைத்து இருப்பின் நீங்கள் செய்ய வேண்டியது Activa i Ride & Win Team உடன் இணைந்து Activa i ஸ்கூட்டர் ஒன்றினை Test Ride செய்து மாபெரும் பரிசுப்போட்டியில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுங்கள்.

Ride & Win Team உடன் இணையுங்கள்.
ஆகஸ்ட் 04 - பாணந்துறை டவுன்
ஆகஸ்ட் 05 - பண்டாரகம டவுன்
ஆகஸ்ட் 06 - ஹொரன டவுன்
ஆகஸ்ட் 07 - அகலவத்த டவுன்
ஆகஸ்ட் 08 - கழுதர ரு வாதுவ டவுன்
ஆகஸ்ட் 09 - பாணந்துறைகடற்கரை
ஆகஸ்ட் 11 - அழுத்கம டவுன்

கடந்த வாரம் வெற்றியாளர்கள் !



Mr.M.G.U.Gunathilaka Dambulla - 72 kmpl
Mrs.H.M.N.Kumari Melsiripur a - 70 kmpl
Mrs.M.G.C.Udayangani Wariyapola - 73 kmpl
Mrs.W.M.P.P.Wijesinghe Maho - 72 kmpl
Mrs.N.Samarasinghe Pannala - 68 kmpl
Mrs.K.A.T.Dayanthi Kurunegala - 68 kmpl



விற்பனை விலை : ரூபா.178,125+வரி

வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10. தொ: 011-7607200 மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 625, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு தொ.பே: 065-7607200

Official Radio Partner

# மற்றவர்கள் கூறும் கருத்தால் நாம் சோர்ந்து விடக்கூடாது



பெரும்பாலான மனிதர்கள் எதனுடைய மதிப்பையும் அடுத்தவர்களுடைய கருத்துகளை வைத்தே எடை போடுகிறார்கள். பலரும் ஒரு சாதாரண விடயத்தை ஓஹோ என்று புகழ்ந்தால் அது உன்னதமாகத் தெரிகிறது. ஒரு உயர்ந்த விடயத்தையும் பலரும் பரிகசித்தால் அது செல்லாக்காசாகி விடுகிறது. ஆனால் உண்மையான மதிப்பை பெரும்பாலானோரின் கருத்துகளை வைத்து எடை போடுவது சரியானதாக இருக்காது. ஏனென்றால், எல்லோரும் ஆழமாக அறிந்தே ஒன்றைப் பற்றிக் கருத்துக்கணிப்பு கொள்ள வேண்டும் என்பது கட்டாயமில்லை.

பெரும்பாலான மனிதர்கள் தங்கள் அறிவுக்கேற்பவே ஒன்றைப் பற்றிக் கணிப்பிடுகிறார்களே ஒழிய உண்மையான தன்மையின் அடிப்படையில் அல்ல. அவரவர் மன நிலை, அறிவு, அனுபவம், விருப்பு வெறுப்புகளை ஒட்டியே விமர்சனங்கள் எழுகின்றன. சிலர் அந்தச் சிரமத்தைக்கூட மேற்கொள்வதில்லை. அவர்கள் மதிப்பவர்கள் என்ன சொல்கிறார்களோ அதுவே அவர்களுடைய கருத்தாகியும் விடுகின் றது. நோர்மா ஜீன் பேக்கர் என்ற இளம் பெண் மொடலாகும் கனவுடன் ஒரு மொடலிங் நிறுவனத்துக்குச் சென்று வாய்ப்புக் கேட்டார். அங்கே அந்தப் பெண்ணை நீயா, மொடலா? என்று பரிகசித்தார்கள். ஏதாவது குமாஸ்தா வேலைக்குச் செல். இல்லாவிட்டால் திருமணம் செய்து கொண்டு வீட்டைக்கவனி என்று அறிவுரையும் செய்து அனுப்பினார்கள். அவர்கள் கருத் தைத் தீர்ப்பாக எடுத்துக் கொண்டு தனது கனவை அந்தப் பெண் கலைத்து விட்டிருந்தால், ஹொலி வூட் உலகத்துக்கு மர்லின் மன்றோ என்ற அற்புதக் கதாநாயகி கிடைத்திருக்க மாட்டார். இன்றும் பேசப்படும் சிறப்பை இழந்திருப்பார்.



தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் ஸ்ரீதர் என்பவர் ஒரு மிகப் பெரிய இயக்குநர். அப்படிப்பட்டவரிடம் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கேட்டு ஒரு தமிழ்ப் பெண் சென்றார். ஸ்ரீதர் இந்த முகம் காமராவுக்குப் பொருத்தமல்ல என்று சொல்லி அனுப்பிவிட்டார். அந்தப் பெண் தான் ஹிந்தித் திரையுலகில் கனவுக் கன்னியாக பல ஆண்டுகள் கோலோச்சிய ஹேமமாலினி. இவ்வளவு பெரிய இயக்குநர் சொல்லி விட்டாரே. உண்மையில் எனக்கு திரையுலக முகவெட்டு இல்லை என்று திரும்பி இருந்தால் ஹேமமாலினி அடையாளம் காணப்படாமலேயே போயிருப்பார். மிகவும் மந்த புத்திக்காரன். அறிவுக் கூர்மை போதாது என்று ஆசிரியர்களால் கருதப்பட்ட ஒரு இளைஞர் அதை ஏற்றுக் கொண்டு தனது திறமைகளில் நம்பிக்கை இழந்து பின்வாங்கி இருந்தால் 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியாக உலகம் கருதும் ஆல்பேர்ட் ஐன்ஸ்டீனை உலகம் இழந்திருக்கும். விமான இயந்திரவியல் படிக்க விண்ணப்பித்து பன்னிரண்டு பேர் டேராடூனில் நேர்முகத் தேர்வுக்குச் சென்றார்கள். அந்தப் பன்னிரண்டு பேர்களில் ஒருவர் மட்டும் தகுதியற்றவர் என்று நீக்கப்பட்டார். அவர் தான் டாக்டர் அப்துல்கலாம். விமான இயந்திரவியலுக்குத் தகுதியற்றவர் என்று நீக்கப்பட்டவர் பின்னாளில் இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறையில் இயக்குநர் பதவி வகுத்து பல சாதனைகள் புரிந்தது விந்தையல்லவா? பாடசாலைகளில்கூட கூடைப்பந்தாட்டக் குழுவில் விளையாடத் தகுதியல்லாதவர் என்று மறுதலிக்கப் பட்ட ஒருவர் பின்னாளில் உலகப்புகழ்பெற்ற கூடைப்பந்தாட்ட வீரராகப் புகழ் பெற்றார். அவர்தான் மைக்கேல் ஜோர்டான். பாடசாலை அளவிலேயே அவர் சோர்ந்து ஆடுவதை விட்டிருந்தால் வாழ்ந்த சுவடு தெரியாமல் அவர் போயிருப்பார். ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தக் கூடத் திராணியற்றவள் என்று கேவலமாக ஒரு கன்னியாஸ் திரியைப் பார்த்து பெரிய மதகுரு சொன்னார். தனது இயக்கத்துக்காக லொரெட்டோ கன்னி மடத்தைத் துறக்க அனுமதி கேட்ட போது தான் இந்த வார்த்தை களை அவர் கேட்க வேண்டி வந்தது. இதற்குக் கூடத் திராணியில்லாத நீ ஒரு இயக்கத்தையா வழிநடத்தப் போகிறாய் என்கிற ரீதியில் பேசப்பட்ட கன்னி யாஸ்திரி வேறுயாரும் அல்ல. கல்கத்தா வீதிகளில் பெரும் சேவை புரிந்த, நோபல் பரிசு பெற்ற அன்னை தெரேசா தான் அந்தக் கன்னியாஸ்திரி. ஒரு செய்தித்தாளில் கார்ட்டூனிஸ்டாகத் தனது வேலையை ஆரம் பித்த இளைஞருக்கு சில நாள்களிலேயே வேலை போய் விட்டது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் சொன்ன காரணம் உனக்குக் கற்பனைத் திறமையே இல்லை. அந்த இளைஞர் யார் தெரியுமா? கார்ட்டூன் உலகின் மேதை வால்ட் டிஸ்னி. அவர் உருவாக்கிய டிஸ்னி லேண்ட் என்ற பரவச உலகம் பல நாடுகளில் இன்றும் கற்பனைத் திறனின் சிகரமாகக் கருதப்படுகிறது. இப்படி உதாரணங்களால் நூற்றுக்கணக்கான பக்கங்களை ஆதாரத்தோடு நிரப்ப முடியும் என்றாலும் செய்தி இதுதான் - மற்றவர்களுடைய மோசமான கருத்துக்களைத் தீர்ப்புகளாக எடுத்துக் கொள்ளாதீர்கள். மனம் சோர்ந்து விடாதீர்கள். உங்களுக்குள் இருக்கும் உற்சாகத் தீ அணைந்து விட அனுமதிக்காதீர்கள். அப்படி அணைய விடும்போது தான் அவர்கள் கருத்து தீர்ப்பாகிறது. என்ன விடயத்தில் உங்களுக்கு அளவிட முடியாத ஆர்வம் இருக்கிறதோ, அதற்காக உழைக்கவும் நீங்கள் தயாரென்றால், அதில் நீங்கள் தாக்குப் பிடித்தால் போதும், நிச்சயமாக வெற்றியடைவீர்கள்

CMYK

# நிறங்களுக்குள் ஒளிந்திருக்கும் இரகசியங்கள்



நாம் அன்றாடம் உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரை எல்லாவற்றிலும் அதிகமான நிறங்கள் காணப்படுகின்றன. இதைப் பார்க்கும்போது எல்லோருக்குமே ஏதாவது ஒரு விடயம் மனதில் நிச்சயமாகத் தோன்றும்.

ஏனென்றால் மனிதர்களின் உணர்வுகள், மூளையின் செயற்றிறன் மற்றும் உடல் நலம் என்பவற்றுடன் நிறங்கள் தொடர்புடையதாக இருக்கின்றன.

குழந்தைப் பருவத்தில் இருந்தே நிறங்களுக்கான அர்த்தங்களைப் பாடசாலையிலிருந்தோ அல்லது பெற்றோர்கள் வாயிலாகவோ கற்றுக்கொள்கிறோம்.

உதாரணத்துக்கு சிவப்பு என்றால் அபாயம், பச்சை என்றால் பசுமையான சூழ்நிலை, வெள்ளை என்றால் சமாதானம் என ஒவ்வொரு நிறத்துக்கும் பல்வேறு அர்த்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

இதை விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால், ஒரு பொருளால் கடத்தப்படுகின்ற, தெறிக்கப்படுகின்ற ஒளியினால் கட்புலத்தால் உருவாகுகின்ற ஒரு காட்சியின் விளைவுதான் நிறம்.

ஒளி இல்லை என்றால் நிறங்கள் இல்லை, ஒளிதான் நிறங்களை உருவாக்குகின்றது. ஆனால் மனிதன் நிறங்களை உருவாக்க ஆரம்பித்ததே இயற்கையின் வாயிலாகத் தான்.

அந்தக் காலத்தில் குகைக்கால மனிதர்கள் கற்பனைகளில் தாங்கள் கண்ட காட்சிகளை சித்தரிப்பதற்காக முதலில் செம்மண்ணையே பயன்படுத்தினார்கள்.

காலப்போக்கில மரங்கள், பூக்கள் போன்றவற்றில் இருந்து எடுக்கப்பட்ட சாயங்கள் மற்றும் மரத்தின் பிசின்களைப் பயன்படுத்தி நிறங்களைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள்.



பொதுவாக அடிப்படை நிறம் என்பது நீலம், மஞ்சள், சிவப்பு என்பவற்றின் கலவை தான். வெண்மை மற்றும் கருமை நிறத்தை மட்டும் தான் தனியாகவே குறிப்பிடுகின்றனர்.

மற்றைய நிறங்கள் அனைத்தும் இவற்றின் கலப்பினாலேயே உண்டாகின்றன, ஒவ்வொரு நிறத்துக்கும் எமது வாழ்வில் ஒரு பங்கு உள்ளது.

ஒருவர் விரும்பும் நிறத்தைக்கொண்டே அவரது குணத்தையும் கணிக்க இயலும் என்பது உளவியலாளர்களின் கருத்து.

என்னதான் மனித இனம் வளர்ச்சி கண்டு விட்டாலும் தற்போது நிறத்தை வைத்தே மனிதர்களை எடைபோடும் நிலை உள்ளது. ஒன்றுக் கொன்று நேர் எதிராக கறுப்பு, வெள்ளை நிறங்களைப் பார்க்கிறார்கள். இனவெறிக்கு எதிராக என்னதான் போராட்டங்கள் நடந்தாலும் இந்த நிலை தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

இது ஒருபக்கம் இருந்தாலும் குறிப்பிட்ட நிறங்களாலான மோதிரங்களை அணிந்தால் வாழ்க்கை பிரகாசமாகும், வீட்டுக்கு குறிப்பிட்ட நிறத்தில் வர்ணம் தீட்டினால் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டே சோதிடர்களும் வலம்வந்துகொண்டுதான் இருக்கின் றார்கள்.

இவையெல்லாம் இருந்தாலும் நிறம் என்பதே அற்புதமான விடயம் தான். ஒளி, சூரிய மண்டலம், எம்முடைய கண்கள் என அனைத்தும் சேர்ந்து உருவாக்கும் ஒரு மாயம் தான் நிறம். அதை ரசிப்பதை விட்டு விட்டு தேவையில்லாத அர்த்தங்களை நிறத்தின் மேல் மனிதன் புகுத்திக் கொண்டிருக்கிறான் என்பதே நிதர்சனமான உண்மை.

# இந்துக்களின் சம்பிரதாயங்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும்

## அற்புதமான விஞ்ஞானக் காரணங்கள்





மிது

எம்மில் பலரும் மாதவிடாய்க் காலத்தில் இருக்கும் போது வீட்டிலுள்ள பூஜை அறைக்குள் நுழைந்திருப்பின் கண்டிப்பாக ஒரு முறையாவது அம்மாவிடம் திட்டு வாங்கியிருப்போம். இந்து மத மரபுகளின் படி, மாதவிலக்கு ஏற்பட்டுள்ள பெண்கள், அந்த நேரத்தில் தூய்மையற்றவர்களாகப் பார்க்கப்படு கிறார்கள். இதனால் மாதவிடாய் என்றாலே எமக்குக் கோபத் தையும் எரிச்சலையும் ஏற்படுத்தும் ஒன்றாக அமைகிறது. மரபுகளின்படி, பெண்ணின் மாரதவிடாய் காலத்தின்போது அவர்கள் கோயிலுக்கு உள்ளேயோ அல்லது வீட்டினுள் இருக் கும் பூஜை அறையின் உள்ளேயோ செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. வீட்டின் மற்ற உறுப் பினர்களை விட்டுத் தள்ளியே இருக்க வேண்டும்; கூந்தலை வாரக் கூடாது; ஊறு காயைத் தொடக் கூடாது; கண்மை அல்லது வேறு எந்த ஒரு அழகு சாதன பொருள் களையும்தொடக்கூடாது; சமலயறைக்குள் நுழையக் கூடாது; இப்படி அதிக



மான கட்டுப்பாடுகள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மாதவிடாய்க் காலத்தின் போது ஒரு எளிய வாழ்க்கையை அந்தப்பெண் வாழ்ந்திட வேண்டும்.

இந்துமதத்தின் கடைசிச் சடங்குகளில் பெண்கள் ஏன் ஈடுபடுவதில்லை? சரி, மாதவிலக்கு ஏற்பட்டுள்ள பெண்களை தூய்மையற்றவர்களாக ஏன் இந்து மதம் கருதுகிறது என்பதற்கான காரணங்கள் உங்களுக்கு தெரியுமா? இதோ சில வியப்பான தகவல்களைத் தெரிந்து கொள்ளத் தொடர்ந்து படியுங்கள்.

மகாபாரதத்தில், சதுரங்க சூதாட் டத்தில் திரௌபதியை யுதிஷ்டர் இழந்தவுடன், திரௌபதியை சபைக்கு இழுத்துவர துச்சாதனன் சென்றான். அப்போது திரௌபதி மாதவிலக்கு (ராஜஸ் வலா) காலத்தில் இருந்தாள். அத னால் ஒரு தனிமையான அறை யில் ஒரே ஒரு துணியை மட்டும் அணிந்து கொண்டிருந்தாள்.

அந்தக் காலத்தில் மாத விடாய்க் குக் கடுமையான கட்டுப் பாடுகள் இருந்துள்ளன என்று இதுவே எமக்கு எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண்ணை அவமானப்படுத்துவது மிக உயரிய பாவமாகக் கருதப்பட்டது.

கோபமடைந்த அவனது குருவான ப்ரிஹஸ்பதி சொர்க்கத்தை விட்டு வெளியேறினார். அதன் விளைவாக, இந்திர னின் அரியணையைத் தாக்கி அதனை அசுரர்கள் கைப்பற்றினார்கள். தனது தவறை உணர்ந்த இந்திரன். உதவியை நாடி பிரம்மனிடம் சென்றான். தனது குருவை குளிர்விக்க அவன் பிரம்ம கியானிக்கு பணிவிடை செய்ய வேண்டும் என இந்திரனிடம் பிரம்மா கூறினார். அதனால் பிரம்ம கியானிக்கு பணிவிடை புரிந்திட இந்திரன் சென்றான். பிரம்ம கியானி என்பவன் ஒரு அரக்கனின் புதல்வன் என்பதால், தனது தியா கத்தை கடவுளுக்கு பதில் அசுரர்களுக்குப் புகலிடமாகச் செலுத் தினான். இதனால் கோபமடைந்த இந்திரன் பிரம்ம கியா னியைக் கொன்றான்.

பூவுக்குள் ஒளிந்து கொண்ட இந்திரன் பிரம்ம கியானியை கொன்றதால், ஒரு பிராமணனைக் கொன்ற பழிக்கு ஆளா னான் இந்திரன். இந்தப் பாவம் அவன் எங்கு சென்றாலும் அவனைப் பின் தொடர்ந்ததால், அவன் ஒரு அரக்கனைப் போல் காட்சி அளித்தான். அதனால் ஒரு பூவுக்குள் ஒளிந்து கொண்ட இந்திரன், விஷ்ணு பகவானை வருடக்கணக்கில் வணங்கத் தொடங்கினான். அவன் முன் தோன்றிய விஷ்ணு பகவான், அவனை அசுரனிடம் இருந்து விடுவித்தார். இருந் தாலும் அவன் தலையில் அந்தப் பாவம் நீடித்தது.

தனது பாவத்தைப் போக்கிட மரங்கள், நிலம், தண்ணீர் மற்றும் பெண்களிடம் சென்று தன் பாவத்தை பிரித்து அவர்களையும் அதைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டுகோள் விடுத்தான்.

அதற்குப் பிரதிபலனாக ஒவ்வொருவருக்கும் வரம் அளிப்பதாக அவன் சத்தியம் செய்தான். அதனால், அவனது பாவத்தின் கால் பங்கை மரங் கள் ஏற்றுக் கொண்டன. அதனால் அவைகள் தங்கள் வேர் களில் இருந்து மீண்டும் வளரலாம் என்ற வரத்தை அளித் தான் இந்திரன். அடுத்து அவனது பாவத்தின் மற்றொரு பங்கைத் தண்ணீர் ஏற்றுக் கொண்டது. அதனால் அனைத் தையும் தூய்மைப்படுத்தும் சக்தியைத் தண்ணீருக்கு வரமாக அளித்தான். மூன்றாவதாக அவன் பாவத்தின் ஒரு பங்கை பூமி ஏற்றுக் கொண்டது. அதனால் உலகத்துக்கு எந்த ஒரு தாக்குதல் ஏற்பட்டாலும், தானாகவே சுலபத்தில் அது ஆறி விடும் என்று பூமிக்கு வரத்தை அளித்தான்.

**மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் ஏன் கோயில்களுக்குள் நுழைய முடிவதில்லை?**

கடைசியாக இந்திரனின் பாவத்தில் பங்கு போட பெண் கள் முன் வந்தனர். இதுவே மாதவிடாயில் வந்து முடிந்தது. மாதவிலக்கு காலத்தின்போது பெண்கள் தூய்மையற் றவர்களாக இருப்பார்கள். அதற்குப் பிரதி பலனாக, ஆண்களை விடப் பெண்களுக்கே அதிக பாலின இன்பம் கிடைக்கும் என்ற வரத்தை அவர்களுக்கு இந்திரன் அளித்தான். இந்திர னின் பாவத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டதால், மாதம் ஒரு முறை பெண்களுக்கு மாதவிலக்கு ஏற்படும்; ஒரு பிராமணனை (பிராம ஹாத்யா) கொன்ற பழி அவர்களை வந்து சேர்ந்தது. அதனால்த் தான் மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் நேரத்தில் அவர்களால் கோயில் களுக்குள் நுழைய முடிவதில்லை.

மாதவிலக்கு ஏற்படும்போது பெண்கள் தனிமைப்படுத்தப்படுவதற்கான முதல் கார ணம் :-

பெண்கள் சுலபத்தில் தொற்றுக்களால் பாதிக்கப்படுவார்கள். அதனால் தொற்றுக்களால் பாதிக்கப்படாமல் இருக்க அவர்கள் தனியாக வேறு அறையில் வைக்கப்பட்டார்கள். இரண்டாவதாக, மாத விலக்கு ஏற்பட்டிருக்கும் போது, வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண்கள் அனு மதிக்கப்படுவதில்லை. காரணம், இந்த நேரத்தில் பெண்களின் உடல் மிகவும் பலவீனமாக இருக்கும். அதனால் அவர்களுக்குப் போதிய அளவிலான ஓய்வு அவசியம். அதனால் தான் வீட்டு வேலைகளில் ஈடுபடாமல் அவர்கள் ஓய்வு அறையில் இருக்க அறிவுறுத்தப்பட்டிருக் கிறார்கள்.

மேலும் மற்றவர்களிடம் இருந்து விலகி இருக்கவும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டி ருக்கிறார்கள். அதற்குக் காரணம், மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் காலத்தில், பெண்களின் உடலில் இருந்து எதிர்மறையான ஆற்றல் திறன் உருவாகும். இது அவர்களை சுற்றியுள்ளவர்களின் மீது தாக்கத்தை உண்டாக்கும்.

**திரிக்கப்பட்ட மரபுகள்?**

பெண்களின் ஆரோக்கியத்தை மனதில் கொண்டு, சில மாத விடாய் மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவைக ளில் பல மரபுகள் மூட நம்பிக்கைகளாக விளங்கியுள்ளன. உதாரணத்துக்கு, மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் பெண் ஊறுகாய்ச் சாடியைத் தொட்டால், அது கெட்டுப் போய்விடும்.

இந்தக் காலத்தில் பெண்களைத் தனிமைப்படுத்துவதால் அவர்கள் ஒன்றும் தீண்டத்தகாதவர்கள் அல்ல. மாதவிலக்கு என்பது ஆரோக்கிய மான பெண்ணின் அறிகுறியாகும். இது ஒன்றும் அவமானப் படும் விடயமே அல்ல. வெறுமனே மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பெண்ணின் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டு வரக்கூடாது. அப்படிச் செய்வது அவர்களை அவ மானப்படுத்தும் விதமாக அமையும்.

**மாதவிலக்கு ஏற்படும் போது வழிபாட்டில் ஈடுபடலாமா?**

இதற்கு ஒரு எளிய பதில் உள்ளது. நீங்கள் நல்லதையும் நினைக்கலாம், கெட்டதையும் நினைக்கலாம்; இனிமையாக வும் பேசலாம், கடுமையாகவும் பேசலாம்; சந்தோஷத்தையும் வெளிப்படுத்தலாம், வருத்தத்தையும் வெளிப்படுத்தலாம். அதே போல் தான், எந்த ஒரு நிலையிலும், உங்களுக்குப் பிடித்த எந்த முறையிலும் நீங்கள் கடவுளை வணங்கலாம். கடவுள் விக்கிரகத்தைத் தொடுவதற்கு மரபுகள் தடை போட்டாலும் கூட, கடவுளின் பெயரை உங்களது மனதில் ஜெபிக்கலாம். உடல் ரீதியான நிலைகள் ஆன்மிகத்தை மாசுப்படுத்தாது.

காலத்தின் மாற்றங்கள் நாகரிக உலகை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கும் இந்த வேளையில், மாதவிடாய் கட்டுப்பாடுகள் மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்துக்கு, மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் காலத்தில் வேலை பார்க்கும் பெண்ணை வீட்டில் இருக்கச் சொல்லி, உலகத்தை விட்டு அவர்களைத் தனிமைப்படுத்த எதிர்ப்பார்ப்பது நடக்காதல்லவா? மாதவிலக்கு ஏற்பட்டிருக்கும் போது, இப்போது கூட, பெண்கள் கோயில்களுக்கு செல்லவோ, பூஜைகள் செய்யவோ அனுமதிக் கப்படுவதில்லை. இருப்பி னும் சமுதாய தனிமைப் படுத்துதல் மற்றும் அவ மானங்கள் இப்போது நடப் பதில்லை. எமது மகள்மார் இன்னும் சிறந்த உலகத்தில் நிம்மதிப் பெருமூச்சு விடலாம் என் றும், மாத விலக்கை எண்ணி அவமானப்பட வேண்டாம் என்றும் நாம் நம்பிக்கை கொள்ளலாம். காரணம் மேற்கூறிய அனைத் துக்கும் மேலாக மாதவிடாய் என்பது ஆரோக் கியமான பெண்ணுக்கான அறிகுறி யாகும்.

